கோகுலம்

GOKULAM


ஜூலை '98 ரூ. 6.00




இந்த இதழில்...

- கோலப் போட்டி அறிவிப்பு
- வண்ண லேபில்கள் இலவசம்
- புதிய சித்திரத் தொடர்கதை

மறைந்திருக்கும் பொருட்கள் என்னென்ன?



இப்படத்தின் மறுபாதியை வரையுங்கள்!





காகம் 1 : ஏன் நீ மட்டும் மிளகாய் வற்றலைத் தொட மாட்டேன்கிறே?

காகம் 2 : எனக்கு அல்சர் இருப்பதால் காரத்தையே தொடக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார்!

– மு. தனகோபாலன், மன்னார்குடி.

கல்நார் (Asbestos) என்பது என்ன?

நிலத்தினின்று வெட்டி எடுக்கப்படும் கல் போன்ற உலோகப் பொருள். இது நார், நாராகப் பிரியும். தீப்பிடிக்காது. ஆடையாக நெய்து தீ அபாயமுள்ள இடத்தில் வேலை செய்வோர் பயன்படுத்துவர். அமிலத்தால் பாதிக்கப்படாது. ஆகவே இரசாயனக் கூடத்தில் மேசையின் மேல் கல் நார் தகடுகள் பதிக்கப்படுகின்றன.

– இ. பிரேமா, சென்னை.





பிருந்தாவனம்





கோகுலம்

ஜூலை 1998
மலர்:16 இதழ் : 6

அன்பார்ந்த சிறுவர், சிறுமியரே!

கேரளத்தில் குருவாயூரப்பன் கோயிலுக்குச் சொந்தமான யானைகள் பல உண்டு. அவற்றைப் பராமரிக்கவும் பயிற்சி அளிக்கவும் பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை லட்ச தீபம் வரும். அதற்குப் பந்தல் போடுவார்கள். முதலில் பந்தற்கால் முகூர்த்தம் நடக்கும். முதல் பந்தல் காலை ஒரு யானை தூக்கி வந்து அதற்காகத் தோண்டப்பட்டுள்ள குழியில் செங்குத்தாக நிறுத்தும்.

வழக்கம் போல அந்த ஆண்டும் யானை வந்தது. ஆனால் பந்தல் காலை நட மறுத்துப் பின்வாங்கியது. கோயில் நிர்வாகிகளும் பக்தர்களும் துணுக்குற்றார்கள். 'அபசகுனமோ' என்று அஞ்சினார்கள்.

யானைப் பாகன் ஒருவர் யானையை நெருங்கி, தட்டிக் கொடுத்து மறுபடி பந்தல் கால் நடத் தூண்டினார். யானை சற்று முன்னேறி, மீண்டும் பின்வாங்கியது. யதேச்சையாக அப்போது யானைப் பாகன் குழிக்குள் பார்த்தார். அந்தக் குறுகிய குழியில் ஒரு பூனைக்குட்டி விழுந்து மேலே ஏறி வர முடியாமல் தவிப்பதைக் கண்டார்!

'அடடா! அபசகுனம் என்று எண்ணினோமே! யானை பந்தல் கால் நட்டிருந்தால்...! தெய்வத்துக்கு அபசாரம் செய்ததாக அல்லவா ஆகியிருக்கும்!' என்று எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். யானைக்கு மாலை மரியாதை செய்து வணங்கினர்.

இந்த உண்மைக் கதையை எனக்குச் சொன்னவர் யார் தெரியுமா? செம்மங்குடி தாத்தா! ஆமாம், பிரபல பாடகரும் இன்று 90 வயதை எட்டிப் பிடித்திருப்பவருமான செம்மங்குடி சீனிவாச அய்யர்தான்!


இந்த இதழ் முதல் கோகுலத்தின் விலை ரூ.6 என்று சென்ற இதழில் அறிவிப்பு வந்ததிலிருந்து பல அன்பர்கள் 'கோகுலம் மிகச் சிறந்த பத்திரிகை; அதனால் ஒரு ரூபாய் விலை உயர்வு என்பது பெரிய விஷயமே அல்ல' என்று உற்சாகப்படுத்தி கடிதம் எழுதி வருகிறார்கள். சிலர், 'விலை உயர்வோடு பக்கங்களையும் கூட்டியிருக்கலாமே' என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

விலை உயர்வுக்கு முக்கிய காரணமே பத்திரிகைக் காகிதத்தின் விலை ஏற்றம்தான் என்னும்போது எப்படி கூடுதல் பக்கங்கள் தர முடியும்?

கோகுலத்தின் விலை உயர்வை பல மடங்கு ஈடு செய்யும்விதமாக இந்த இதழிலிருந்து அருமையான புதிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. புதிய சித்திரத் தொடர் கதை, கோலப் போட்டி அறிவிப்பு என்று பல. இலவச லேபில்கள் வேறு! உற்சாகமான வரவேற்பு அளிப்பீர்கள் என்பது நிச்சயம்.

அன்புடன்,

(கி. ராஜேந்திரன்)
ஆசிரியர்.




உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்

ஜூலை 1998

இந்த இதழில்...





கோலம்

நம் நாட்டில் சிறப்புற வளர்ந்துள்ள வீட்டுக் கலைகளில் ஒன்று 'கோலம்'. கோலம் என்ற சொல்லுக்கு 'அழகு' என்று பொருள்.

கோலம் போடும் வழக்கம் நம் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

மராட்டிய, கன்னட மக்கள் கோலத்தை 'ரங் கோலி' என்றும் வங்காள மக்கள் 'ஆல் போனா' என்றும் அழைக்கின்றனர்.

பொதுவாக காலையிலும், மாலையிலும் கோலம் இடுவது வழக்கம். திருவிழா, பண்டிகை, திருமணம் போன்ற விசேஷக் காலங்களில் வீட்டின் உட்புறத்திலும், தெருக்களிலும் கோலம் போடுவர். அக் கோலங்களுக்கு ஏற்றவாறு செம்மண் இடுவதும் உண்டு. தற்போது பல வண்ணப் பொடிகளால் கோலத்தை இட்டு அழகு சேர்க்கின்றனர்.

நம் நாட்டின் வட மாநிலங்களில் சுவர், தரை, பானை போன்றவற்றில் ரங்கோலி வரைந்து வைத்திருப்பார்கள்.

கோலங்களில் புள்ளிக் கோலம், கோட்டுக் கோலம், நெளிவு கோலம், சதுரக் கோலம், வட்டக் கோலம், பின்னல் கோலம் எனப் பல வகை உண்டு.

கோலமிடுதலை பெரியவர்களிடமிருந்து குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். தலைமுறை தலைமுறையாக இவ்வாறு கற்றே இக் கலை நிலைத்து நிற்கிறது.

பறவைகளும் எறும்புகளும் சாப்பிடுவதற்காக அந்தக் காலத்தில் அரிசி மாவைப் பயன்படுத்தி கோலமிட்டனர். இன்று வெண்கற் பொடியை கோலமாவாகப் பயன்படுத்துகின்றனர்.

கோலமிடுதல் மூலம் கலை உணர்வு வெளிப் படுகிறது. கணிதம், சித்திரக்கலை முதலிய வற்றை பயிலவும் உதவுகிறது.

வீட்டு வாசல் நிறைய பெரிய கோலங்கள் போட்டிருப்பதைப் பார்க்கும் போது மிகவும் அழகாக இருக்கும். இன்று அவசர யுகத்தில் கோலம் என்பது சம்பிரதாயத்திற்கு போடும் கலையாகி விட்டது. அதிலும் அடுக்குமாடிக் கட்டிடங்கள் என்றால் கேட்கவே வேண்டாம்! இடமே இருக்காது. இன்று கோல ஸ்டிக்கர்கள் கூட விற்பனையாகின்றன.

கோலம் போடுவதற்கு பொறுமையும் கற்பனை உணர்ச்சியும் இருந்தால் போதும். புதிய கோலங்களை உருவாக்கிட முடியும்.

பெண் குழந்தைகள்தான் இக் கோலப் போட்டியில் பங்கு பெற வேண்டும் என்பதில்லை. ஆண் – பெண் குழந்தைகள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

போட்டி இதுதான். உங்கள் கற்பனைக்கேற்றபடி கோலங்களை கறுப்பு மையில் வரைந்து அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் தேர்வு பெற்ற கோலங்கள் வெளியாகும். பிரசுரமாகும் கோலங்களுக்குப் பரிசும் உண்டு. வண்ணக் கோலங்கள் பிரசுரமானால் சிறப்புப் பரிசு! கோலம் போடும் கோலாகலத்திற்குத் தயார்தானே!

அட்டையில் : **ஸ்ரீபிரியா கணேஷ்**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

ஐம்பது ரூபாய்க்கு ஒரு கப்பல்!



முட்டாள்கள்

கோவிந்தனும், ஆனந்தனும் நண்பர்கள். இருவரும் பெரும் செல்வந்தர்கள். ஒரு நாள் மாலை இருவரும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னிடம் இவ்வளவு பணம் இருந்தும் என்ன பிரயோஜனம்! ஒரு புத்திசாலி வேலைக்காரன் கிடைக்கவில்லையே" என்று வருத்தப்பட்டார் கோவிந்தன்.

"உனக்காவது பரவாயில்லை. என் வேலைக்காரன் வடிகட்டின முட்டாள்" என்றார் ஆனந்தன்.

"சரி, நம்ம ரெண்டு பேரும் வேலைக் காரர்களுக்கு ஒரு பரீட்சை வைப்போம்" என்றார் கோவிந்தன். ஆனந்தனும் சம்மதித்தார்.

வேலைக்காரர்கள் இருவரையும் அழைத்தனர்.

கோவிந்தன் தன் வேலைக்காரனிடம் "இந்த ஐம்பது ரூபாய்க்கு ஒரு கப்பல் வாங்கிட்டு, சீக்கிரமா வா" என்றார்.

"சரிங்க ஐயா" என்றான் வேலைக்காரன்.

ஆனந்தனும் தன் வேலைக்காரனிடம் "நூறு கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் உள்ள மலையைக் கட்டி இழுத்துட்டு வந்து நம்ம தோட்டத்திலே வை" என்றார்.

"இப்பவே கிளம்பறேன்" என்றான் வேலைக்காரன்.

ஆனந்தனும் கோவிந்தனும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

பங்களாவை விட்டு வெளியே வந்த இரு வேலைக்காரர்களும், "எங்க ஐயா சரியான முட்டாள். இன்னிக்கு கடையெல்லாம் விடுமுறை. கப்பல் வாங்கிட்டு வரச் சொல்கிறார் பாரேன்" என்றான்.

இன்னொருவன், "அவராவது தேவலை. அந்த மலைப் பக்கம்தான் எங்க ஐயாவோட தம்பி இருக்கார். அவருக்கு போன் செய்து சொன்னால் போதும். இங்கிருந்து போகிற நேரமும் செலவும் மிச்சமாகுமே" என்றான்.

— வி.ஆர். கிருத்திகா, திருச்சி - 14.

வானம் பொதுவே!

விதர்ப்ப தேச மன்னன் பழனி ராசனின் அவைப்புலவர் கண்ணப்பக் கவிராயர் சிறந்த அறிவாளியாவார். நல்ல நீதிமானுமாவார். அவர் ஆண்ட சிற்றூரே தேவகோட்டையாகும். அங்கு ராமன், சோமன் என இரு சகோதரர்கள் இருந்



தனர். அவர்களது தந்தை பரமன் பெரிய செல்வந்தர்.

அவர் இறந்த பின் அண்ணன் ராமன் தம்பி சோமனிடம், "எங்காவது உனக்கு விருப்பப்பட்ட இடத்தில் சிறிது நிலம் எடுத்துக் கொள்" எனக் கூறினான். தம்பியும் 'நம் அண்ணன்தானே, அவனே அனைத்து நிலங்களையும் எடுத்துக் கொள்ளட்டும். நாம் நிலத்தின் நடுவே உள்ள கிணற்றையும் அதை ஒட்டி உள்ள நிலத்தையும் எடுத்துக் கொள்வோம்' என்று நினைத்து அந்த சிறு நிலத்தையும் அதற்கு வரும் வழியையும் எடுத்துக் கொண்டான். அண்ணன் சிறிது நாட்களில் தம்பியைத் தேடி வந்தான்.

"தம்பி நான் நம் நிலத்தில் உணவு விடுதி கட்டப் போகிறேன். ஆகவே உன்



நிலத்தை எனக்குத் தந்து விடு. நான் அதற்கு நல்ல விலை தருகிறேன்" என்றான். அதற்கு தம்பி, "அண்ணா நான் இப்பொழுதுதான் என் நிலத்தில் விதை விதைத்துள்ளேன். விதைத்த பயிரை அழித்தலாகாது. எனவே நான் அறுவடை செய்த பின் உனக்கு என் நிலத்தை தருகிறேன்" என்றான். அண்ணனும் சென்றுவிட்டான்.

அண்ணன் சிறிது நாட்கள் கழித்து தம்பியின் நிலத்திற்கு அருகில் தூண்கள் எழுப்பி அதன் மேல் கட்டடங்களைக் கட்டினான். தம்பி அண்ணனிடம்,"அண்ணா இவ்வாறு என் நிலத்தின் மேல் கட்டடங்கள் கட்டினால் என் பயிர்கள் வெயில் மழையின்றி மடிந்து விடுமே" என்று வருந்திக் கூறினான். அதற்கு அண்ணன், "தம்பி நான் உனது நிலத்தில் விடுதி கட்டவில்லை. உன் நிலத்திற்கு மேல் உள்ள ஆகாயம் அனைவர்க்கும் பொதுவே" என்றான்.

இதைக் கேட்ட தம்பி கண்ணப்ப கவிராயரிடம் சென்று ஆலோசனை கோரினான். அதற்கு கவிராயர் ஓர் ஆலோசனை வழங்கினார். அதன்படி விடுதியை இடிக்கச் சென்றான் தம்பி. இதைப் பார்த்து பதறிய அண்ணன், "ஏன் இடிக்கிறே?" என்றான். வானம் பொதுதானே! என் நிலத்துக்கு சூரியன் வேணும். அதான் இடிக்கிறேன்" என்றான்.


இதைக் கேட்ட அண்ணன் மனம் திருந்தி அவன் பணியாளர்களைக் கொண்டே தம்பியின் நிலத்தின் மேல் உள்ள கட்டடத்தை அகற்றினான்.

— சித. விசுவநாத்

"எறும்புகள் சினிமா எடுத்தா யார் டைரக்ட் பண்ணுவா?"


"கட்'டெறும்பு தான்!"

— நெ. இராமன்



சீனப் பெருஞ் சுவர்!

கட்டடக் கலை வரலாற்றிலேயே மிகவும் பிரசித்தி பெற்று முக்கிய இடம் வகிப்பது சீனப் பெருஞ்சுவர். கி.மு 220 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. வட சீனாவில் உள்ள சிற்றரசர்கள் தற்காப்பிற்காக முதலில் எழுப்பப்பட்டது. மங்கோலியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நாட்டின் பாதுகாப்பிற்காக சீன அரசர் சின்-ஷி-ஹுவாங்-டி என்பவர் பல கிராமத்து மக்களையும், வீரர்களையும், தண்டனை பெற்ற குற்றவாளிகளையும் கட்டாயப் படுத்தி



ஒரு படையைத் திரட்டினார். இந்தப் படை சீனப் பெருஞ்சுவர் எழுப்புவதில் ஈடுபடுத்தப்பட்டது.

இது பாம்பைப் போன்று மலைகள், பாலை வனங்கள், சதுப்பு நிலங்கள் இடையே வளைந்து வளைந்து செல்கிறது. மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இதைக் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 'சீனப் பெருஞ்சுவர்', 'வான்' என்ற பெயர் உள்ள மனிதனையோ அல்லது பத்தாயிரம் மக்களையோ புதைக்காவிட்டால் நிலைத்திருக்காது' என்று அரசனுக்கு ஒரு மந்திரவாதி கூறினாராம்.

எனவே அரசரும் 'வான்' என்ற பெயர் உள்ள ஒருவனை கண்டுபிடித்து கொன்று புதைத்ததாக ஒரு கட்டுக்கதையும் உண்டு. ஆனால் உண்மையிலேயே இதில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து போயிருக்கின்றனர். இதனாலேயே இது 'உலகத்தின் நீளமான மயானம்' என்றும் 'கண்ணீர் சுவர் (wall of tears) என்றும் அழைக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகள் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் இது பாழடைந்தது. சூய் அரசவம்சம் கி.பி. 607ஆம் ஆண்டு இதை புதுப்பிப்பதற்கான பணிகளை மேற்கொண்டது. இறுதியாக 15ஆம் நூற்றாண்டு மிங் அரச வம்சம் காலத்தில் இது முழுமை அடைந்தது.

சீனப் பெருஞ்சுவரில் சுற்றுப் பயணம் மேற்கொள்பவர்கள் பாதாலிங் என்னும் இடத்தில் உள்ள மிங் கல்லறைகளை காண்பதற்கு தவறுவதில்லை. மிங் அரச வம்சம் சீனாவை 1368 முதல் 1644 ஆம் ஆண்டு வரை ஆண்டது. இங்கு 13 மிங் அரசர்களின் கல்லறைகள் உள்ளன. இக் கல்லறைகள் சீனர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லறைகளைச் சுற்றி அதீத சக்தி வலம் வருவதாக நம்பப் படுகிறது. இங்கு 1905 ஆம் ஆண்டு நடந்த தொல்பொருள் ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட பொக்கிஷங்கள் ஒரு கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

பெய்ஜிங்கின் வடகிழக்கே உள்ள போஹை (Bohai) கடலின் அருகே ஆரம்பம் ஆகும் இந்தச் சுவர் வட சீனாவிற்கு குறுக்காகவும், கோபி பாலைவனம் வழியாகவும் நீடிக்கிறது. இப் பெருஞ்சுவரின் நீளம் 3, 946 மைல்கள், உயரம் 30 அடி, இதிலுள்ள கண்காணிப்பு கோபுரங்கள் சுமார் 40 அடி உயரத்தில் உள்ளன. இயந்திரங்களின் உதவியின்றி அந்தக் காலத்திலேயே கட்டப்பட்ட இச் சுவர் இன்றும் உறுதியாக நிலைத்து நிற்பது ஆச்சர்யம்தானே!

இது விண்ணில் இருந்து பார்க்கும்போது தெரியும் மனிதப்படைப்புகளில் குறிப்பிடத்தக்கது.

— லதா, பெருங்களத்தூர்.



சுதந்தரம்

குருவி ஒன்று வந்ததாம்
குதித்து குதித்துச் சிரித்ததாம்,

மிருக சாலை பார்க்கவே
மிகவும் ஆசை கொண்டதாம்.

பஞ்ச வர்ண நிறத்திலே
பத்து கிளிகள் இருந்ததாம்,

பாவம் வெளியில் சென்றிட
பறக்க முயற்சி செய்ததாம்.


பழமும் நீரும் இருக்குதே
பாக்கியம் செய்த கிளிகளே!

சோறு மட்டும் போதுமா?
சுதந்தரம் இங்கு இல்லையே!

ஒன்று மட்டும் நிச்சயம்,
உலகில் சுதந்தரம் அவசியம்.

— ஆர்.ஏ. செந்தில் ஆனந்தி,
செட்டிபாளையம்

விளம்பரம் செய்யுங்கள்!




கோகுலத்தில் விளம்பரம்; வியாபாரம் அமோகம்!

- குழந்தைகளுக்கான கதை புத்தகங்கள், ரெடிமேட் ஆடைகள், ஸ்கூல் யூனிஃபார்ம், காலணிகள், பேனா - பென்சில், ஐஸ்கிரீம், பிஸ்கட், சாக்லேட், குளிர்பானம் போன்ற பல வகையான பொருள்களை கோகுலத்தில் விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.
- விளம்பர கட்டணத்தில் சலுகை உண்டு.
- ஆங்கிலம், தமிழ் இரு கோகுலம்களிலும் விளம்பரம் செய்தால் விளம்பர விகிதங்களில் சலுகை உண்டு.
- ஒவ்வொரு கோகுலம் பிரதியும் பல நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஐந்து லட்சம் வாசகர்களை உடையது கோகுலம்.
- விளம்பர விகிதங்களுக்கு எழுதுங்கள்.

விளம்பர மானேஜர்

கோகுலம்

47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97.



கங்கை ஆற்றங்கரையில் ஒரு ஆசிரமம். அதில் ஒரு முனிவர். அவருக்கு இரண்டு சீடர்கள். ஒருவன் மதன். அவன் மிகுந்த அறிவுள்ளவன். பணிவும் நேர்மையும் மிக்கவன். இன்னொருவன் சுதன். அவன் ஒரு முட்டாள். கர்வம் மிக்கவன்.

ஒரு நாள் அவர்களிடையே ஒரு சர்ச்சை. சுதன் சொன்னான்: "உலகின் மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்தது செல்வம்தான்."

அதற்கு மதன் "கிடையவே கிடையாது; அறிவு தான் உயர்ந்தது" என்றான்.

இருவருக்கும் இடையே பேச்சு முற்றியது. கடைசியில் இருவரும் முனிவரிடம் போனார்கள். நல்ல தீர்ப்பு வேண்டினர். முனிவர் இருவர் சொன்னதையும் கேட்டார். பிறகு, "கொஞ்ச நாள் பொறுமையாக இருங்கள்... நல்ல தீர்ப்பு தானாகத் தெரியவரும்" என்றார்.

நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் சுதனின் அண்ணன் முனிவரைப் பார்க்க ஆசிரமத்துக்கு வந்தார். முனிவரிடம் அவர், "ஐயா! என் தந்தை மிகவும் நல்லவர். தவறு செய்யப் பயப்படுவார். யாரோ என்னவோ சொன்னார்கள் என்பதற்காக, நம் நாட்டு அரசனின் வீரர்கள், அவர் மீது பொய்க் குற்றம் சுமத்தி, சிறையில் அடைத்து விட்டனர். மன்னர் அவருக்கு மரண தண்டனை விதித்திருக்கிறார். நாளை அதிகாலையில் நிறைவேறும்" என்றார்.

"அப்படியா...?" என்ற முனிவர், கேட்டார்: "உன் தந்தையை விடுவிக்க நீ முயற்சி எதுவும் செய்யவில்லையா?"

"எவ்வளவோ செய்து பார்த்தேன். காசு, பணத்தை வாரி இறைத்தேன். ஒரு பயனும் இல்லை. எல்லாம் வியர்த்தம்" என்றார் அவர்.

அப்போது, அருகில் இருந்த சுதனிடம் மதன் "பார்த்தாயா சுதன்? பணத்தால் உன் தந்தையை விடுவிக்க இயலவில்லை... இப்போதாவது ஒப்புக் கொள்கிறாயா? அறிவுதான் உயர்ந்தது..." என்றான்.



உயர்ந்தது எது?

உடனே சுதன் ஆத்திரப்பட்டான். "அப்படியானால், நீ போய், உன் அறிவைப் பயன்படுத்தி என் தந்தையைக் காப்பாற்றி வா பார்க்கலாம்!" என்று சவால் விட்டான். மதன் அதை ஏற்றுக் கொண்டான்.

பிறகு மதன் முனிவரிடம், "ஐயா, நான் இவருடன் போய் சுதனின் தந்தையை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றி அழைத்து வருகிறேன்..." என்றான்.

மதனின் புத்தி கூர்மை மீது, முனிவருக்கு முழு நம்பிக்கை. எனவே, அவர், "சென்று வா... இப்போதே புறப்படு. வெற்றியோடு திரும்பி

ஜானகிமணாளன்

வா..." என அனுப்பி வைத்தார்.

சுதனின் அண்ணன்- மதன் இருவரும் அரசனைக் காணச் சென்றனர். அப்போது சபை கூடியிருந்தது.

"யார் நீ? என்ன வேண்டும்...?" என்றார் அரசர்.

அதற்கு மதன், "அரசே! எனக்கு நவரத்தினங்கள் விளையும் வயலை உருவாக்கத் தெரியும். அனுமதி தந்தால் உருவாக்கித் தருகிறேன்...." என்றான்.

அரசனிடம் மட்டற்ற மகிழ்ச்சி. "உடனே அந்த வயலை உருவாக்கித்தா, அதற்கு உனக்கு என்ன வேண்டும்...?"

"அரசே! எனக்கு ஒரு வயலும், அதை உழுவதற்கு ஒரு ஆளையும் தாருங்கள். அந்த ஆள் குற்றம் ஏதும் செய்யாதவனாக இருக்க வேண்டும். ஆனால், தவறுதலாகத் தங்களால் தூக்கு தண்டனை வழங்கப்பட்டவனாக இருக்க வேண்டும்" என்றான் மதன்.

உடனே அரசர் அமைச்சரிடம், "அப்படிப்பட்டவன் இருக்கிறானா நம்மிடம்?" என்றார்.

சற்று யோசித்த அமைச்சர், "ஒருவன் இருக்கிறான். 'தான் குற்றம் ஏதும் செய்யவில்லை; ஆனால், தனக்குத் தவறுதலாக மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது' என்று அவன் புலம்பிக் கொண்டிருக்கிறான். அவன் கூறுவது உண்மை போல்தான் தோன்றுகிறது" என்றார்.

"அப்படியானால், அவனை உடனே அழைத்துவா..." என்றார் அரசர். சுதனின் தந்தை அழைத்து வரப்பட்டார். அவரிடம் அரசன், "உன் தண்டனை நிறைவேற்றத்தை ஒருநாள் தள்ளி வைக்கிறேன். இப்போதே நீ



போய், இவன் காட்டும் வயலை நன்றாக உழுதுவிட்டு வா" என்றார்.

மதனுடன் சென்று, அவர் வயலை உழுது கொண்டிருக்கும் போது, அரசர் அங்கு வந்தார். அவரிடம் மதன், "அரசே! இவனுக்குத் தவறுதலாகத் தூக்கு தண்டனை வழங்கப்பட்டு விட்டது என்று நீங்களே சொல்கிறீர்கள். அப்படியிருக்க, நிரபராதியான இவனை இனியும் கொல்வது நியாயம் ஆகுமா...?" என்றான்.

உடனே அரசர், "அட... ஆமாம்...! இவனை ஏன் கொல்ல வேண்டும்? இவன்தான் நிரபராதி ஆயிற்றே! இப்போதே மரண தண்டனையை ரத்து செய்கிறேன்..." என்றார்.

சுதனின் தந்தை விடுதலை செய்யப்பட்டார்.

பிறகு அரசர், "சரி... வயல்தான் நன்கு உழப்பட்டு விட்டதே! இனி என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

"ஒரு படி நிறைய நவரத்தினங்களை வரவழையுங்கள். வயலில் தூவி விதைத்து விடலாம்..." என்றான் மதன்.

நவரத்தினங்கள் வந்தன. கூடவே அரசன், "ம்... தாமதப்படுத்தாதே.... விரைவாக ரத்தினங்களை வயலில் தூவு..." என்றார்.

அதற்கு மதன் தயக்கத்துடன், "தூவி விடலாம்... ஆனால்... அரசே! குறிப்பிட்ட சிலர்



கையால் விதைத்தால்தான், ரத்தினங்கள் முளைக்கும்...'' என்றான்.

''யார் அந்தக் குறிப்பிட்டவர்கள்? உடனே சொல். அழைத்து வரச் சொல்கிறேன்...'' என்றார் அரசர்.

''அந்தக் குறிப்பிட்டவர் நீங்களாகக் கூட இருக்கலாம்...''

''நானா...? புரியவில்லையே...''

''தன் வாழ்நாளில், எவனொருவன் ஒரு பொய் கூடச் சொல்லியதில்லையோ, அத்தகையவன் கையால் விதைத்தால்தான் ரத்தினங்கள் முளைக்கும். நீங்கள் இந்த நாட்டின் அரசர். எதற்குப் பொய் சொல்லியிருக்கப் போகிறீர்கள்? எனவே, நீங்களே விதைத்து விடுங்கள்'' என்றான் மதன்.

அரசருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'நான் பொய்யே சொல்லாதவனா...?' அரசன் யோசித் தான். பிறகு மெல்ல, ''ம்.... நான் சிறுவனாக இருந்த போது, ஒரே ஒரு தடவை பொய் சொல்லி இருக்கிறேனே...! என்ன செய்வது?'' என்றார்.

''அப்படியானால்... ராணியை அழையுங்கனேன்...''

ராணி அழைத்து வரப்பட்டாள்....'' நீ பொய்யே சொல்லாதவளா...?''

உடனே அவள், ''நானா? ம்... நானும் இரண்டு மூன்று தடவை பொய் சொல்லியிருக்கிறேனே!'' என்றாள்.

பிறகு அமைச்சர்கள் வரவழைத்துக் கேட்கப்பட்டனர். அரண்மனை வேலையாட்கள் எல்லாம் அழைக்கப்பட்டனர். பொய்யே சொல்லாதவர் ஒருவர் கூட இருக்கவில்லை.

அதைக் கண்ட அரசர் மதனிடம், ''சரி... வீணில் ஏன் எல்லாரையும் போய்க் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நீ எப்படிப்பட்டவன்? பொய்யே சொல்லாதவன்தானே? நீயே விதைத்து விடேன்...'' என்றார்.

அதற்கு மதன், ''நானும் ஒரே ஒரு தடவை பொய் சொல்லி விட்டேன் அரசே! அதுவும், உங்களிடமே!'' என்றான்.

''என்னிடமேயா?'' அரசனிடம் வியப்பு.

''என்ன அது?''

''ஆம் மன்னவா!'' என்ற மதன், ''உண்மையில் நவரத்தின வயல் என்று ஒன்று கிடையவே கிடையாது... அவற்றை விதைக்கவும் முடியாது... விதைத்தாலும் அவை முளைக்காது. நான் சொன்னதெல்லாம் சுத்தப் பொய்...'' என்றான்.

அதைக் கேட்ட அரசர், ''ஏன் இப்படிப் பொய் சொன்னாய்...?'' என்றார்.

''தவறே செய்யாத இவருக்குத் தாங்கள் தூக்கு தண்டனை விதித்து விட்டீர்களே... இப்படியெல்லாம் பொய் சொன்னால்தானே இவரை நான் காப்பாற்ற முடியும்...? எனவே தான், பொய் சொன்னேன்...'' என்று உண்மையை உரைத்தான் மதன்.

உடனே அரசனுக்கு கடும் கோபம் வந்தது. ''என்னிடமே பொய் உரைத்ததற்கு உனக்கு என்ன தண்டனை தெரியுமா?''

''தெரியும்...'' என்ற மதன், ''பொய்யே சொல்லாதவர் இந்த உலகில் ஒருவர் கூட இல்லாத போது, நீங்கள், உங்கள் ராணி, அமைச்சர்கள் இன்னும் வேலையாட்கள் அனைவரும் தாம் சொன்னதாகக் கூறிய பொய்க்கு என்ன தண்டனையோ, அந்தத் தண்டனைதான் எனக்கும். அதனை ஏற்க நானும் தயார். ஆனால் ஒன்று... அவர்களையெல்லாம் தண்டிக்காமல் என்னை மட்டும் தாங்கள் தண்டிக்க முயல்வது அநியாயம். அப்படிச் செய்வது, மக்கள் மனத்தில் நீங்கள் இதுவரையில் பெற்றுள்ள மதிப்பைக் குறைத்துவிடும்... பரவாயில்லை என்றால், என்னை இப்போதே தண்டியுங்கள்... அதை ஏற்கத் தயாராக உள்ளேன்...'' என்றான்.


மதனின் நியாயமான இந்த வாதம், அரசரின் கண்களைத் திறந்து விட்டது. ''நீ சொல்வது மிகவும் சரி... உனக்கு இனி நான் தண்டனை வழங்க மாட்டேன். அதற்குப் பதில் வழங்கப் போவது என்ன தெரியுமா...?'' என்ற அரசர், வயலில் தூவி விதைப்பதற்காகக் கொண்டு வரச் சொல்லியிருந்த அத்தனை நவரத்தினங்களையும் மதனுக்கே பரிசாக வழங்கி விட்டார்.





ஜப்பான் நாட்டின் தேசிய கீதம் நான்கே வரிகளைக் கொண்டது.''

— 'உலகச் செய்திகள் 1000'

தகவல் : பி. ராஜசேகரன்


அன்று மாலை~
என்னடா ஹரி ஒருமாதிரியா இருக்கே?
பள்ளிக்கூடத்தில் மாறுவேடப் போட்டி நடத்தப் போறாங்க... நானும்...
கலந்துக்க வேண்டியது தானே..
என் பணக்கார நண்பர்கள் பலர் கலந்துக்கறாங்க...
துணி, மணி, மேக்-அப் என்று பயங்கரமா செலவு செய்வாங்க.
செலவழிச்சாத் தான் மாறுவேடம் நல்லா இருக்கும்னு ஒண்ணும் கிடையாது.
உனக்குத் தெரியாதும்மா. அவங்க எல்லாம் கச்சிதமான மேக்-அப் பண்ணிக்கிட்டு வருவாங்க!
உன் நடிப்புத் திறமையால்கூட உனக்கும் பரிசு கிடைக்கலாமே!
அப்படியா?
மாறுவேடப் போட்டி
கதை: ஜமதக்னி படம்
தன்னம்பிக்கைதான் உனக்கு வெற்றியைத் தேடித் தரும்!
நாளைக்கே பேர் கொடுத்துடறேம்மா!


போட்டிக்குப்பேர் கொடுத்து விட்டு வந்த ஹரியிடம்~
உனக்கு ஏண்டா இந்த ஆசை?
உன்னால செலவு பண்ணிக் கட்டுப்படியாகுமா?
வீட்டில்~
எல்லாரும் கேலி செய்யறாங்கம்மா...
அதைப் பற்றிக் கவலைப் படாம உன் எண்ணத்தில் உறுதியாய் இரு.
சரிம்மா!
அடேயப்பா.. பொய்க்கால் குதிரை.! இவனுக்குத் தான் முதல் பரிசு, பாரேன்!
இதற்கு முந்தின காவடியாட்டம் கூட பிரமாதம்!
அடடா என்ன உடையலங் காரம்! என்ன மேக் அப்! நல்ல செலவாகி யிருக்கும்!


கடைசியாக ஹரியின் பெயர் கூப்பிடப்பட்டது–
ரொம்ப சிம்பிள் காஸ்ட்யூம் தான்...
ஆமாம்!
...மதம் மொழி உணவு உடை வேறுபட்டாலும், நான் ஒரு இந்தியன்!
போட்டி முடிந்தது. எல்லோரும் முடிவுக்காகக் காத்திருந்தனர்.
நடுவர்–
கட்டப் பொம்மனாக வந்த ரகுவுக்கு மூன்றாம் பரிசு. கரகாட்டம் அற்புதமாக ஆடிய அரவிந்துக்கு இரண்டாம் பரிசு! எளிமையாக வந்து நம் நாட்டுக்குத் தேவையானது ஒற்றுமையே என்பதை உடையிலும் நடிப்பிலும் காட்டிய ஹரிக்கு முதல் பரிசு!
தன் நம்பிக்கை ஊட்டிய என் அம்மா தான் என் வெற்றிக்குக் காரணம்
ஹரின்னா என் ஹரிதான்!



சுத்தமாகக் காசு இல்லை!

சாக்லேட் எங்கே?

ஊரிலிருந்து அத்தையும் அவர் குழந்தைகளும் வந்திருந்தனர். எங்கள் அப்பா நிறைய சாக்லேட்டுகளை வாங்கி வந்தார். பாட்டி அவற்றைப் பிரித்து எல்லோருக்கும் கொடுத்து விட்டு மீதியை டேபிள் மீது வைத்தார். சிறிது நேரம் கழித்து பாட்டி சாக்லேட்டைத் தேடினார். கிடைக்கவில்லை. அருகில் நின்றிருந்த அத்தை மகனிடம் "இங்கிருந்த சாக்லேட் எங்கேடா?" என்று கேட்டார். அவன்



பதில் பேசாமல் நின்றான். மீண்டும் பாட்டி, "வாயில என்ன கொழுக்கட்டையா வச்சிருக்கே சொல்லுடா?" என்றார். "என் வாயில கொழுக்கட்டை இல்லை, சாக்லேட்தான் இருக்கு" என்று காட்டினான். அனைவரும் சிரித்தோம்.

— வி. தனசேகரன், வேலநத்தம்.

ஜலதோஷம்!

என் தங்கை அஞ்சுவுக்கு அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும். அன்றும் ஜலதோஷத்தால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். எங்கள் அம்மாவோ மிகுந்த கவலையுடன் "உனக்கு ஏன் அடிக்கடி ஜலதோஷம் பிடிக்குதுன்னே தெரியலையே" என்றார். அருகில் இருந்த தம்பி "எனக்கு காரணம் தெரியும் அம்மா. அஞ்




சுக்குப் பக்கத்திலே 'ஆறு' இருக்குதே" என்றான். அஞ்சுவே சிரித்து விட்டாள்!

— எம். மோகன்,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வத்தலக்குண்டு.

உலகைச் சுற்றியவர் யார்?

விடுமுறையைக் கழிக்க ஊரிலிருந்து பெரியம்மா, அத்தையின் பிள்ளைகள் வந்திருந்தனர். பொழுது போக்க, இரு பிரிவினராகப் பிரித்துக் கொண்டு கேள்விகள் கேட்டு யார் சரியாகச் சொல்கிறார்களோ, அந்த அணிக்கு மதிப்பெண் அளித்துக் கொண்டிருந்தோம். அப்போது, "உலகை முதன் முதலில் சுற்றியவர் யார்?" என்ற கேள்வி வர என் அணி 'கொலம்பஸ்' என்று சொல்வதற்குள் எதிரணி 'முருகன்' என்றார்கள். எங்களுடன் சேர்ந்து பெரியவர்களும் சிரித்தனர்.

— ஜி. கல்பனா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா வித்யாலயா பெண்கள் மேனிலைப் பள்ளி, சேலம் - 16.



என்ன வண்டி?

நான் சென்னைக்குச் செல்வதற்காக ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ரயில் வந்து நின்றது. அருகில் இருந்தவரிடம் "சார் இது என்ன வண்டி?'' என்று கேட்டேன். ''ரயில் வண்டி.'' என்றார் அவர். எனக்கு ஒரு மாதிரியாகி விட்டது. பக்கத்திலிருந்த இன்



னொருவர் ''ரயில் வண்டின்னு நீ சொல்லித்தான் தெரியணுமா? எங்கே போகுதுன்னு சொல்'' என்றவுடன் அவர் "திருச்சி வண்டி." என்றார்.

— டி. சங்கர், அனந்தபுரம்.

டல்னெஸ்

அப்பாவைப் பார்க்க அவர் நண்பர் வந்திருந்தார். இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். ''உன் பிஸினெஸ் எப்படி இருக்கு?'' என்று கேட்டார் அப்பா. "படு டல்லா இருக்கு" என்றார் நண்பர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் தம்பி, "அப்ப நீங்க பண்றது டல்னெஸ்ன்னு சொல்லுங்க'' என்றான். புரியாமல் விழித்தோம். சிறிது நேரத்தில் புரிந்துவிட அனைவரும் சிரித்தோம்.



— இ.சு. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாதபுரம், நெல்லை மாவட்டம்.

காசு இல்லை!

நானும் தோழியும் டியூஷன் முடித்து விட்டு சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். திடீரென என் சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது. அருகில் இருந்த கடையில் பஞ்சர் ஒட்டினோம். கடைக்காரர் மூன்று ரூபாய் கேட்டார். என்னிடம் இரண்டு ரூபாய்தான் இருந்தது. என் தோழியிடம் பணம் கேட்டேன்.



அவளோ "என்னிடம் சுத்தமாகக் காசு இல்லை" என்றாள். "அழுக்காயிருந்தாலும் பரவாயில்லை, காசை கொடுங்க," என்றார் அந்தக் கடைக்காரர். அந்த நிலையிலும் எங்களுக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை.


— ஆர். விசாலம், மேலப்பாதி.

"அங்கிள்! உங்களுக்கு டெல்லி போன் வந்திருக்கு!"

"டெலி போனா?"

"டெல்லிலேர்ந்து போன்!"

— சீர்காழி வி. ரேவதி



சேவைகளின் பேரில் பலகாரம் செய்து தரும் ரங்கம்மாளுக்கு தலையெல்லாம் சிரங்கு. சொட்டை வைத்தியரிடம் காண்பித்ததில் தலையை மொட்டை அடித்துக் கொண்டால்தான் சிரங்கு குணமாகும் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

ரொம்ப நாள் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்த ரங்கம்மா அவஸ்தையும், நாற்றமும் தாங்க முடியாமல் முடியை இழப்பதென்று முடிவெடுத்தாள்.

மசால் வடை!

இந்த சமயம் பக்கத்து வீட்டில் புதிதாகத் திருமணமான ஒரு தம்பதிகள் குடி வந்தனர். மனைவி சுமதி செல்லமாய் வளர்ந்த பெண். மிகவும் சிறியவள். சாதாரண சமையல் செய்வதற்கே திணறினாள்.

ஒருநாள் கணவன் மனைவியிடம் மசால் வடை செய்து தரும்படி கேட்டான்.

அதற்கு அவள் "மசால் வடை செய்யத் தெரியாதே.." என்றாள்.

கணவன் ''அடுத்த வீட்டு ரங்கம்மா ரொம்ப நல்ல மாதிரி. அவளிடம் கேட்டு செய்'' என்று சொல்லி விட்டுச் சென்று விட்டான்.

பக்கத்து வீட்டுக்குச் சென்று ரங்கம்மாவிடம் அறிமுகம் செய்து கொண்டாள் மனைவி. அவளை அன்புடன் வரவேற்ற ரங்கம்மா அவள் வந்த காரணத்தைத் தெரிந்து கொண்டதும் "பூ, இவ்வளவுதானா! மசால் வடை செய்கிறது ரொம்ப சுலபம். உங்க இரண்டு பேருக்குத்தானே! 'கால்படி கடலைப் பருப்பு, ஒரு பிடி துவரம் பருப்பு, ஆழாக்கு உளுத்தம் பருப்பு எல்லாவற்றையும் ஊற வைத்து என்பதற்குள் "தெரியும், தெரியும்... அரைக்கணும். அவ்வளவுதானே" என்ற



படி போய் விட்டாள்.

'இவளுக்கு எத்தனை கர்வம்! பிறர் சொல்லி செய்த தாக வரக் கூடாது என்று முந்திக் கொண்டு பேச்சை முடிக்கிறாள். வரட்டும். பேசிக் கொள்கிறேன்' என்றபடி உள்ளே சென்றாள் ரங்கம்மா.

வீட்டுக்கு வந்த சுமதி – பருப்புகளை ஊற வைத்தாள். ஊறியதும் கழுநீர் போகக் களைந்தாள். ஆட்டுக் கல்லில் போட்டு அரைத்தாள்.

'பதம் தெரியவில்லையே! எப்போது வழிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளாமல் போனோமே என்று கவலைப் பட்டாள். கையைக் கழுவிக் கொண்டு தயங்கியபடி ரங்கத்தின் வீடு சென்றாள்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! நான் ஒரு அவசரக் குடுக்கை. இந்தப் பதம் சரியாயிருக்குமா, வழித்து விடலாமா, அப்புறம் என்ன செய்ய வேண்டும்" என்று பணிவன்புடன் கேட்டாள்.

ரங்கம் இரக்க குணமுடையவள். மாவைத் தொட்டுப் பார்த்து விட்டு "ரொம்ப அரைத்து விட்டாய்! இன்னும் கொஞ்சம் முன்னால் எடுத்திருக்க வேண்டும். அதோடு மிளகாய், உப்பு, கறிவேப்பிலை எதுவும் சேர்க்கவில்லை" என்று அடுக்க,

"சரி, சேர்த்து விட்டு வருகிறேன்" என்று வேகமாகப் போய் விட்டாள் சுமதி.

'சுத்தக் குடுகுடுப்பை' என்று சலித்துக் கொண்டாள் ரங்கம்.

'உப்பு, மிளகாய், கறிவேப்பிலை போட்டு அரைத்த சுமதி, 'சே! வேறென்ன சேர்க்க வேண்டும் என்று தெரியவில்லையே' என்று நொந்து கொண்டு மறுபடி ரங்கத்திடம் போய் நின்றாள்.

ரங்கத்திற்குப் படு கோபம் வந்தது. ஆனாலும் பொறுமையுடன், "வெங்காயத்தைத் தோலுரித்துப் பொடிசாக நறுக்கிச் சேர்க்க வேண்டும்." என்றவுடன், "எனக்கு மறந்து விடும். நறுக்கிச் சேர்த்து விட்டு வருகிறேன்" என்றபடி போய் விட்டாள் சுமதி.

ரங்கத்தால் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 'என்னை என்ன வேலையற்றவள் என்று நினைத்து விட்டாளா? நினைத்து நினைத்து வருகிறாள். ஒன்றும் தெரியாத இந்தப் பெண் வகை வகையாய் அடுக்கி வைத்திருக்கும் பலகாரங்களைப் பார்த்தால் திருஷ்டிப் படாதோ? இனிமேல் வராதபடி செய்ய வேண்டும்!' என்று முடிவு கட்டினாள்.

மாலதி

வெங்காயத்தை நறுக்கி மாவுடன் கலந்து வைத்து விட்டு வந்த சுமதியிடம் "பெரிய வாணலியில் அரைப் படி எண்ணை வைத்து இந்த மாவைப் போட்டுக் கிளறு. ரொம்பக் கொதித்தால் கொஞ்சம் புளியைக் கரைத்து விடு" என்றாள் எரிச்சலுடன்.

சுமதியும் அவ்வண்ணமே செய்தாள். வெளியிலிருந்து வந்த சுமதியின் கணவன் "மசால் வடை செய்தாயா" என்று கேட்க, "அதென்னமோ இப்படித்தான் வந்திருக்கிறது" என்றபடி ஒரு கிண்ணத்தில் கொண்டு வந்து கொடுத்தாள் சுமதி.

"இதுவா மசால் வடை!" என்றபடி ஒரு ஸ்பூன் ருசித்





"நீ ஏன் தினமும் லேட்டா வர்றேங்கறதை விசாரிக்க உங்கப்பாவை வரச் சொல்லி இருந்தேனே ஏண்டா அவர் வரலை?"

"அவர் வர லேட்டாகும் சார்!"

— பா. ஜெயக்குமார்

துப் பார்த்தவன் 'தூ, தூ' என்று துப்பினான்.

"யார் சொல்லிக் கொடுத்தது இப்படி?" என்று கணவன் சீற, "பக்கத்து வீட்டு ரங்கம்மாதான்" என்றாள் சுமதி.

சினத்தோடு ரங்கத்தின் வீட்டுக்குச் சென்று "எவ்வளவு பொருள் நஷ்டமாகி விட்டது? அறியாப் பெண்ணுக்கு செய்யும் உதவி இதுதானா?" என இரைந்தான்.

நடந்ததை ரங்கம்மா விளக்கினாள். மன்னிக்கும்படி வேண்டிக் கொண்ட கணவன் "நாளை அவளை இங்கு அனுப்புகிறேன். நீங்கள் பலகாரக் கடைக்குத் தயார் செய்யும் மசால் வடை செய்முறையை அவள் பார்க்கட்டும்" என்று கேட்டுக் கொள்ள, ரங்கமும் சம்மதித்தாள்.

கணவன் உத்தரவுப்படி மறுநாள் காலை ரங்கத்தின் வீடு வந்த சுமதி தன் அவசரக் குணத்துக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

ரங்கம் பருப்புகளை ஊறப் போட்டாள். அவளுக்குத் தேவையான அளவுகளையும் கூறினாள்.

அதே சமயம் நாவிதர் நல்லமுத்து வந்தார். சுமதியை 'இரு' என்று ஜாடை காட்டி விட்டுத் தலையை மொட்டை அடித்துக் கொண்டாள். பிறகு நீராடி உடை மாற்றிக் கொண்டு கல்லுரலில் மசால் வடைக்கு அரைத்தாள். வெங்காயம் நறுக்கிச் சேர்த்தாள். அடுப்பில் எண்ணை வைத்து வடை தட்டி பொன்னிறமாக எடுத்து சுமதிக்கும் கொடுத்தாள்.

"இதுதான் மசால் வடையா? நன்றாகப் புரிந்து விட்டது. நீங்கள் செய்தபடியே வடை தயாரித்து என் கணவரை சந்தோஷப்படுத்துவேன்" என்று கூறி ரங்கத்திடம் விடை பெற்றுச் சென்றாள் சுமதி.

பருப்புகளை ஊற வைத்தாள். வெங்காயத்தைத் தோல் சீவி நறுக்கி வைத்துக் கொண்டாள். வெகு நேரம் சென்ற பின் மற்றொரு நாவிதரான துரைக்கண்ணு சென்று கொண்டிருந்தார். அவர் பிறவி ஊமை. அவரைக் கைதட்டி அழைத்தாள். தனக்கு மொட்டை அடிக்கும்படி கேட்டுக் கொண்டாள். பணம் கொடுத்து அவரை அனுப்பி விட்டுக் குளித்து ஆடை மாற்றிக் கொண்டு வடைக்கு அரைத்தாள். வழிக்கும் சமயம் சுமதியின் கணவன் வந்தான். மொட்டை செய்யப்பட்ட சுமதியின் தலையைக் கண்டு திகைத்தான்.

"இதோ பாருங்க... நீங்க வர்றதுக்குள்ளே வடை தயார் செய்திடணும் என்றுதான் நினைத்தேன். ஆனா நாவிதர் தென்படவேயில்லை. அது தான் லேட்டா யிடுச்சு" என்றாள் சுமதி.

"ஆமாம்! ஏன் தலையை மொட்டையடிச்சுகிட்டே?" என்று ஆத்திரத்தோடு கணவன் கேட்க, "நல்லா கேட்டீங்களே! ரங்கம் எப்படிப் பண்ணறாங்களோ அப்படிப் பண்ணணும்னு உத்தரவு போட்டுட்டு...! ரங்கம் மொட்டை அடிச்சுகிட்டாங்க... நானும் மொட்டை அடிச்சுகிட்டேன்! அன்னிக்கு மொட்டை அடிச்சுக்காததினாலேதான் வடை [illegible] லாம் கலைந்து [illegible]ன்னு புரிஞ்சுகிட்டேன்! ஆனா அடிக்கடி மசால் வடைக்கு ஆ[illegible]ங்க! முடி கொஞ்சம் வளரட்டும். இல்லேன்னா எப்பவும் மொட்டையாகவேதான் இருப்பேன்" என்று சடசடவெனப் பொரிந்தாள் சுமதி.

தலையில் கைவைத்தபடி கீழே உட்கார்ந்து விட்டான் கணவன்.

ஜோக்! ஜோக்! ஜோக்!



"நீ ஊட்டிப் பார்த்து இருக்கியாடா?"


"எங்க அம்மா என் தம்பிக்கு ஊட்டிப் பார்த்து இருக்கேன்!"

— கடலூர் கன்னியப்பன்

"நான் வணக்கம் சொன்னதிலிருந்து கையை எடுக்க முடியலை... ஏன் சொல்லு?"

"வணக்கத்துலதான் 'கம்' இருக்கே!"

— எம்.கே. வேங்கவேல்.



"சர்க்கஸில் வெள்ளைக் குதிரைக்கு ஏன் பெயிண்ட் அடிக்கிறாங்க?"

"வரிக் குதிரைக்கு இன்று உடம்பு சரியில்லையாம்!"

— நெ. இராமன்.



"யானையைப் பூனை ஆக்குவது எப்படினு உனக்குத் தெரியுமா?"

"தெரியாதே!"

"ரொம்ப சிம்பிள். 'யா' எடுத்துட்டு 'பூ' போட வேண்டியது தான்!"

— எஸ். சரவணன்.





"முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் யார்?"


"டென்சிங்"

"அதற்கு முன் ஏற முயன்றவர் யார்?"

"நைன்சிங்!"

— விஜயகுமார்.

சைக்கிள்



* காற்றின்றிச் செல்லாது, பட்டம் அல்ல; காணக் கிடைக்காத பொருளும் அல்ல; வாடகைக்கு கிடைக்கும்; வீடும் அல்ல; அது என்ன?

— இரா. காயாம்பு, சோழபுரம்
தஞ்சை மாவட்டம்.

* சக்கரங்கள் உண்டு – தேர் அல்ல,
சவாரி போகலாம் – கார் அல்ல!

— நெ. இராமன், பொழிச்சலூர்,
சென்னை.

* இரு சக்கர வண்டி
இருபாலரும் விரும்பும்
வண்டி
மேக் மில்லன் கண்டு
பிடித்த வண்டி
மேடு பள்ளத்தில் ஓடும்
வண்டி

— டி. ஜோஷ்வின்,
ஐரேனிபுரம், குமரி
மாவட்டம்.

* சிறியவர்,
பெரியவர்
ஏழை, பணக்காரர்
இனம், மொழி
பேதமில்லை
எனக்கு!

— கே. தீபா,
அயனாவரம்,
சென்னை.

* சிக்கனத்திற்கும் உதவுவேன்
ஆரோக்கியத்தையும் காப்பேன்!
– நான் யார்?

— திவ்யா சனத்,
புனே.

* மேக்மில்லனின் மூளையில் உதித்தேன்
மாபெரும் புகழ் அடைந்தேன்.
ஏழை, சீமான் பேதமின்றி
எல்லோரிடமும் நான் இருப்பேன்.

— ரா. சத்யநாராயணன்,
எட்டாம் வகுப்பு,
சிட்லபாக்கம்.

* எகிறி, எகிறி மிதித்தால்
ஏகாந்தமாய்ப் பறப்பான். - அவன்
யார்?

— எஸ். ஜவஹர் ருமேஷ்,
மேலக்கரைப்பட்டி,
இருப்பாளி அஞ்சல்.

விடுகதைகள்

★ கால்கள் இரண்டைப் பெற்றவன்
மிதித்தால் காற்றாய் பறப்பவன்.
– அவன் யார்?

— கோ. முத்துகுமார்,
பெரியதச்சூர் அஞ்சல்,
திண்டிவனம்.

* காற்று இல்லாமல் நான் இல்லை
ஆனாலும் எனக்கு உயிர் இல்லை.

— செ. யோகசித்தி,
ஆண்டிமடம் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம்.

✱ கொம்புகள் உண்டு, மாடல்ல
வேகமாக ஓடுவேன், மானல்ல.

— பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னிப் பள்ளி,
தி.நகர்.

* கால் பட்டவுடன் ரோஷத்துடன்
சீறிப் பாய்வான் – அவன் யார்?

— சி. மதுரா, திருவாரூர்.

* கால், கை உண்டு; மனிதனல்ல,
அமர இடம் உண்டு; நாற்காலி அல்ல.
பற்கள் நிறைய உண்டு; மிருகமும் அல்ல.
நீண்ட கம்பிகள் உண்டு; குடையும் அல்ல.

— பு. ஸ்ரீமதி, ஆறாம் வகுப்பு,
வேலூர்.

★ ஒளி கொடுப்பேன்,
ஒலியும் கொடுப்பேன்.
விட்டால் ஓடுவேன்
பிடித்தால் நிற்பேன். நான் யார்?

— பி. மீனாட்சி,
ஏழாம் வகுப்பு,
தூய எப்பாஸ் பள்ளி, சென்னை.


✱ குழந்தைகளுக்கும் பயன் தருவேன்
பெரியவர்களுக்கும் பயன்படுவேன்
முதியோருக்கும் பலன் தருவேன்
ஊனமுற்றோருக்கும் உதவுவேன்!

— ஜெ. மகேந்திரன்,
ரெய்சூர். (கர்நாடகா)

* சவாரிக்கு ஏற்றது
- குதிரையுமல்ல
பொதி சுமக்க வல்லது
- கழுதையுமல்ல
உதைத்தால் ஓடும்
- கால் பந்துமல்ல
கைப்பிடி கொண்டது
- பாத்திரமுமல்ல.
- அது என்ன?

— சு. சௌம்யாயனி,
ஐந்தாம் வகுப்பு,
ஜான்சன் ஆங்கிலப் பள்ளி,
தூத்துக்குடி.

போட்டி முடிவு



குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. தமிழக ஆறுகளில் ஒன்று. இதன் முதல் பாதி உலோகத்தைக் குறிக்கும் (6)

3. பொருட்களை வாங்கி இதில் கொண்டு வரலாம் (2)

9. கிராமங்களில் குடிநீருக்கான குளம் (3)

11. இயற்கை மரங்களும் செடிகளும் வளர்ந்துள்ள பிரதேசம் (2)

12. நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவிற்கு வந்தவர் (6)

வலமிருந்து இடம்

6. கோள்களில் ஒன்று. இதைச் சுற்றி வளையமிருக்கும் (2)

7. ஆற்றைக் கடக்க உதவும் (3)

10. இப்பறவையைத் தூது அனுப்புவா (2)

மேலிருந்து கீழ்

1. பகலில் கார்பன்டை ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு ஆக்ஸிஜனை வெளியேற்றும் உயிரினம் (4)

2. வீட்டில் வசிக்கும் ஊர்வன பிராணி. பூச்சிகளைச் சாப்பிடும் (3)

4. பலகோடி வருடங்களுக்கு முன் தோன்றிய மிகப் பெரிய உயிரினம் (4)

7. சுமைக்கு இன்னொரு பெயர் (3)

8. இளம் பனங்காய். தாகம் தீர்க்க உதவும் (3)

கீழிருந்து மேல்

5. உலகத்தை இப்படியும் அழைக்கலாம் (3)

9. நீலகிரி மாவட்டத்திலுள்ள கோடை வாசஸ்தலம் (3)

11. பட்டத்தை இப்படியும் அழைக்கலாம் (4)

12. தட்டையான அலகும், குட்டையான காலும் கொண்ட நீரில் நீந்தும் பறவை (3)

13. அரண்மனைக்குப் பாதுகாப்பாக இது இருக்கும் (3)

14. வானொலியைக் கண்டு பிடித்தவர் (4)

ஆர். மணிகண்டன்.
ஒன்பதாம் வகுப்பு, சீர்காழி

விடை - 64 ஆம் பக்கம்



"அந்த பஸ் எதுவரைக்கும் போகும்?"

"டீசல் இருக்கிற வரைக்கும்!"

— எஸ். சரவணன்

''பாலை ஆட்டோவில் கொண்டு போனா என்ன ஆகும்?''

''மில்க் ஷேக் ஆகும்!''

— பாளை பசும்பொன்




தீரசேனன் வென்ற திகில் மலை!
கதை : விஜி
படம் : தாமரை
1
சந்திரசேனன் ராஜாவுக்கு ராஜசேனன், உதயசேனன் தீரசேனன் என மூன்று புதல்வர்கள்.
மன்னர் சந்திரசேனன் நோய்வாய்ப் பட்டுக் கிடந்தார். மாமுனிவர் அரசரைக் காண வந்தார்.
அரசர் எப்படி இருக்கிறார்?
எந்த மருந்து வம் செய்தும் பலனில்லை. தாங் கள் தான் உதவ வேண்டும்.
மன்னருக்கு வந்திருக்கும் நோய் கடுமை யானது.
அப்படி யென்றால்?
பொறுங் கள்! இந்நோயை குணமாக்கும் சக்தி அந்த அற்புத நீருக்கு மட்டுமே உண்டு.
அற்புத நீரா! எங்கிருக்கிறது? உடனே கொண்டு வருகிறேன்.
எங்கள் தந்தைக் காக எதுவும் செய் யத் தயாராக இருக் கிறோம்.
அது சுலபமான காரியம் அல்ல!



பக்கத்து நாட்டில் உள்ள சாமந்தி மலை உச்சியில் அற்புத நீர் ஊற்று உள்ளது.
சாமந்தி மலையில் சாமந்தி பூக்களாக இருக்குமா?
ஆம்! மலை முழுவதும் சாமந்தி பூக்களாக இருக்கும். மிகவும் அழகானது. அதே நேரத்தில் திகில் நிறைந்தது.
அது சாதாரண மலை அல்ல. கொடிய பாம்புகளும் விஷ ஜந்துகளும் அதிகம். கவனம் தேவை.
அற்புத நீரால் மன்னர் குணமாகி விடுவார்தானே!
ஆமாம். தீராத நோயும் தீரும். நீண்ட நாள் உயிர் வாழ்வார்.
யாராவது சென்றிருக்கிறார்களா?
ஐம்பது வருடங்களுக்கு முன் ஒருவர் சென்று வந்திருக்கிறார். அதன்பின் யாராலும் ஊற்றை அடைய முடியவில்லை.
அற்புத நீரைத் தேடி சாமந்தி மலைக்குச் செல்கிறேன்.
என் பொருட்டு அல்லல் பட வேண்டாம்.
நான் வெற்றியுடன் திரும்புவேன்.


ராஜசேனன் சாமந்தி மலையின் அடிவாரத்தை அடைந்தான். அங்கு—
மனித நடமாட்டமே இல்லையே. மலை மிகவும் உயர மாக இருக்கிறது. எத்தனை நாளா குமோ! ஆ... அதோ அங்கு ஒருவர் படுத்திருக்கிறாரே!
விரைந்தான் ராஜசேனன்
ஐயா! இந்த மலை உச்சியை அடைய எத்தனை நாளாகும்?
மூன்று நாட்கள் ஆகும்.
நன்றி. நான் வருகிறேன்.
தாகமா உள்ளது. இளைஞனே உன் குவளையில் உள்ள நீரைத் தருகிறாயா?
மலை உச்சியை அடைய மூன்று நாட்கள் ஆகும் என்று கூறினீர்களே! இருக்கும் நீர் எனக்கே போதாது.
உணவாவது கொடு. உனக்குப் புண்ணியம்.


புண்ணியம் வேண்டாம்.
இரக்கமற்றவனுக்கு அற்புத நீர் கிடைக்கக் கூடாது.
உன் சாபம் என்னை ஒன்றும் செய்யாது!
நீ மரமாவாய்!
ராஜசேனன் மரமாகி நின்றான்.
ராஜசேனன் திரும்பாததை அடுத்து உதயசேனன் அற்புத நீர் கொண்டு வர கிளம்பினான்.
ராஜசேனனைக் காணாமல் தவிக்கிறோம். நீயும் போகாதே!
நான் அண்ணனுடன் திரும்பி வருகிறேன்.
உதயசேனன் மலையை அடைந்தான்.
அவனுக்கும் ராஜசேனன் கதியே நேர்ந்தது.
நாட்கள் சென்றன. சகோதரர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அற்புத நீரைக் கொண்டு வரவும் தீரசேனன் கிளம்பினான்.
தொடரும்

அருகில் உள்ள பட்டணத்தைப் பார்க்க முடியவில்லை!

விடுகதை பக்கம்



1. குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை.

2. நெட்டை அக்கா தாக்குகிறாள்
குட்டை அக்கா தாங்குகிறாள்

3. பச்சை வீட்டிற்கு சிவப்பு வாசல்

4. மூட்டையை அவிழ்க்க அவிழ்க்க முடிச்சு அவிழ்கிறது.

5. கைக்குள் அடங்குவான்
காண்பதற்கு ஒளி தருவான்.

– சிவபெருமாள், இரணியல்.

1. பக்கத்திலிருக்கும் பட்டணத்தை எட்டிப் பார்க்க முடியவில்லை –
அது என்ன?

2. யாரையும் குனிய வைத்து விடுவான் – அவன் யார்?

3. குண்டுசட்டியில் குதிரை ஓட்டுவான் – அவன் யார்?

4. பெட்டி நிறைய சிப்பாய் –
அது என்ன?

– கோ. மகாராஜன்,
கல்லாலிப்பட்டு, தளவானூர்
(அஞ்சல்).

1. பச்சைக் கதவு, வெள்ளை ஜன்னல், கறுப்பு ரோஜா – அது என்ன?

2. மரம் ஏறினால் வழுக்குது;
காய் தின்றால் துவர்க்குது,
பழம் தின்றால் இனிக்குது – அது என்ன?

3. மஞ்சள் நிறத்தான்
பித்தம் நீக்கிடுவான் – அவன் யார்?

4. மஞ்சள் பெட்டிக்குள்
ஆயிரம் சிவப்பு முத்துகள் – அது என்ன?

5. பூமி உருண்டை போன்றவன்
தாகம் தீர்க்க உதவிடுவான் –
அவன் யார்?

– வி. ஆர். கிருத்திகா, திருச்சி - 14.

விடைகள் : 1

1. தேங்காய்
2. உரல், உலக்கை
3. கிளி
4. வெங்காயம்
5. டார்ச் விளக்கு

விடைகள்: 2

1. முதுகு
2. மூள்
3. கடிகாரம்
4. தீக்குச்சி

விடைகள் : 3

1. சீத்தா பழம்,
2. வாழை
3. எலுமிச்சை பழம்
4. மாதுளை
5. தர்பூசணிப் பழம்.

கிரிக்கெட்

'கிரிக்கெட்' - இந்த வார்த்தையைக் கேட்டதும் பெரியவர்கள் முதல் சிறுவர் வரை ஆனந்தமடையவே செய்கிறார்கள்.

கிராமம், நகரம் என்று பாராது தெருவுக்குத் தெரு கிரிக்கெட் விளையாட்டு! மூன்று வயது குழந்தையிலிருந்தே பந்தும் மட்டையுமாகக் கிளம்பி விடுகிறார்கள். பலரின் ஆர்வம், திறமையெல்லாம் தெருவில் விளையாடுவதுடன் முடிந்து போய்விடுகிறது. இவர்களில் சிலருக்கே பள்ளி, கல்லூரி அணிகளில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கிறது. யாரோ ஒரு சிலர்தான் இந்தத் துறையில் பிரகாசிக்க முடிகிறது.

இன்று பல அமைப்புகள், முன்னாள் கிரிக்கெட வீரர்கள் என்று பலரும் கிரிக்கெட் பயிற்சியளிக்கும் முகாமை உருவாக்கியிருக்கின்றனர்.

கோகுலம் வாசகர்கள் நிறைய பேர், கிரிக்கெட் பயிற்சி எப்படி பெறலாம்? எந்த வயதில் சேர வேண்டும்? இது போல பல விவரங்களைக் கேட்டு எழுதியிருந்தார்கள். அவர்களுக்காக முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் திரு. வி.பி. சந்திரசேகர் அவர்களைச் சந்தித்தோம்.

இன்றும் ரஞ்சிப் போட்டிகளில் விளையாடிக் கொண்டிருக்கும் தாங்கள் பயிற்சி முகாம் நடத்த முடிவெடுத்தது ஏன்?

நான் அறிந்த, கற்ற விளையாட்டை சிலருக்கு கற்றுக் கொடுத்து அவர்களை பெரிய அளவில் கொண்டு வர வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே நினைத்திருந்தேன்.

இதுபோன்ற பயிற்சி முகாம்களை இன்று விடுமுறைகளில் பலரும் நடத்த





பயிற்சி பெறுவது எப்படி?

ஆரம்பித்து விட்டார்களே! உங்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

பணத்திற்காக நான் இதை ஆரம்பிக்கவில்லை. பத்து பேருக்குச் சொல்லிக் கொடுத்தால் ஐந்து பேராவது தேற வேண்டும். நாளை தமிழகத்தின் சார்பிலும் இந்திய அளவிலும் அவர்கள் விளையாட வேண்டும் என்பதே என் நோக்கம். முதலில் 20 பேருக்குத்தான் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். பின்பு பலருடைய வற்புறுத்தலால் 30 பேராக மாறிவிட்டது.

எந்த வயதிலிருந்து பயிற்சி பெறலாம்?

ஐந்து வயதிலிருந்தே கூட பயிற்சி பெறலாம். குழந்தைகள் ஆடுவதற்கான புல் தரை ஆடுகளம், கான்கிரீட் ஆடு களத்தை தயார் செய்து பயிற்சியளிக்கிறேன்.

குழந்தைகள் விளையாடுவதற்கென தனி விளையாட்டுச் சாதனங்கள் உண்டா?

ஆமாம். மாணவர்களுக்கென தனி மட்டை, பந்து, ஷூ போன்றவை இருக்கின்றன. அதை என் மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறேன்.

ஒவ்வொரு மாணவரிடமும் தனிக் கவனம் செலுத்துகிறீர்களா?

ஆமாம். மாணவர்கள் விளையாடும் போது வீடியோ எடுக்கிறேன். பிறகு அவர்களின் தவறுகள் என்ன என்பதைச் சுட்டிக்காட்டி போட்டுக் காண்பிக்கிறேன். இதனால் அவர்கள் செய்யும் தவறுகள் எளிதாக அறிய முடிகிறது. அதைப் போக்கிக் கொள்கிறார்கள்.

மாணவர்கள் உற்சாகத்துடன் கற்றுக் கொள்கிறார்களா?

அவர்கள் காட்டும் உற்சாகம் பிரமிக்கச் செய்கிறது. 3.30 மணிக்கு வரச் சொன்னால் 2.30 மணிக்கே வந்து உடற்பயிற்சி செய்து தயாராகி விடுகிறார்கள்.

கிரிக்கெட் பயிற்சி எவ்வளவு காலத்திற்குப் பெற வேண்டும்?

முழுமையாக கற்க இரண்டு வருடங்கள் ஆகும். எல்லாவிதமான ஸ்ட்ரோக்குகளையும் அடிப்படையாகக் கற்க வேண்டுமல்லவா?

சென்னையில் மட்டும் நடத்துகிறீர்களே! மற்ற மாவட்டத்திலுள்ள மாணவர்களும் பங்கு பெறும் வகையில் ஏதாவது செய்யலாமே!

நிச்சயம் செய்ய வேண்டும். முதலில் சென்னையில் ஆரம்பித்து, வெற்றிகரமாக நடத்தி விட்டு பிற மாவட்டங்களுக்குச் செல்லலாம் என்றிருந்தேன். ஆனால் இப்போது இதற்குக் கிடைத்திருக்கும் ஆர்வத்தைப் பார்க்கும்போது அடுத்த ஆண்டே பிற மாவட்டங்களில் நடத்த எண்ணியிருக்கிறேன்.

இந்தப் பயிற்சி முகாமில் மிகச் சிறந்த மாணவர்களை அடையாளம் காட்ட முடியுமா?

4, 5 பேர் மிக நன்றாக விளையாடுகிறார்கள். இரண்டு, மூன்றாண்டுகளில் நிச்சயமாகப் பேசப்படுவார்கள். அண்மையில் இந்தியக் கிரிக்கெட் வீரர் ராகுல் திராவிட் இப்பயிற்சி முகாமை பார்வையிட்டு இரண்டு மணி நேரம் கலந்துரையாடி உற்சாகப்படுத்தினார்.

கிரிக்கெட் பயிற்சி பெறுவது, பயிற்சிக் காலம், கட்டணம் போன்ற விவரங்களை திரு. சந்திரசேகரை தொடர்பு கொண்டு அறியலாம்.

முகவரி :
திரு. வி.பி. சந்திரசேகர் கிளினிக்,
7, விஸ்வேசபுரம்,
ஆலிவர் ரோடு சமீபம்,
மயிலாப்பூர், சென்னை — 600 004.
தொலைபேசி — 499 3702.

— சங்கர சுப்ரமணியன்



ரவியும் கீர்த்தனாவும் பரீட்சையில் தேறி புது வகுப்பிற்குச் செல்லும் உற்சாகத்தில் இருந்தனர்.

"அப்பா! எனக்கு புது பேக் வாங்கித் தருவதாகச் சொன்னீங்களே, எப்ப வாங்கித் தரப் போறீங்க?" என்று கேட்டான் ரவி.

"இன்னிக்கு சாயங்காலம் ரெண்டு பேரும் தயாரா இருங்க. நான் வந்து கூட்டிட்டுப் போறேன்."

அன்று மாலை இருவரையும் டபிள்யூ. டபிள்யூ. எஃப் (World Wide Fund for Nature) அலுவலகத்திற்கு அழைத்துப் போனார் அப்பா.



"அப்பா! எங்கே பார்த்தாலும் கரடியோட படமாயிருக்கே!" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டாள் கீர்த்தனா.

"இதுதான் டபிள்யூ. டபிள்யூ. எஃப் அமைப்பின் சின்னம். அதனாலதான் இங்கு விற்கப்படும் பென்சில், பேனா, பை, புத்தகம், போஸ்டர், தொப்பி, வாழ்த்து அட்டை... என்று சகலத்திலும் இந்தக் கரடி இடம்பெற்றிருக்கு" என்று விளக்கினார் அப்பா.

ரவியும் கீர்த்தனாவும் ஆளுக்கொரு பையும், சில புத்தகங்களும் வாங்கிக் கொண்டதும் கிளம்பினார்கள்.

சீனக்கரடிக்கு எத்தனை விரல்கள்?



எஸ்.சுஜாதா

காலியாக ஒரு பஸ் வர ஏறி அமர்ந்தனர்.

"அப்பா! சின்னமாக வச்சிக்கிறதுக்கு நிறைய பறவை, விலங்குகள் இருக்கும் போது இந்தக் கரடியைப் போய் வச்சிருக்காங்களே!" என்றான் ரவி.

"போண்ணா. உனக்கு ரசனையே இல்லை. இந்தக் கரடிக்கு என்ன குறைச்சல்? கண், மூக்கு, காது, கால், கழுத்து – இதெல்லாம் கறுப்பு வண்ணம். மற்ற இடங்களில் வெள்ளை. பார்க்க வித்தியாசமாகவும் அழகாகவும் இருக்கே! அதனாலதான் சின்னமா வச்சிருப்பாங்க" என்றாள் கீர்த்தனா.

"நான் அப்பாவைத்தான் கேட்டேன். நீ விளக்கம் தர வேண்டாம்" என்று கூறினான் ரவி.

"கீர்த்தனா, நீ நினைக்கிற மாதிரி இது அழகுக்காக வச்சிருக்கிற சின்னம் இல்லை. இந்த விலங்கு அழிஞ்சிட்டு வருது. உலகம் முழுவதும் இதனோட எண்ணிக்கை ஆயிரத்திற்குள்தான். அதனால் இதை பாதுகாக்கறதுக்காக நிறைய திட்டங்கள் கொண்டு வந்திருக்காங்க. இந்த அமைப்பும் தனது சின்னமாக இதையே வச்சிருக்கு" என்று நிறுத்தினார் அப்பா.

"கரடிதான் நிறைய இருக்குதே அப்பா!" – கீர்த்தனா.

"இதுவும் கரடியோட இனம்தான். ஆனால் வேறு வகை. இது சீனாவில் மலைப்பிரதேச மூங்கில் காடுகளில் மட்டுமே வாழ்கிறது."

"அப்ப இது நம்ம ஊர் கரடி இல்லை. சீனக்கரடி அப்படித்தானே!" – கீர்த்தனா.

"ஆமாம்! இந்தக் கண்டுபிடிப்பிற்கு உனக்கு பெரிய பரிசே தரலாம்" என்று கிண்டல் செய்தான் ரவி.

"சீனக்கரடியும் தேன் சாப்பிடுமா?" என்றாள் கீர்த்தனா.

"ஆமாம். இவற்றின் ப்ரியமான உணவு தேன்தான். ஆனால் தேன் தினமும் சாப்பிடக் கிடைக்காதே!



மூங்கில் இலை,
தண்டு, பெரிய புற்கள்தான்
இவைகளின் முக்கிய உணவு.
இவை இறைச்சியையும் உண்ணும்,
அதே நேரத்தில் சாக்லேட்டையும்
சாப்பிடும்."

"சீனக்கரடியைப் பார்க்கிறதுக்கு பொம்மை மாதிரியே இருக்கு. அதோட விளையாடணும்னு தோணுதுப்பா" என்றாள் கீர்த்தனா.

"நீ விளையாடுவது இருக்கட்டும். சீனக் கரடிகள் விளையாட்டை மிகவும்
விரும்பும். குட்டிகள்
ஒன்றுடன் ஒன்று மோதி,
தலை மேல் ஏறி
ஜாலியாக விளையாடும்."

"நம்ம ரவியோட டேஸ்ட்டும் கரடியோட டேஸ்ட்டும் ஒண்ணா இருக்குதே!"

"கீர்த்தனா அநாவசியமா வம்புக்கு வராதே!" என்று முறைத்தான் ரவி.

சில நிமிடங்களில் மீண்டும் ரவியே பேச்சை ஆரம்பித்தான். "சீனக்கரடி ஏன் அழிந்து கொண்டு வருகிறது?" என்று அப்பாவைப் பார்த்துக் கேட்டான்.

- தாய்க் கரடி ஒருமுறைக்கு ஒரு குட்டியையே ஈனும். சில சமயங்களில் மூன்று குட்டிகள் வரை அரிதாகப் பிறக்கும்.
- தாய் கரடி குட்டி ஈனும் சமயம் குகை அல்லது பெரிய மரப் பொந்துகளுக்குச் சென்று விடும்.
- பிறந்த குட்டி 16 செ.மீ. நீளமே இருக்கும். இளம் சிவப்பு வண்ணத்தில் மிக மெலிதான வெள்ளை முடிகளுடன் காணப்படும். கண்களைத் திறக்காது இருக்கும். தாய்க்கரடி சில வாரங்களுக்கு இரவும் பகலும் குட்டியை கவனித்துக் கொள்ளும்.
- ஒரு மாதத்தில் கரடிக் குட்டியின் தோல் தடித்து, வெள்ளை, கறுப்பு முடிகள் தோன்ற ஆரம்பிக்கும்.
- கண் திறந்த உடன் நடக்க ஆரம்பிக்கும்.
- மூன்று மாதங்களில் முதல் பல் முளைக்கும்.
- ஐந்து மாதங்களில் குட்டி பெரிதாக வளர்ந்து விடுவதால் தாய் தூக்கிச் செல்ல கஷ்டப்படும். அப்போது தாய்ப்பாலை குறைவாக அருந்தி, மூங்கில் இலைகளைச் சாப்பிடத் துவங்கும் குட்டி.
- குட்டி தனது இரண்டு வயது வரை தாயுடன் வசிக்கும்.

● பெருஞ்சீனக்கரடி பாண்டா (Giant Panda) என்று அழைக்கப்படுகிறது.

● இது மிகவும் அபூர்வமான விலங்கு. உலகில் 1000க்கும் குறைவான சீனக்கரடிகளே உள்ளன. இவற்றுள் நூறு உயிரியல் பூங்காக்களில் வசிக்கின்றன.

● உருவத்தில் பெரியவை. மிகவும் அமைதியான விலங்கு.

● கண் பார்வை குறைவு. ஆனால் மோப்ப சக்தி அதிகம்.

● சீனக் கரடியின் முன்னங்கால்களில் ஒரு எக்ஸ்ட்ரா விரல் உண்டு. இது கட்டை விரல். உணவைப் பறித்துச் சாப்பிட இவ்விரல் உதவுகிறது.

● உணவு உண்பதிலேயே இவை நாள் முழுவதும் செலவிடுகின்றன. ஒருநாளைக்கு மூங்கில் இலைகளுடன் கூடிய 600 தண்டுகளைச் சாப்பிடுகின்றன. சீனக்கரடியின் விருப்பமான உணவு தேன். மாமிசம் மற்றும் சாக்லேட்டுகளையும் கூட கிடைத்தால் சாப்பிடக்கூடியவை. தன் உறுதியான தாடைகளாலும், சக்திவாய்ந்த பற்களாலும் உணவை மென்று விழுங்கும்.

● உடல் கறுப்பு மற்றும் வெள்ளை ரோமங்களுடன் அழகாக காட்சி தரும். இந்நிறங்கள் தன் எதிரிகளான கரடி, சிறுத்தை போன்ற விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள இயற்கை அளித்துள்ள தகவமைப்பு.

● பொதுவாக இவை தனிமையை விரும்பும். இனப்பெருக்கக் காலத்தில் மட்டுமே சேர்ந்திருக்கும்.

"சீனாவில் உள்ள மூங்கில் காடுகளை மக்கள் அழித்து வந்ததால் சீனக்கரடிக்கு வாழ வழியில்லாமல் போய் விட்டது. அப்புறம், கரடியின் தோல், முடிக்காக இவற்றை வேட்டையாடவும் செய்தனர். இதனால் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது."

"இதைப் பாதுகாக்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்காங்களா?" என்றாள் வருத்தத்துடன் கிர்த்தனா.

"சீனக்கரடியை வேட்டையாடுவோருக்கு எதிராக கடுமையான சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சீனாவின் பல இடங்களில் சீனக்கரடி வாழ்வதற்கு சிறப்புப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உலகமெங்கும் மிருகக் காட்சி சாலைகளில் இருக்கும் சீனக்கரடிகளை சீனாவுக்கே கொண்டு வந்து இனப்பெருக்கத்தை அதிகரிக்க முயற்சி செய்து வருகின்றனர்."

"அப்பா! நாம் இறங்குகிற இடம் வந்தாச்சு. சீக்கிரம் இறங்குங்க."

"இங்கே பாருங்கப்பா. கரடி பொம்மை போட்ட இந்தப் புது ஸ்கூல் பேக்கையும் நீங்க சொன்ன விஷயங்களையும் இவ வகுப்பில் காட்டி நல்லா அளந்து விடப் போறாள்" என்றான் ரவி.

"எனக்குத் தெரிந்ததை என் நண்பர்களுக்குச் சொல்றேன். உனக்கென்ன?" என்று கோபித்துக் கொண்டாள் கிர்த்தனா.

"ரவி! அவளை ஏன் கிண்டல் செய்துக்கிட்டேயிருக்கே! நாளைக்கு உன் நண்பர்களிடமும் நீ கதை விடத்தான் போறே!" என்றதும் ரவி சிரித்தபடியே நடந்தான்.

● ஆபத்து நேரும் போது சீனக் கரடிகள் தங்கள் மரங்களில் உறுதியான கால்களால் பற்றி ஏறி எதிரிகளிடமிருந்து தப்பி விடுகின்றன. சில சமயம் மரத்திலேயே தூங்கி விடுவதும் உண்டு.

கோகுலம் க்விஸ்

1. எந்த நாட்டில் பாண்டாக்கள் வசிக்கின்றன?
2. உலகமெங்கும் இவற்றின் எண்ணிக்கை எத்தனை?
3. இவைகளின் முக்கிய உணவு எது?
4. பிறந்த குட்டியின் நிறம் என்ன?
5. மரத்தில் ஏன் ஏறுகின்றன?


விடைகள் :

1. சீனா
2. 1000க்கும் குறைவு
3. மூங்கில்
4. இளம் சிவப்பு நிறம்
5. எதிரிகளிடமிருந்து தப்பிக்க.

நர்மதா நதி தீரம். விச்வாநரர்-சட்கஷ்மதி தம்பதிகள் குழந்தைப் பேறில்லாமல் காசி விஸ்வநாதரை தினமும் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டனர்.

அபிலாட்சா அஷ்டகம் என்ற எட்டு ஸ்தோத்திரங்களை விசேஷமாக இயற்றினார் விச்வாநரர். இதனால் மகிழ்ந்த சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணின் அம்சமாக ஒரு மகன் பிறப்பான் என்று வரமருளினார்.

அவர் வாக்குப்படி பிறந்த குழந்தைக்கு வைச்வாநரன் என்று பெயர் சூட்டினர்.



ஆர். பொன்னம்மாள்

கிரஹபதி

அவன் பிறந்ததினால் வீடே நிறைந்து காணப்பட்டதால் கிரஹபதி என்றும் அவனை அழைத்தனர்.

அவனுக்கு உரிய காலத்தில் வேத மந்திரங்களையும், பூஜா முறைகளையும் கற்றுக் கொடுத்தார் தந்தை. கிரஹபதியும் அக்கறையாக அனைத்தையும் கற்றுக் கொண்டு பெரியோர்களிடம் பணிவும், பண்பும், சிவபெருமானிடம் பக்தியும் கொண்டு வளர்ந்தான்.

தாயார் அவனுக்குப் பல புராணக் கதைகளையும் கூறுவார். அவனும் தன் சகதோழர்களுக்கு அக்கதைகளை அழகுபட எடுத்துரைப்பான். கிரஹபதிக்கு ஐந்து வயது பூர்த்தியாயிற்று. அப்போது அவர்கள் குடிலுக்கு நாரதர் வந்தார்.

நாரதரைத் தம்பதிகள் குழந்தையோடு நமஸ்கரித்தனர். கிரஹபதியின் கையைப் பார்த்துப் பலன் சொல்லுமாறு முனிவரைக் கேட்டுக் கொண்டனர். கிரஹபதி கையைப் பார்த்த நாரதரின் முகம் சுருங்கியது. தம்பதிகள் எதுவானாலும் மறைக்காமல் சொல்லும்படி கேட்டுக் கொண்டனர்.

"நல்ல விஷயமாயிருந்தால் தயங்காமல் சொல்வேன்! கிரஹபதியின் ஆயுள் இன்னும் ஒரு ஆண்டு காலமே இருக்கிறது. இடி, மின்னலால் தாக்குண்டு அவன் ஆயுள் முடிந்துவிடும்" என வருத்தத்துடன் கூறினார் நாரதர்.


இதற்கு நிவாரணமே இல்லையா?'' என்று கேட்டனர் பெற்றோர்.

''ஏன் இல்லாமல்? மார்க்கண்டேயர் சாகா வரம் பெறவில்லையா? சாவித்திரி இறந்த கணவன் உயிரை மீட்கவில்லையா? சிவன் அருளால் பிறந்த கிரஹபதி நீண்ட ஆயுளுடன் வாழ சிவனையே நம்புங்கள்'' என்று ஆறுதல் கூறிச் சென்றார்.

பெற்றோரிடம் காசிக்குச் செல்ல அனுமதி கேட்டான் கிரஹபதி.

''ஐந்து வயதுக் குழந்தை நீ! பசித்தால், தாகமெடுத்தால் என்ன செய்வாய்? காட்டில் புலியும், சிங்கமும், பாம்பும் தொல்லை தருமடா, கண்ணே! மழையும், புயலும், வெள்ளமும், இடியும், மின்னலும் உன்னால் தாங்க முடியுமா?'' என்று மாற்றி மாற்றித் தாயும், தந்தையும் தடுத்தனர்.

''அம்மா, அப்பா, ஐந்து வயதுத் துருவன் நீங்கள் சொல்லும் எல்லாத் துன்பங்களையும் தூசாக நினைத்ததால்தான் வானில் அழியாப் புகழ் பெற்று விளங்குகின்றான். பிரகலாதன் எத்தனை கஷ்டங்களை அனுபவித்தான்? தைரியமும், லட்சியத்தில் உறுதியும் இருந்தால் வேதனைகள் வெற்றியாக மாறிவிடும்.



என்னை ஆசிர்வதித்து அனுப்புங்கள்'' என்று பணிந்து வேண்டினான்.

வேறு வழியில்லாமல் உத்தரவு கொடுத்தனர். காசிக்கு வந்த கிரஹபதி கங்கைக் கரையில் களிமண்ணால் ஒரு சிவலிங்கம் செய்து பூஜித்து வந்தான். அன்றாட பூஜைகள் முடிந்தபின் நிஷ்டையில் ஆழ்ந்து விடுவான். கொட்டும் மழையிலும், பெருகும் வெள்ளத்திலும் சிவலிங்கமும் கரையவில்லை. கிரஹபதியின் நிஷ்டையும் கலையவில்லை. இரவுகளில் காட்டு விலங்குகள் கிரஹபதியைத் தாண்டிச் சென்றன.

சிவபெருமான் தேவேந்திரன் வடிவில் கிரஹபதி முன் தோன்றி, "குழந்தாய்! உன் தவமும், உறுதியும் என் மனதை மகிழ்வித்தன. உனக்கென்ன வரம் வேண்டும்'' எனக் கேட்டார்.



அப்பா: என் பையன் வகுப்பிலேயே முதல் மார்க் வாங்கியிருக்கானாமே, உண்மையா சார்?

ஆசிரியர்: ஆமாம், எல்லா பாடத்திலும் ஒரு, ஒரு மார்க் வாங்கியிருக்கான்.

– மேலப்பாதி நாகராஜ்

கண் விழித்துப் பார்த்த கிரஹபதி "எனது தவம் சிவனைக் குறித்தது. இந்திரனான உங்களை எப்படி மகிழ்வித்திருக்க முடியும்?'' என்று கேட்டான்.

''கிரஹபதி! உன் ஆயுள் முடிய இன்னும் சில தினங்களே பாக்கி உள்ளன. உனக்கு பூரண ஆயுளை நான் வழங்குகின்றேன்'' என்றார் இந்திரன் வடிவிலிருந்த சிவன். ''சுரேந்திரரே! மற்றவர்கள் தவத்தையும், யாகத்தையும் கலைக்க அரம்பையர்களை அனுப்பும் தாங்களா வரமளிக்க வல்லவர்? தனக்கு பூஜை செய்யவில்லை என்பதற்காக கோகுலத்தில் விடாமல் மழை பொழியச் செய்து கோகுலத்தை வெள்ளத்தில் மூழ்கடித்த உங்களிடம் அவ்வளவு பெருந்தன்மை உண்டா?'' என்று கிரஹபதி வாதாடினார்.

"அழிக்கும் கடவுளான சிவன் மாத்திரம் உன்னை மரணத்திலிருந்து எப்படிக் காப்பாற்றுவார் என நினைக்கிறாய்?'' என்று சிவ இந்திரர் கேட்க, "கழிவான குப்பைகளை எரிக்கிறோம். அதுவும் அழித்தல் தான். அழிக்காவிட்டால் அவை நாற்றமெடுக்கும். வயதானவர்கள் மரிக்காவிட்டால் சலிப்புத் தட்டிவிடும். பழுத்த இலைகள் உதிர்ந்து மண்ணோடு மட்கி எருவாகி விடுகிறது. அதுவும் சிவன் செயல்தான். கண்டிக்க காவலர் இல்லாது போனால் கொள்ளையும் கொலையும் உலகில் மலிந்து விடும். மார்க்கண்டேயரைக் காக்க காலனை உதைத்தவர் சிவன். அங்கே காத்தல் அழித்தல் இருதொழிலையும் செய்தவர் நிச்சயம் என்னைக் காப்பாற்றுவார். நீங்கள் போகலாம்'' என்று தெளிவாகச் சொல்லிவிட்டு யோக நிஷ்டையில் ஆழ்ந்து விட்டான்.

ஆறாவது ஆண்டு பூர்த்தியான அந்த நாளில் இடியும், மின்னலும் கிரஹபதியைத் தாக்கியது. அதனால் கிரஹபதிக்கு எந்த சேதமும் இல்லை.

சிவபெருமான் ரிஷபவாகனத்தில் உமா தேவியோடு காட்சி அளித்தார்.

"கிரஹபதி! எழுந்திரு... இனி உனக்கு மரணமில்லை. ஒவ்வொரு கிரஹத்திலும் நீ இன்றிச் செயல்கள் நடைபெறாது. எல்லா தேவர்களும் உன் மூலமாகவே அவிர்ப்பாகம் பெற முடியும். இந்திர வடிவம் எடுத்து உன்னை சோதித்ததால் இந்திரனுக்கும், யமனை வென்றதால் யமனுக்கும் நடுவிலுள்ள திசைக்கு நீ தலைவன். அதோடு நீ பூஜித்த இந்த லிங்கம் இன்று முதல் அக்னிலிங்கம் என்றழைக்கப்படும். அழிவற்ற இந்த லிங்கத்தை முறைப்படி வழிபடுபவருக்கு ஆயுள் அதிகரிப்பதோடு இடியாலும் மின்னலாலும் ஆபத்து நேரிடாது'' என வரமளித்தார்.



திறனைக் கண்டுபிடியுங்கள்!

பல்லுயிர் ஓம்பிடு பகுத்துண்டு வாழ்ந்திடு!

நூலோர் தொகுத்த நல்லறங்கள்
நூறு நூறாய் இருந்தாலும் –
மேலாய் நிற்கும் அறம் எதுவோ?
மெல்ல எனக்கும் சொல்லுங்கள்.

கோயில் பலவும் கட்டுவித்தல்
குளங்கள் பலவும் வெட்டுவித்தல்
நோயில் வாடும் ஏழையர்க்கு
நோய்கள் தீர உதவிடுதல்...

பாதை ஓரம் மரம்நடுதல்,
பள்ளிக் கூடம் வைத்திடுதல்,
அனைத்தும் நல்ல அறங்கள்தாம்...
அதற்கும் மேல்ஓர் அறம் உண்டாம்...

கொல்லா நோன்பை மேற்கொள்தல்
குறிப்பாய் நல்லறம் என்றாலும்...
பல்லுயிர் ஓம்பிப் பகுத்துண்ணல்
பாரே போற்றும் நல்லறமாம்!

– ரா. பொன்ராசன்

பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை.

கோடை விடுமுறைப் போட்டி - 1 — முடிவு

விடுமுறை என்பதால் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நிறைய பேர் பந்தல், மின்மினியில் தவறு செய்திருந்தார்கள். சரியான விடை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்


1. சி. வனிதா, ஆண்டரசன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
2. ஆர். தெய்வமணி, கோப்பனூர்புதூர், கோவை மாவட்டம்.
3. கிர்த்திகா வாலண்டினா, மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்.
4. பி.எம். சபீதா, புதூர், திருச்சி மாவட்டம்.
5. ஏ. கார்த்திகேயன், ராணிப்பேட்டை.
6. ஆர். காயத்ரி, தென்திருப்பேரை, தூத்துக்குடி மாவட்டம்.
7. எஸ். மைத்ரேயி, வெள்ளக்கோவில் - 638 111.
8. ப. இராம்குமார், குளித்தலை, கரூர் மாவட்டம்.
9. ஓ. சத்யப்பிரியா, சூலூர் வழி, செலக்கரிச்சல் - 641 658.
10. வி. மிதுன், திருப்பூர் - 641 604.
11. சு. சுஜாதா, முத்தியால்பேட்டை, பாண்டிச்சேரி - 3.
12. பு. விஜயராகவன், காந்தி நகர், வேலூர் - 6.
13. டி. சந்தியாதேவி, பெம்ல் நகர் (அஞ்சல்) கோலார் தங்கவயல் - 563 115.
14. ஜெ. சங்கீதா, மேலகரம், தென்காசி.
15. சீ. எழில், செனாய்நகர், சென்னை.

சரியான விடை

1. நடனம், 2. பந்தல், 3. பட்டம், 4. சிலம்பு, 5. விரதம், 6. மின்மினி.


பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

விந்தை வளையம்




3 செ.மீ. அகலமும் 22 செ.மீ. நீளமும் உள்ள தாளை எடுத்துக் கொள்ளுங்கள். தாளின் இட, வல முனைகளில் + குறி இடுங்கள். பசையை இடது ஓரத்தில் தடவுங்கள். இடபக்க + குறியை வலபக்க + குறியுடன் ஒட்டுங்கள். இப்போது வளையத்தின் நடுவில் ஒரு மடிப்பு ஏற்பட்டிருக்கும். இதற்கு 'மோபியஸ் வளையம்' என்று பெயர். ஆகஸ்ட் பெர்டினான்ட் மோபியஸ் என்ற ஜெர்மானிய கணித மேதையால் கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

இந்த வளையத்தின் நடுவில் கத்தரியால் வெட்டுங்கள். இப்போது என்ன கிடைக்கும்? இரண்டு தனித்தனி வளையங்கள் கிடைக்கும் என நினைத்திருப்பீர்கள். ஆனால் கிடைப்பதோ ஒரே ஒரு பெரிய வளையம்தான். மீண்டும் பெரிய வளையத்தின் நடுவே வெட்டுங்கள். இப்போது இன்னும் பெரிய வளையம் கிடைக்குமென நினைத்திருப்பீர்கள். ஆனால் இப்போது கிடைப்பதோ ஒன்றுக்குள் ஒன்றாக இரண்டு வளையங்கள். இந்த விந்தை வளையத்தைச் செய்து பார்த்து மகிழுங்கள்!



கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்




NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்




NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்




NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்



NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

சீனக்கரடி வரையலாம்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் சீனக்கரடி உருவாகி விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!

தலை: K3 → H5 → G8 → H9 → L11 → N11 → R9 → S8 → R5 → O3 → K3


உடல்: H9 → E12 → E14 → H16 → R16 → U14 → U12 → R9

இடது தோள்: F11 → H11 → L14 → L16

வலது தோள்: T11 → R11 → M14 → M16

இடது கால்: H16 → F16 → E17 → E21 → H24 → L24 → L22 → I16

வலது கால்: R16 → T16 → U17 → U21 → R24 → N24 → N22 → Q16



நன்றி: லிட்டில் ஆர்க்

ஒன்பதாம் வீடு

11. தப்பினர்!

இரவு வெகு நேரம் தூக்கம் இல்லாமல் இருந்ததால், காலை விழிப்புப் பலருக்குத் தாமதமாகவே வந்தது.

அம்புஜம் டீச்சரும், மற்றவர்களும் எழுந்திருக்கும் போது கிட்டத்தட்ட காலை ஏழு மணி இருக்கும். அதுவும் காபிக்காரர்கள் கொடுத்த 'காப்பி, டீ' குரல் கேட்டிருக்கவில்லையானால் அப்புறமும் கூடத் தூங்கி இருப்பார்கள்.

வண்டி அரக்கோணத்தைத் தாண்டி விட்டது. கடும் மழையின் சாயல் அந்தப் பக்கம் கொஞ்சம் கூட இல்லை. எல்லோரும் பல்லைத் தேய்த்துக் கொண்டு, காப்பி, டீ அருந்தினார்கள்.

ரயில் சென்டிரலுக்கு எட்டேகால் மணிக்குள் போய்ச் சேர்ந்து விடும் என்று பேசிக் கொண்டார்கள். முகம் கழுவித் தலைவாரி ஆடை திருத்திப் பொருட்களைச் சரி பார்க்கும் வேலையில் எல்லா மாணவிகளும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

'டீச்சர்! ரகுமான் சார் கையெழுத்துப் போட்ட படத்தை இதோ இந்தப் பெட்டியில் வைக்கிறேன்' என்று சித்ரா சொன்னது தமிழரசி டீச்சருக்கு திடீரென்று நினைவுக்கு வந்தது. தமிழரசி டீச்சர் எழுந்து பார்த்தார். பெட்டி பத்திரமாக இருந்தது. அவர் மனதுக்கு நிம்மதியாக இருந்தது.

அடுத்து 'எங்கே சித்ரா' என்று பார்க்க ஆரம்பித்தார். அவருடன் மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர். எல்லோரும் வண்டி முழுக்கத் தேடினர். சித்ரா அந்த ரயிலில் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்தது.

அம்புஜம் டீச்சருக்கு அவசரம் புரிந்தது. தானே எழுந்து சென்று அங்குமிங்கும் பார்த்தார்! தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இரு பெட்டிகளிலும் மற்றவர்களையும் தேடச் சொன்னார்!

'சித்ரா இருக்கிறாள்!' என்று யாரும் சொல்லவில்லை! பக்கென்றது எல்லோருக்கும்.

'சரி! டாய்லெட் போயிருக்கலாம். இன்னும் பத்து நிமிடம் பார்ப்போம்' என்று ஆசிரியர்கள் எண்ணினார்கள். அதற்குள் நான்கு பாத்ரூமுக்கு முன்னேயும் சென்று உள்ளே கேட்குமளவுக்கு ஓங்கிக் குரல் கொடுக்கலாமா என்றும் யோசித்தார்கள்.

"அது வேண்டாம்! நான்கு பேர் பாத்ரூம் வாசலில் நில்லுங்கள். சித்ரா வெளியே வருகிறாளா பாருங்கள்" என்று அம்புஜம் டீச்சர் ஆர்டர் போட்டார்.


பத்து நிமிடத்திற்கு மேல் ஆயிற்று! பாத்ரூமிலிருந்த நபர்களும் வந்து விட்டார்கள்! சித்ரா இல்லை!

டீச்சர்கள் மனம் பதை பதைக்க ஆரம்பித்தது. 'வெளிக் காட்டிக் கொள்ளாமல், மற்ற பெட்டிகளிலும் தேடும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார்கள்! மாணவிகளை ஆங்காங்கே அமைதியாக இருக்கும்படியும் யாரும் எக்காரணம் கொண்டும் இருக்கையை விட்டு நகரக் கூடாது என்றும் கடுமையாகத் தெரிவித்துவிட்டு, நான்கு டீச்சர்களும் வேக வேகமாகத் தேடிப் புறப்பட்டார்கள்.

வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரு சுற்று முடித்து விட்டார்கள். மறு சுற்றும் சென்றார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

தமிழரசி டீச்சர் அழ ஆரம்பித்து விட்டார். அவரைச் சமாதானப்படுத்த சத்யா டீச்சரும் கிரிஜாவும் முயன்றார்கள்.

வெ. நல்லதம்பி



"டீச்சர் நீங்களே இப்படி அழுதால், மாணவிகளும் அழ ஆரம்பித்து விடுவார் கள்! நிறுத்துங்கள்" என்றனர்.

"வனிதா டீச்சருக்கு என்ன பதில் சொல்வேன்! அவர் சித்ரா மேல் உயிரையே வைத்திருக்கிறார்! அதைவிட அவள் பெற்றோருக்கு என்னவென்று சொல்வது" என்று அவர் கதற ஆரம் பித்தார்.

அம்புஜம் டீச்சர், மேற்கொண்டு தாமதம் செய்யாமல், டிக்கெட் கலெக்டர் களிடமும், வண்டியின் கார்டிடமும் புகார் செய்தார்! அவர்கள் புகாரை எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அப் படியே எழுதிக் கொடுத்தார்.

வண்டி பெரம்பூரில் நின்று புறப் பட்டது. சென்டிரலில் புகாரைப் பதிவு செய்ய ஏற்பாடு நடந்தது. பதிவு செய்வது இருக்கட்டும். அங்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல வந்துள்ள கூட்டத்தில் கோமதி மேடம், பெற்றோர்கள் இவர் களை எப்படிச் சந்திப்பது என்பது அம் புஜம் டீச்சருக்கும், மற்ற டீச்சர், மாண விகளுக்கும் ஒரு பெரிய தர்ம சங்கடமாக இருந்தது!

"சித்ரா எப்படி எங்கே காணாமல் போனாள்? நீங்கள் எல்லாம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று அவர் கள் வீசும் கேள்விக் கணைகளுக்கு எப் படி பதில் சொல்வது? யார் சொல்வது? என்னவென்று சொல்வது? கேட்டவர்கள் என்ன நினைப்பார்கள்? நினைக்கவே அம் புஜம் டீச்சருக்கு மார்பு வலிக்க ஆரம் பித்து விட்டது.

வண்டி சென்டிரல் நிலையத்திற்குள் நுழைந்து ஒன்பதாம் பிளாட்பாரத்தில் நின்றது.

வண்டியில் இருந்த குழந்தைகள் பலர் தங்கள் உறவினர் முகங்களைக் கண்டு கை யசைத்தனர். பிளாட்பாரத்தில் நின்றவர் களும் அவ்வாறே தங்கள் குழந்தைகளைக் கண்டு கையசைத்து வரவேற்புக் கூறினர்.

அம்புஜம் டீச்சர் அவசரமாக இறங்கி கோமதி மேடத்தைத் தேடினார். அவர் வனிதாவுடன் ஏதோ பேசிக் கொண்டு பெட்டியை நோக்கி வந்து கொண்டிருந் தார்!

'என்ன, என்ன ஆயிற்று?' கோமதி மேடம் தமிழரசியின் கலங்கிய கண்களைப் பார்த்தார்.

அதற்குள் அங்கு மாணவிகளும் மேடத் தைச் சுற்றிக் கூடி விட்டனர். கார்டு வந்து அம்புஜம் டீச்சரைப் பார்த்து, "வாங்க மேடம், உங்கள் கம்ப்ளெயின்டை போலீ சில் பதிவு செய்யலாம்" என்று அழைத் தார்.

"சாரி மேடம் எப்படிச் சொல்வ தென்றே தெரியவில்லை! நம் சித்ராவைக் காணோம்! காலையில்தான் சுமார் ஏழு மணி முதல் தேடிக் கொண்டிருக்கிறோம்! வண்டி முழுதும் தேடி விட்டோம்! எங்கள் கூடவே வந்தவள் எப்படி மாயமாய் மறைந்தாள் என்பது ஆச்சரியமாக இருக் கிறது. அவளுடைய பெற்றோருக்கு என்ன பதில் கூறுவது என்பது எனக்குப் புரிய வில்லை" என்று தழுதழுத்த குரலில் கூறி னார் அம்புஜம் டீச்சர்.

வனிதாவுக்குத் தூக்கி வாரிப் போட் டது. கோமதி மேடம் அதற்கு மேல் அதிர்ச்சி அடைந்தார்!

டிரெயின் கார்டு, "ஒருவேளை வழியில் எங்காவது ஸ்டேஷனில் குழந்தை கண்டு பிடிக்கப்பட்டிருந்தால் செய்தி இந்நேரம் சென்டிரல் நிலையக் கண்காணிப்பாள ருக்கு வந்திருக்கும். வாருங்கள் அவரையும் கேட்போம்" என்றார்.

அதையும் கவனிக்கும்படி ஆள்

அனுப்பிய கோமதி மேடம் 'எங்கே சித்ராவின் அப்பா அம்மா' என்று விரைந்து பிளாட்பாரம் முழுதும் ஒரு நொடியில் நோட்டம் விட்டார். வந்திருப்பதற்கான அறிகுறி தெரியவில்லை! அப்பாடா! கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளலாம். ஆனாலும் எப்படியும் உடனே கண்டு பிடித்தாக வேண்டுமே? அம்புஜம் டீச்சரிடமிருந்த கவலை இப்போது கோமதி மேடத்திடமும் பற்றிக் கொண்டது.

''சித்ராவின் அப்பா வரலையா?'' தமிழரசிதான் கேட்டார்.

வனிதா சொன்னார்: "நான்தான் சித்ராவின் பெற்றோரிடம் போய் 'சித்ராவை ரயில் நிலையத்திலிருந்து நானே அழைத்து வந்து விடுகிறேன்' என்றேன். அவர்களும் 'சரி' என்றார்கள். அதனால் அவர்கள் இங்கு வரமாட்டார்கள்.''


அம்புஜம் டீச்சருக்கு, மற்றவர்கள் உடன் இருக்கும் தைரியத்தில் 'சட்'டென்று யோசனை தோன்றியது!

''மேடம், ஏழாம் வகுப்பு மாணவி பிரேமாவின் அப்பா, போலீஸ் துணைக் கமிஷனராகத்தானே இருக்கிறார்? அவரிடம் சொன்னால் நேரடி உதவி கிடைக்கும்! விரைந்து சித்ராவைக் கண்டு பிடிக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்."

''உன் பேர் என்னானு கேட்டா மலை, மலை, மலை, மலை, மலை, மலை, மலைன்னு சொல்றியே?''

''அதான், ஏழு மலை சார்!''

— சக்தி. சரவணன்



"ஜோலார்பேட்டையில் வண்டி புறப்படும் போது சித்ரா இருந்தாள்! நான் குறிப்பாகப் பார்த்தேன். தூங்கப் போகும் முன் என்னிடம் அந்த ஓவியம் பற்றிக் கூடச் சொன்னாள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அதனால் ஜோலார்பேட்டை தாண்டிய பிறகுதான் ஏதோ நடந்திருக்கிறது" என்றார் தமிழரசி டீச்சர்!

குழந்தைகளையும் பெற்றோர்களையும் புறப்பட்டுச் செல்லும்படி விடை கொடுத்தார் கோமதி மேடம்.

வனிதா, அம்புஜம், தமிழரசி ஆகிய மூவரையும் அழைத்துக் கொண்டு, நேரே துணைக் கமிஷனரைச் சந்திக்கக் கிளம்பினர் பெரிய மேடம்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட அவர், ஜோலார்பேட்டை முதல் சென்னை வரை உள்ள எல்லாக் காவல் நிலையங்களுக்கும் அவசரச் செய்தி அனுப்ப ஏற்பாடு செய்தார்.

''கூடிய சீக்கிரமே கண்டுபிடித்து விடலாம்! நீங்கள் புறப்படுங்கள்! நம்பிக்கையோடு இருங்கள். தகவல் வந்ததும் நானே உங்களோடு தொடர்பு கொள்கிறேன்" என்று தைரியம் சொன்னார் அவர்.

நன்றி தெரிவித்துவிட்டுக் கிளம்பினர்.

அந்த மழைகால இருட்டில், பெயர் தெரியாத ரயில் நிலையத்தில் பெஞ்சில் படுத்திருந்த கைலி கட்டிய ஒரு முரடன் சித்ராவின் அழுகுரல் கேட்டு எழுந்தான். தனியாக ஒரு சிறுமி விசும்பிக் கொண்டிருந்ததைக் கண்ட அவன் அங்கு மிங்கும் திரும்பிப் பார்த்தான். யாரும் அருகில் இருப்பதாகத் தெரியவில்லை.

"என்னம்மா, யார் நீ? தனியா எங்கே வந்தே? ஏன் அழுறே?" என்றான் அதட்டலாக. சித்ராவுக்கு பயம் பற்றிக் கொண்டது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். உடனே அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றிட வேண்டும் என்ற வேகத்தில் சித்ரா வேகமாக நடந்தாள்.

அதற்குள் பெஞ்சுக்கு அருகே தரையில் படுத்திருந்த உருவமும் எழுந்தது! அது ஒரு கிழவி! ஒரு பெண் அங்கு நிற்பதைப் பார்த்த அக்கிழவிக்கு உடனே உதவ வேண்டும் என்ற



நினைப்பு வந்தது.

எழுந்து சென்று அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தாள்! வண்டி வந்து நின்றது, புறப்பட்டது ஆகியவற்றை அரைகுறைத் தூக்கத்தில் அக்கிழவி அறிந்திருந்தாள். எனவே அந்தப் பெண் சென்னை செல்ல வேண்டியவள் என்பதை நொடியில் ஊகித்து அறிந்து கொண்டாள்.

"என்னாம்மே! அப்படிப் போய் அந்தப் பொண்ணை உற்றுப் பார்க்கிறே! என் கிட்டே விடு! நான் உதவி ஒத்தாசை செய்யுறேன்! பார்த்தா பாவமா இருக்கு! எப்படியோ ரயிலை விட்டு இறங்கிடுச்சு போல இருக்கு" என்றான் அவன். அவன் பேச்சும், குரலும், முரட்டு உருவமும் அவன் நல்ல ஆள் இல்லை என்பதைப் பறைசாற்றின.

''வண்டியை விட்டு இறங்கிட்டியா கண்ணு! தூக்கக் கலக்கம் போல இருக்கு'' என்ற கிழவியிடம் சித்ரா 'ஆமாம்' என்று தலையாட்டினாள்.

"ஏய் கிழவி! உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ. நீ வாம்மா பொண்ணு, இந்த பெஞ்சிலே உக்காரு. உனக்கு என்னா வேணும் கேளு, நான் தாரேன்" என்று கூப்பிட்டான் முரடன்!

உலக விவகாரம் தெரிந்தவள் கிழவி. அந்த முரடனிடம் பெண்ணை விட்டு விடக்கூடாது என்று தீர்மானித்து விட்டாள். எனவே நாடகமாடினாள். நெருக்கடி நேரத்தில் யாருக்கும் ஒருவித சாமர்த்தியம் வந்து விடுமே! படிப்பறியாத அவளுக்கும் திறமை வந்து விட்டது.

'நீ, மெட்ராஸ் பொண்ணுல்ல! உங்க அம்மாவை எனக்கு நல்லாத் தெரியும்மா! மெட்ராசுக்கு மேற்காலேதானே உங்க ஊரு!'' என்று பேசிய வண்ணம், சித்ராவை அங்கிருந்து மெதுவாக நகர்த்திக் கொண்டு போனாள்.


சித்ரா "ஆமாம்! குரோம்பேட்டை" என்றாள்.

கெட்டிக்கார கிழவி சித்ரா 'குரோம் பேட்டை' என்று எடுத்துக் கொடுத்தவுடன், "ஆமாமா! குரோம்பேட்டைதான்! அம்மா, சவுகரியமா இருக்குதா?'' என்று ஒப்புக்குக் கேட்டாள்.

சித்ரா "ஆமாம்'' என்றாள்.

''அப்பா இன்னும் அதே தொழிலிலேதான் ஓடியாடிக் கொண்டு இருக்கிறாரா?'' என்று மேலும் கேட்டாள் கிழவி. இவ்வாறு பொதுப்படையான கேள்விகளைக் கேட்டவுடன் அதற்கும் சித்ரா 'ஆமாம்' போட்டாள்.

கிழவி கேள்விகளைக் கேட்டு, அதற்குச் சித்ரா தந்த பதில்களையும் கேட்ட அந்த முரடன், அவர்கள் ஒருவருக்கொருவர்



''விரல் இல்லாத கால் தெரியுமா?''
''தெரியலியே?''
''ஃபெவிகால்தான்!''
– சொக்கம்பட்டி தேவதாசன்

தெரிந்தவர்கள் போலத்தான் இருக்கிறது என்று ஒதுங்கிக் கொள்ள முடிவு செய்தான்! இருந்தாலும் சந்தேகத்தை முழுமையாக நீக்கிக் கொள்ளவில்லை.

டிக்கெட் தரும் கவுண்டருக்குச் சற்று தூரம் தள்ளி, இருட்டாகவும் இல்லாமல், முழுதும் வெளிச்சமுமாக இல்லாத ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தாள் கிழவி. அங்கே சித்ராவை உட்கார வைத்தாள். தானும் உட்கார்ந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாகப் பேச்சுக் கொடுத்து சித்ராவின் நிலையைக் கிழவி நன்கு தெரிந்து கொண்டாள்.

"ஏன் தாயி! ஒன்னு சொல்லுறேன்! நல்லாக் கேட்டுக்கோ! விடிஞ்சா உன்னைக் காணம்னு எல்லாரும் கத்தப் போறாங்க! பேப்பரிலே கூடப் போட்டாலும் போடுவாங்க! அதைத் தெரிஞ்ச சில சோமாறிப் பசங்க, அப்படிக் காணாமல் போன பொண்ணு எங்கேடா இருக்குன்னு தேடி அலைவாங்க. 'அபேஸ்' பண்ணப் பார்ப்பாங்க. அதுக்குன்னே கூட்டம் கூட்டமா சில அயோக்கலுங்க அலையுறாங்க! நான் என்ன சொல்றேன்னா, நீ காணாமல் போய் தவிக்கிற பொண்ணுன்னு முதலிலே யாருக்கும் தெரியக் கூடாது! நல்லாக் கவனிச்சுக்கோ! சந்தோஷமா, சரா சரியா இருந்துக்கோ! அப்புறம் நீயும், உன் வீட்டுலே வேலை செய்யுற ஆயாவா நானும் பக்கத்திலே இருக்கிற வேலூர் போவோம்! அங்கே எங்க மனுஷாலு இருக்காங்க! அவங்ககிட்டே விஷயத்தைக் காதும் காதும் வச்ச மாதிரி சொல்லி உன்னை பட்டணத்திலே சேர்த்திடச் சொல்றேன்! என்ன புரிஞ்சுதா?" என்றாள் கிழவி.

வேறு வழி எதுவும் தெரியாததாலும், கிழவியும் தன்னைப் போல் ஒரு பெண் என்பதாலும் சித்ரா தலையாட்டினாள்.

''தாயி, உன்னை மெட்ராசுக்கே கொண்டு வந்து விட்டுட்டு நான் வீடு திரும்புவேன்! ஆனா, என்கிட்டே அவ்வளவு காசு இல்லே தாயி!" என்று கிழவி சொன்னவுடன்தான், தானும் கையில் பைசா இல்லாத நிலையில் இருப்பதை சித்ரா உணர்ந்தாள்.

"பரவாயில்லை! காட்பாடிக்குப் போய், அங்கிருந்து டவுன் பஸ்ஸில் வேலூர் போய்க் கொள்ளலாம்! அதற்கு என்னிடம் காசு உள்ளது" என்றாள் கிழவி.

அவள் வேலூரில் உறவினர் வீட்டுக்கு சித்ராவை அழைத்துச் செல்லும் வழியில் காட்பாடியில் இறங்கி, டவுன் பஸ்ஸுக்காக சித்ராவுடன் பஸ் நிறுத்தத்தில் நின்றாள்! அப்போது அந்தப் பக்கம் இரு வாலிபர்கள் வந்தார்கள். வயது இருவருக்கும் சுமார் முப்பது இருக்கும். பேண்ட்டும், ஷர்ட்டும் போட்டிருந்தார்கள். ஒருவன் மொட்டை; இன்னொருவனுக்கு கிராப் தலை!

இருவரும் கிழவியையும் சித்ராவையும் பார்த்தார்கள். இருவரது தோற்றத்தையும் சித்ராவின் கசங்கிய உடையையும் வைத்துப் பார்த்தவர்களுக்கு அதில் ஏதோ ஒன்று உறுத்தியது. இரு வாலிபர்களும், கிழவியையும் சித்ராவையும் தொடர்வது என்று முடிவு செய்தார்கள்.

டவுன் பஸ் வந்தது. கிழவியும் சித்ராவும் ஏறினார்கள். கிழவிதான் சீட்டு வாங்கினாள். சித்ரா அவள் பக்கத்தில் போய் நின்று கொண்டாள். அந்த வாலிபர்களும் அதே பஸ்ஸில் ஏறினார்கள். அவர்கள்



பின் பற்றி வருவது கிழவிக்கோ, சித்ரா வுக்கோ தெரியாது.

கிழவி டவுன் பஸ்ஸை விட்டு இறங்கி சித்ராவை அழைத்துக் கொண்டு தன் உற வினர் வீட்டுக்குச் சென்றாள். அந்த வீடு ஒரு சிறு சந்துக்குள் இருந்தது. பட்டணத் துப் பெண்ணை சுத்தமாக இல்லாத அந்தச் சந்து வழியே அழைத்துச் செல்ல அந்தக் கிழவிக்கே கூச்சமாக இருந்தது.

"இதோ இங்கே நில்லும்மா" என்று சந்து முனையில் சித்ராவை நிற்கச் சொல்லிவிட்டு, "ஒரு நொடியில் வந்து விடு கிறேன்" என்று சொல்லிச் சென்றாள்!

சென்ற கிழவி சிறிது நேரம் ஆகியும் திரும்பவில்லை!

அங்குமிங்கும் அலைந்ததில் பொழுது போய்க் கொண்டே இருந்தது. கிழவி அலைவதைப் பார்த்து சித்ராவும் நொந்து விட்டாள்! அத்துடன் 'அரண்ட டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்களே, அதுபோல சித்ராவுக்கு இப்போது கிழவி மேலேயும் சந்தேகம் வந்தது.

இருட்டும் சமயம்! சித்ரா தீர்மானித் தாள்! இனி கிழவியை நம்பிப் பயனில்லை. எங்காவது போலீஸ் நிலையத்திற்குச் செல்ல வேண்டியதுதான் என்று தீர்மா னித்தாள்!

கிழவி சித்ராவை மறுபடியும் நிற்கச் சொல்லிவிட்டு முகவரி தேடிச் சற்றுத் தொலைவு போனாள்.

அதுதான் தக்க சமயம் என்று சித்ரா இரண்டு அடி எடுத்து வைத்தாள்.

"நில்லும்மா பாப்பா. நாங்கள் போலீஸ்காரர்கள்! மப்டி உடையில் இருக் கிறோம். உனக்கு எந்த ஊரு! இங்கே என்ன செய்யறே? எங்கே போறே?" என்று கரகரத்த குரலில் கேட்டபடி அருகில் வந்தான். மெட்டைத் தலை முரடன்.

மப்டியில் உள்ள போலீஸ்காரர்கள் என்றதும், சித்ராவுக்கு சிறிது நம்பிக்கை பிறந்து துணிவும் வந்து விட்டது. நடந்தவை அத்தனையையும் சொல்லி விட்டாள். 'போலீஸ் ஸ்டேஷனுக்கு வா! அங்கே புகார் கொடுத்து விட்டு, உன்னை சென்னைக்கு அனுப்பி வைக்கிறோம்' என்றான் கிராப் தலை. உடனே மற்றவனைப் பார்த்து, "நீ போய் ஆட்டோ கொண்டாறியா? என்று அவனை விரட்டினான்.


சித்ராவுடன் அந்த இரு வாலிபர்களும் ஆட்டோவில் புறப்பட்டனர். ஆட்டோ ஓடிக் கொண்டிருந்தது! நேரம் ஆனது. காவல் நிலையம் வரவில்லை! அதற்குப் பதில் காடு போன்ற பகுதி ஒன்று வந்தது. நகரை விட்டு தூரத்திற்கு ஆட்டோ போய்க் கொண்டிருந்தது.

'மற்றொரு ஆபத்தில் சிக்குகிறோமோ' என்றொரு உள்ளுணர்வு சித்ராவுக்கு வந்தது! "எங்கே காவல் நிலையம்?" என்று மெல்லிய குரலில் பயத்துடன் கேட்டாள்.

மொட்டை, "வாயைத் திறந்தால் தொலைத்து விடுவோம்! மூச்சு விடக் கூடாது! இதோ கத்தியைப் பார்" என்று காட்டி மிரட்டினான்! சித்ராவுக்கு நாடி நரம்பெல்லாம் ஒடுங்கியது போல் ஆகி விட்டது.

வேறு வழி இல்லாததால் சித்ரா அவர்களுடன் சென்றாள். மூவரும் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த ஒரு வீட்டுக்கு வந்தனர். தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்த பெண்மணி விளக்கைப் போட்டாள். "சென்னைக்குப் போக வேண்டிய பொண்ணு, தூக்கக் கலக்கத்துல இறங்கிடிச்சு. நல்ல காலம் எங்க கண்ணுல பட்டது. உன்னோட தங்கவைச்சுக்க. காலையில் சென்னை போகும் இலைக் கட்டு லாரியில் இதையும் கூட்டிக்கிட்டு போயிடறோம்" என்றான் ஒருவன்.

சித்ராவுக்குத் தூக்கம் வரவில்லை. பக்கத்தில் படுத்திருந்த பெண்மணியைக் காணவில்லை. கதவு மூடியிருந்தது. வெளியே மெல்லிய குரலில் பேசுவது கேட்டது. மெல்ல வந்து காது கொடுத்துக் கேட்டாள். "சென்னைல பரமானந்தத்திடம் இந்தப் பெண்ணை ஒப்படைத்து விடு. ஒரு சிறுநீரகத்துக்கு ஒரு லட்சம்



வரை இப்போ தரானாம். வேணுமானா இரண்டு சிறு நீரகத்தையும் எடுத்துக்கிட்டு இரண்டு லட்சம் வாங்கிக்க, கண்ணுக்குக் கூட காசு தராங்களாம். சாமர்த்தியமா இருந்துக்க" என்ற பெண் குரல் இவர்களை வரவேற்ற வீட்டுக்காரப் பெண்மணியின் குரல்தான்!

மனிதர்களைக் கடத்தி சிறுநீரகத்தை அபகரித்துவிடும் மோசமான கும்பலின் பிடியில் சிக்கியிருக்கிறோம் என்பதை உணர சித்ராவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. இலைக் கட்டு லாரியில் விடியற்காலையில் சித்ராவை அழைத்துக் கொண்டு கிராப்பும், மொட்டையும் கிளம்பினர். இருவரும் சித்ராவை விட்டு இப்படி அப்படி கூட செல்லாது வந்தனர். வேலூருக்கு அருகே வரும்போது வானம் வெளுக்க ஆரம்பித்து விட்டது. அதோடு லாரியில் ஏதோ கோளாறு. டிரைவர் இறங்கி என்னென்னவோ செய்து பார்த்தார். லாரி பிடிவாதம் பிடித்து விட்டது. வேறு வழியில்லாமல் மூவரும் இறங்கிக் கொண்டனர்.

ஒரு சிகப்புக் கார் வந்தது. மொட்டை கையைக் காட்டியவுடன் கார் நின்றது.

"சார், ரொம்ப அவசரமா சென்னை போகணும். இந்தப் பெண்ணுக்கு உடம்பு சரியில்லை. கொஞ்சம் மனசு வையுங்க" என்று கைகூப்பினான் கிராப் தலை. உதவும்படிக் கெஞ்சினான் மொட்டை.

கார்காரர் உதவும் மனமுடையவராக இருந்தார். அதோடு காரில் அவர் ஒருவர் மட்டுமே இருந்தார். சித்ராவின் தோற்றம் அவருக்கு ஏதோ சந்தேகத்தைக் கொடுத்தது. கதவைத் திறந்துவிட்டு ஏறிக் கொள்ளச் சொன்னார்..

"உனக்குப் பிடித்தமான வெளிநாடு எது?"

"சிங்கப்பூர்!"

- கடலூர் கன்னியப்பன்

கார் விரைந்தது. பின் சீட்டில் இரண்டு பேர்களுக்கு நடுவே பயந்தபடி உட்கார்ந்திருந்த சித்ராவின் கோலம் காரை ஓட்டி வந்த மணிவர்மாவின் சந்தேகத்தை அதிகரித்தது.

கார் ஒரு பெரிய கிறக்கத்துடன் நின்றது. "என்ன சார்? கார்ல ஏதாவது கோளாறா?" என்று கலவரத்துடன் கேட்டான் மொட்டை.

"அதெல்லாம் இல்லை. நீங்க ரெண்டு பேரும் கீழே இறங்கி கொஞ்சம் தள்ளினால் சரியாயிடும்" என்று சிரித்தார் மணிவர்மா.

வேறு வழியில்லாமல், கிராப்பும் மொட்டையும் இறங்கி பின்னால் சென்று தள்ள ஆரம்பித்தார்கள்.

காரில் பலத்த இரைச்சல், குலுக்கல்! மணிவர்மா முகத்தைத் திருப்பாமல் "நீ ஓவியம் வரையும் சித்ராதானே? தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் பார்த்திருக்கிறேன்!" என்றார்.

"ஆமாம். என்னை இவர்கள் கடத்திக் கொண்டு போகிறார்கள்! இவர்கள் சிறு நீரகத்திற்காக மனிதர்களைக் கடத்துபவர்கள்" என்றாள் சித்ரா.

கார் சங்குவார் சத்திரத்தை நெருங்கியது. "இங்கே காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று இறங்கினார் மணிவர்மா. வேறு வழி இல்லாமல் சித்ராவுடன் மொட்டையும் கிராப்பும் இறங்கினர். ஒரு ஓட்டலில் காப்பிக்கு ஆர்டர் தந்துவிட்டு உட்கார்ந்தனர். மணிவர்மா எழுந்து சென்று யாருக்கோ டெலிபோன் செய்தார். காப்பி குடித்து முடித்ததும் வெளியே வந்தனர். "சிகரெட் வாங்கிக் கொண்டு வருகிறோம்" என்று கிராப்பும் மொட்டையும் பின் தங்க மணிவர்மா சித்ராவுடன் காருக்கு வந்தார்!

நேரம் ஓடியது. சிகரெட் வாங்கப் போன இருவரும் திரும்பவில்லை. அரை மணி நேரம் வரை மணிவர்மா பொறுமையாகக் காத்திருந்தார்.

"இனிமேல் காத்திருப்பதில் பயனில்லை சித்ரா. நான் போன் பண்ணியதில் இருவரும் உஷாராகி ஓடிவிட்டார்கள். இனி அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. கிளம்பலாம்'' என்றார். கார் சென்னையை நோக்கி விரைந்தது.

பெரிய மேடமும், வனிதாவும் சித்ரா காணாமல் போய்விட்டதை அவளுடைய பெற்றோரிடம் கூற வேண்டியது மிக அவசியம் என்று கருதினர். நாளைக்கு பெரிய குற்றமாகி விடும் என்று அவர்கள் அஞ்சினர். நேராகப் போகுமுன், அவர்களுக்கு டெலிபோன் செய்துவிட்டுப் பிறகு போவது நல்லது என்று எண்ணினார் பெரிய மேடம்.

தேனாம்பேட்டையில் அவர்கள் கொடுத்திருந்த முகவரியோடு அவசரம் என்றால் தொடர்பு கொள்ள வேண்டியது என்று ஒரு தொலைபேசி எண்ணையும் தந்திருந்தார்கள். அந்த எண்ணுக்கு வனிதா போன் செய்தார். பசுபதியுடன் பேச வேண்டும் என்றார். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பசுபதி பேசினார்.

"சுற்றுலா நன்றாக இருந்ததா?" என்று கேட்ட பசுபதி, "மேடம், சித்ராவை நேராக ஹாஸ்டலுக்குக் கூட்டிக் கொண்டு போய் விடுங்கள். நாங்கள் இப்போ இருக்கும் வீட்டைக் காலி செய்து கொண்டிருக்கிறோம். பயங்கரமான பிஸி. புது வீட்டுக்குப் போனதும் நாளை மாலை நாங்களே சித்ராவைப் பார்க்கிறோம்''என்று முந்திக் கொண்டு கூறினார்.

''என்னது எட்டாவது வீட்டுக்கா!'' என்று ஆவலுடன் கேட்டார் வனிதா.

"ஆமாம்." என்று டெலிபோனை வைத்தார் பசுபதி.

''கடவுளே, நாளைக்குள் சித்ரா கிடைத்துவிட அருள் செய்" என்று வேண்டிக் கொண்டார் வனிதா.

(வளரும்)


வளர்ப்பு மீன்கள்

வண்ண வண்ண மீன்கள்! – நீரில்
வளைய வரும் மீன்கள்!
கண்ணைக் கவரும் மீன்கள்! – உள்ளங்
களிக்கச் செய்யும் மீன்கள்!

மின்னி மின்னி நீந்தும்! – அழகை
மேனி வண்ணம் ஏந்தும்
சின்னஞ் சிறிய மீன்கள்! – எழில்
திகழும் வண்ண மீன்கள்!


கண்ணாடியால் தொட்டி – அதில்
காணும் மீன்கள் சுட்டி!
எண்ண இனிக்கும் மீன்கள்! – எனது
இனிய வளர்ப்பு மீன்கள்!

— திட்டக்குடி முத்துமுருகன்




யாருடைய தலையில் எது இருக்க வேண்டும்? — போட்டி












இங்கு அரசர், கரகம், கிருஷ்ணன், கிரிக்கெட் வீரர், சுதந்திரப் போராட்ட வீரர், ஆசிரியர், காய்கறிக்காரி, போலீஸ், வண்டி ஓட்டுபவர், சீக்கியர், கோமாளி, மீன் பிடிப்பவர் என பன்னிரெண்டு படங்கள் உள்ளன. இப்படங்களின் தலையில் உள்ள பொருட்கள் மட்டும் மாறியுள்ளன. போட்டி இதுதான். யாருடைய தலையில் எது இருக்க வேண்டும்? என்பதைக் கண்டுபிடித்து தபால் கார்டில் எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.7.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097





யாரும் வேண்டாம்!

கதை : அ.சு. கிருஷ்ணன்
படம் : சசி




பாவம் பூனை!
உங்களையே விரட்டப் போறேன்.
யாரையும் அண்டாதே! ஒரு நாள் அவஸ்தைப் படப்போறே!
எனக்கு யாரும் வேண்டாம்.
மறுநாள். ஆடு மேய்த்துக் கொண்டு சிறுவன் வர –
லொள்... லொள்...
சிறுவனும் ஆடும் தலைதெறிக்க ஓடினர்.
உன்னோட அட்டகாசத்துக்கு அளவேயில்லை.
நீங்களும் இங்கே இருக்கக் கூடாது.
இது என்ன உனக்கு எழுதிக் கொடுத்தத் தெருவா?
ஆமாம்.
பயங்கரமான சண்டைக்குப் பின் மற்ற நாய்கள் பக்கத்துத் தெருவிற்கு குடி பெயர்ந்தன.


அப்பாடா! எல்லோரையும் விரட்டியாச்சு!
ஒரு நாள் ஜிம்மி கோழியைத் துரத்திக் கொண்டு சென்றது.
கோழி இடிந்த பங்களாவுக்குள் செல்ல ஜிம்மியும் ஓடியது.
அங்கிருந்த உடைந்த கண்ணாடியில் ஜிம்மியின் உருவம் நான்காகத் தெரிய —
யார் இது? புதுசா வந்திருக்கிறது? ஓடு.
என்னது? என்னை மாதிரியே பேசறே?
ஜிம்மி கண்ணாடி மீது பாய்ந்து சண்டை போட்டுக் கத்தியது.
என்னது ஜிம்மி ரொம்ப நேரமா கத்துச்சே! சத்தத்தையே காணோம்.
வா, போய் பார்க்கலாம்.



தெரு நாய்கள் இடிந்த பங்களாவிற்குள் நுழைந்தன.
ஐயோ! ஜிம்மி மயங்கி கிடக்கே!
தண்ணீர் கொடு.
தண்ணீர் கொடுத்ததும் கண் விழித்தது ஜிம்மி.
ஜிம்மி இங்கேதான் யாரும் இல்லையே! ஏன் சண்டை போட்டே?
அங்கே பார் என்னை மாதிரி நாலு பேர்.
இது கண்ணாடி. உன் உருவம்தான் தெரியுது.
உன்னையே பார்த்து சண்டை போட்டிருக்கே!
உண்மையாகவா?
ஆமாம்.
இனி நீங்களும் இங்கேயே தங்கலாம்.
நன்றி.



காற்றுத் தேவன்

காட்சி 1

இடம்: வருண் வீடு

அப்பா: வருண்! வருண்! எங்கே போயிட்டான் இவன்? சொன்ன வேலையைச் செய்ய மாட்டானே?

வருண்: அப்பா... கூப்பிட்டீங்களா?

அப்பா: மணி ஒன்பது தான் ஆகப் போறது. அதுக்குள்ளே படுக்க ஆயத்தமா? உனக்கு எத்தனை தடவை சொல்லிட்டேன். அதோ பார் 'பாத்ரூம்' பக்கத்துல இருக்கிற அந்தப் பிளாஸ்டிக் குப்பைக் கூடை நிரம்பி வழியறது... வேலைக்காரி மூணு நாளா வரல்லே... அம்மாவுக்குக் கால்லே அடி... அதனாலதான் உன்னைக் கொண்டு போய் கீழே தொட்டியிலே கொட்டச் சொல்லிட்டுப் போனேன். இன்னிக்கும் கொட்டலே. அங்கே போய்ப்பாரு. ஒரே துர்நாற்றம்...

வருண்: வேலைக்கார அம்மா நாளைக்கு வந்துடுவாங்க... எனக்கு இப்போ ஒரே தூக்கமா வருது... படுக்கப் போறேன்!

காட்சி 2

இடம்: வருண் வீடு

காயத்ரி: வருண் அண்ணா, மாசுக் கட்டுப்பாடு பற்றி பேச்சுப் போட்டி இன்னிக்குத்தானே?

வருண்: ஆமாம்! அமர்க்களமா தயார் பண்ணியிருக்கேன். பாரதியாரோட வசன கவிதையிலேயிருந்துகூட கொஞ்சம் எடுத்துப் பேசப் போறேன்!

காயத்ரி: எங்கே கொஞ்சம் பேசிக் காண்பி!

அருண்: ம்! காற்றே வா! மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு வா வா... காற்று நம்மைக் காத்திடுக! மலைக்காற்று நல்லது! கடற்காற்று மருந்து! வான்காற்று நன்று. அவன் வரும் வழியில் சேறு தங்கலாகாது. நாற்றம் இருக்கலாகாது! அழுகின பண்டங்கள் போடலாகாது. புழுதி படிந்திருந்திருக்கலாகாது. எவ்விதமான அசுத்தமும் கூடாது. அவன் வரும் வழியில் சோலைகளும், பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்! சக்தியின் பல வடிவங்களில் காற்றும் ஒன்று! காற்றுத் தேவனே வா... உன்னை வணங்குகின்றோம்!

காற்று: (பலத்த சிரிப்புடன்) ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா!


வருண்: காயத்ரி, நீயா சிரித்தாய்?

காயத்ரி: இல்லையே!

காற்று: ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா!

காயத்ரி: வருண்!... இந்த அறையில் நம்மைத் தவிர வேறு யாருமே இல்லை...

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



''அவர் கோந்து வியாபாரம் செய்கிறார் என்று எப்படி கண்டுபிடிச்சே?''

''பையனை எதற்கெடுத்தாலும் 'கம்'முன்னு இரு 'கம்'முன்னு இருன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறாரே!''

– இரா. கணேசன்

ஆனால் சிரிப்பொலி மட்டும் பயங்கரமாகக் கேட்கிறதே... எனக்குப் பயமாக இருக்கிறது!

காற்று: பயப்படாதீர்கள் குழந்தைகளே! நான்தான் காற்றுத்தேவன். என்னைப் பார்க்க முடியாது. கூப்பிட்டாயல்லவா? வந்து விட்டேன்!

காயத்ரி: ஓ! உன்னால் பேசக்கூட முடியுமா?

காற்று: ம்! உண்மையில் உங்கள் பேச்சுகளை நான்தானே சுமந்து மற்றவர்கள் செவிகளுக்கு எடுத்துச் செல்கிறேன்!...

வருண்: காற்றுத் தேவா... நீதான் காற்று என்றால் நேற்று எங்கே போயிருந்தாய்?... நேற்று இரவு மின்விசிறி இருந்தும் பலனில்லை...

காயத்ரி: இப்பொழுதெல்லாம் நீ அடிக்கடி எங்கேயாவது ஓடிப் போய் ஒளிந்து கொள்கிறாய்!

காற்று: ம்... என்ன செய்வது... வர வர எனக்கு விரோதிகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் என் முதுகில் ஏறி சவாரி செய்து என் ஓட்டத்தையும், மகிமையையும் குறைத்து விடுகிறார்கள், பொறுக்க முடியவில்லை.

வருண்: என்ன உனக்கும் விரோதிகளா?

காற்று: ஆமாம்! சில நேரத்தில் எனக்கே மூச்சுத் திணறுகிறது. என் விரோதிகள் உள்ளும் புறமும் என்னைச் சூழ்ந்து கொண்டு என்ன பாடு படுத்துகிறார்கள் தெரியுமா?

வருண்: சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் காற்றுத் தேவா!

காற்று: வருண்! கண்ணுக்குத் தெரிவது தூசும் குப்பையும் – இவைகளைச் சேர்த்துக் குவித்து ஓரளவிற்கு அப்புறப் படுத்தி விடலாம். ஆனால் இந்த விஷ வாயுக்கள் இருக்கின்றனவே... அப்பப்பா! எதிர்காலத்தை நினைத்தாலே பயமாக இருக்கிறது.

வருண்: காற்றே, நீங்கள் ஐம்பூதங்களுள் ஒன்று... உங்களுக்கே பயமா?

காற்று: ஆமாம், எனது சகோதரர்கள் நீர், பூமி இவர்கள்கூட, பாவம் பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

காயத்ரி: அப்படியா?

காற்று: ம்... இதோ பார் காயத்ரி! நீங்கள் வாழ்கின்ற இந்தப் பூமியைச் சுற்றிலும் முந்நூறு கிலோமீட்டர் உயரத்திற்கு நான் வியாபித்திருக்கிறேன். ஆனால் இதில் நான் பூமியின் அருகில் மட்டும் அடர்த்தியாக இருக்கிறேன். மேலே போகப் போக அடர்த்தி குறைந்து மிக மிக மென்மையாக உலவிக் கொண்டிருப்பேன். நைட்ரஜனும், ஆக்ஸிஜனும்தான் எனது பிரதான உட்பொருள்கள். இதைத் தவிர கார்பன் டை ஆக்ஸைடு, ஓஸோன், ஆர்கான், ஹீலியம், நீராவி, புகை, தூசுத் திரள் இவைகளும் மிகச் சிறிய அளவில் என் மண்டலத்தில் நிறைந்துள்ளன.

காயத்ரி: நீ தரும் ஆக்ஸிஜன் மட்டும் இல்லாவிட்டால் உயிர்களே உயிர் வாழ முடியாது இல்லையா?

காற்று: ஆமாம்! அதனால்தான் நடப்பதை நினைத்து கவலைப் படுகிறேன். உங்கள் வாழ்க்கையை அனுபவிக்க எவ்வளவோ விதமான பொருட்கள் தினமும் தேவைப்படுகின்றன. இந்தப் பொருட்களை உலகில் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் உற்பத்தி செய்து தருகின்றன. இப்பொருட்கள் உற்பத்தியாகும் அதே நேரத்தில் மிகப் பெரிய அளவிற்கு விஷத் தன்மை நிறைந்த கழிவுப் பொருட்கள் தோன்றுகின்றன. பலவகை புகை போக்கிகள் வெளிப்படுத்தும் புகை மண்டலமும் கதிர்வீச்சுக் கற்றைகளும் என்னை மாசுபடுத்தி விடுகின்றன. விஷத் தன்மை நிறைந்த தொழிற்சாலைக் கழிவு நீரும், அருகிலுள்ள ஆறுகளிலோ, குளங்களிலோ கடலிலோ கலந்து தண்ணீரை

மாசுபடுத்தி வருகின்றன.

காயத்ரி: இப்படியெல்லாம் நடக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும் காற்று அண்ணா?

காற்று: நிறைய செய்ய வேண்டும். மனிதன், தான் உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், வசிக்கும் வீடும் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறான். ஆனால் அவன் உயிர் காக்கும் பிராண வாயுவைச் சுமந்து வரும் என்னைப் பற்றியோ, அவன் தாகம் தீர்க்கும் நிலத்தடி நீரைப் பற்றியோ அப்படித் தீவிரமாக எண்ணுவதில்லையே...

வருண்: அப்படியென்றால்?

காற்று: எங்கே வேண்டுமானாலும் தொழிற்சாலைகளைக் கட்டி சுற்றுப்புறத்தை மாசுபடுத்தி விடுகிறார்கள்! நாடுகளுக்கிடையே ஏற்படும் போர்களும் அணு ஆயுதச் சோதனைகளும் என்னைத் திணற வைத்துக் கொண்டிருக்கின்றன! ஆங்காங்கே வன்முறையாளர்களின் வெடிகுண்டுகள் வேறு...

(வெளியிலிருந்து பயங்கர சிரிப்பொலிகள் தொடர்ந்து கேட்கிறது)

பூதங்கள்: ஹாஹ்ஹா...ஹாஹ்ஹா...ஏ! தூய காற்றே நீ இங்குதான் பேசிக் கொண்டிருக்கிறயா?... நாங்கள் உன்னைத் தான் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம்.

முதல் பூதம்: ஆமாம்! நன்றாகச் சிக்கிக் கொண்டாய்! உன்னை நாங்கள் விழுங்கக் காத்திருக்கிறோம். சீக்கிரம் வெளியே வா!

வருண்: காற்றுத் தேவா! யார் இவர்கள்?

காற்று: சற்று முன் நாம் பேசிக் கொண்டிருந்த தீய பூதங்கள் இவைகள்தான். ஒன்று அணுமின் நிலையங்கள் வெளிப்படுத்தும் கதிர்வீச்சுப் பூதம்! அடுத்தது தொழிற்சாலைக் கழிவுநீர் வெளிப்படுத்திய ரசாயனக் கலவை பூதம்! அடுத்தது தேங்கிக் கிடக்கும் குப்பைகளில் தோன்றிய அசுத்தப் பூதம்! இவைகள்தான் என்னை துரத்திக் கொண்டே வருகின்றன!

வருண்: இவைகளிலிருந்து இப்பொழுது எப்படி தப்பிக்கப் போகிறாய்?

காற்று: என் எதிர்காலம் உங்கள் கையில். இப்பொழுதே தெரிந்து கொள்ளுங்கள்! கழிவுப் பொருள்கள் வெளிப்படுத்தும் நச்சுத்தன்மைகளை முதலில் அகற்ற வேண்டும். கழிவு நீரில் சுண்ணாம்புச் சத்து சேர்த்தால் இந்த நச்சுத்தன்மை குறைந்து விடும். விஞ்ஞானிகள் அவ்வப்போது கண்டுபிடிக்கும் மாசுக் கட்டுப்



பாட்டுச் சாதனங்களைத் தொழிற்சாலைகள் கையாண்டால் பலவித நச்சுத்தன்மைகளை அழித்து விடலாம்.

காயத்ரி: வேறு என்ன செய்ய வேண்டும்?

காற்று: உலக அமைதிக்கு அனைத்து நாடுகளும் பாடு பட வேண்டும்! இதனால் போர்கள் ஒழியும்.

வருண்: சரி, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

காற்று: ஓ!... நல்லவேளையாக நினைவு படுத்தினீர்கள்! அதோ பாருங்கள்! உங்கள் பாத்ரூமில் மூன்று நாட்களாக அந்தப் பிளாஸ்டிக் கூடை, குப்பை நிறைந்து காணப் படுகிறது. அதிலிருந்து ஒருவித துர்நாற் றமும் வருகிறது. கொசுக்கள் அவற்றை மொய்த்தபடி இருக்கின்றன.

வருண்: எங்கள் வீட்டு வேலைக்காரம்மா மூன்று நாட்களாக வரவில்லை. அதனால்தான்...

காற்று: அதற்காக இப்படி விட்டு வைப்பது தவறு. இப்பொழுதே கொண்டு போய் கொட்டி விடுங்கள். உங்கள் தோட்டத்துக் குப்பைகளை உடனுக்குடன் பெருக்கி அப்புறப்படுத்துங்கள். அவற்றைக் கொளுத்தாதீர்கள். அப்புறம் உங்கள் தந்தை ஓட்டும் காரிலிருந்து அளவிற்கு அதிகமான புகை வெளிப்படுகிறது. சரி பார்க்கச் சொல்லுங்கள். கடைசியாக ஒரு வேண்டுகோள்.

காயத்ரி: என்ன வேண்டுகோள்?

காற்று: நான் உங்களைச் சந்தித்ததற்கு அடையாளமாக உங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரம் நடுங்கள்! செய்வீர்களா?

இருவரும்: செய்வோம் காற்றுத் தேவா!

காற்று: வருகிறேன். எனது ஆரோக்கியம் கெடாமலிருக்க இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்! வருகிறேன்.

பூதங்கள்: பிடியுங்கள்! அந்த சுத்தக் காற்றைத் துரத்திப் பிடியுங்கள்! பிடியுங்கள்! ஹாஹ்ஹா... ஏ சுத்தக் காற்றே, உன்னை விட மாட்டோம்!

வருண்: பொல்லாத பூதங்களே! நில்லுங்கள்! அந்தக் காற்றை ஒன்றும் செய்யாதீர்கள்! (என்று வருண் தூக்கத்தின் நடுவே கத்துகிறான்)

அப்பா: டேய் வருண்! என்னடா காத்து, பூதம்னு ஏதோ உளர்றே?

வருண்: என்ன உளறினேனா? இல்லேப்பா, தூக்கத்தில்தான் சரியா பேசியிருக்கேன்!

அப்பா: டேய், ஏதோ நீ கனவு கண்டிருக்கே? என்ன கனவுடா?

வருண்: இருங்கப்பா, மொதல்லே அந்தக் குப்பைக் கூடையைக் காலி செய்துட்டு வந்துடறேன்! அப்புறம் கனவைச் சொல்றேன்!



1 தா	மி	ர	2 ப	ர	ணி		3 கூ	4 டை
வ			ல்		ர			னோ
ர			வி		5 த		ளி	6 ச
ம்	ல	7 பா		8 நு		டி		ர்
		ர		ங்		ட்		
டி		ம்		கு		9 ஊ	ரு	ணி
றா	10 பு		து		டை			கோ
ற்			த்		ட்			ர்
11 கா	டு		12 வா	ஸ்	13 கோ	ட	கா	14 மா



படங்களும் உள்ளன. குழந்தைகளுக்கு மட்டும் அல்ல. கதை கூற விரும்புவோருக்கும் ஏற்ற புத்தகம்.

சமத்துவபுரச் சாமியார், ஜெ. எத்திராஜன், பக். 104 ரூ. 23/- சாரதா நூலகம், 72, கிருஷ்ணன் நகர், மூவரசம்பட்டு அருகே, சென்னை – 91.

பணத் திமிர் கொண்டு, தன் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளியின் மகனும், தன் பிள்ளையின் நண்பனுமான வேலனை சாதிப் பெயரால் கீழ்த்தரமாகத் திட்டிவிட, பிரச்னை பயங்கரமாகிறது. ஒரு நல்ல சாமியார் (சமத்துவபுரச் சாமியார்) எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி எல்லோரையும் நல்லவர்களாக வாழ வைக்கிறார். ஒரே மூச்சில் படிக்கத் தூண்டுவது நாவலுக்கு வெற்றி. எளிய நடை. படங்களும் உண்டு. நல்ல பயனுள்ள முயற்சி.

உண்மைக்கு அழிவில்லை!

படிக்காத பாடம், கமல வேலன், பக். 64, ரூ. 18/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14.

படிப்பதற்கும், மேடையில் நடிப்பதற்கும் ஏற்ற எட்டு நாடகங்களின் தொகுப்பு. ஆறு, ஏற்கெனவே கோகுலத்தில் வெளிவந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. ராமுவின் படங்கள் மேலும் அழகூட்டுகின்றன. சிறுவர் உலகத்திற்குப் பெரிதும் பயன்படக்கூடிய படைப்பு.

சிறுவர்களுக்கான சிறுகதைகள், முரு. முத்து, பக். 16, ரூ. 6/- ராஜலட்சுமி பதிப்பகம், 70பி, வ.உ.சி. ரோடு, மன்னார்குடி.

இராமகிருஷ்ணரின் உபதேசக் கதைகளைப் போல், 9 கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொரு கதையும் மிகச் சுருக்கமாக ஒரு உபதேசத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. மிக மிக எளிய நடை.

மணிக் கதைகள், புலவர் அரசுமணி, பக். 88, ரூ. 15/- சகுந்தலை நிலையம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை – 1.

பணத்தாசை பிடித்து விட்டால் மனிதன் எப்படியெல்லாம் தருமத்தை மறந்து தீயவனாகிறான் என்பதையும், இன்னா செய்தாரையும் பொறுக்கும் தெய்வீக குணத்தையும், வீரத்திற்கும் விவேகத்திற்கும் உள்ள வேறுபாட்டையும், உண்மையே நிலைக்கும்; அதற்கு அழிவில்லை என்பதையும் மனதில் பதியவைக்கும் நான்கு நெடுங் கதைகள் இத் தொகுப்பில் உள்ளன. ஒரு படம் கூட இல்லையே!

அதிகச் செலவில் தயாரிக்கப்பட்ட ஆங்கிலப் படங்கள், மு.சேரன், பக். 104 ரூ. 20/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.

உலக சாதனை புரிந்த 40 ஆங்கிலத் திரைப்படங்களின் விவரங்கள், சுவையாகத் தரப்பட்டுள்ளன. நூலின் நோக்கம் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குவதாகும். அத்துடன் வெளியான ஆண்டு, தயாரிப்பாளர்கள் எதிர்கொண்ட பிரச்னைகள், அவை தீர்க்கப்பட்டவிதம், சரியான நடிக நடிகைகளைத் தேர்வு செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள், கதைச் சுருக்கம் போன்ற சுவையான தகவல்களும் தரப்பட்டுள்ளன. பொது அறிவுக்கு ஒரு விருந்து. வினாடி வினா நடத்துவோருக்குப் பெரிதும் பயன்படும் நூல்.

— ரே



என்ன காமாட்சி?

கணித ஆசிரியர் முதல் நாள் வைத்த பரீட்சை பேப்பர்களைத் திருத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார். காமாட்சியின் முறை வந்தது. அவள் ஓரளவு படிக்கக் கூடியவள்தான். இருந்தும் அந்தப் பரீட்சையை சரியாகச் செய்யவில்லை. காமாட்சியின் பேப்பரைத் திருத்தி முடித்த ஆசிரியர் கவலையோடு "என்ன காமாட்சி..." என்று முழுவதுமாகக் கேட்டு முடிப்பதற்குள் "ஏ. காமாட்சிங்க டீச்சர்" என்றாளே பார்க்கலாம்! ஆசிரியரே சிரித்து விட்டார்.

ஜி. ஜெயஸ்ரீ,
பதினோராம் வகுப்பு,
புனித மரியன்னை மகளிர்
மேல்நிலைப்பள்ளி,
சேலம் - 9.



சோப்புப் போட்டு...

தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பாடத்தை கவனிக்காமல் வேடிக்கை பார்த்த ஒரு மாணவனை எழுப்பி, "பேச்சு சுத்தமா இருக்கணும்னா என்ன செய்யணும்?" என்று கேட்டார். உடனே வேகமாக எழுந்த அவன் "சோப்புப் போட்டு நல்லா கழுவணும் சார்" என்றானே பார்க்கலாம்! வகுப்பில் சிரிப்பலை அடங்க ஐந்து நிமிடங்கள் ஆனது.

க. திருமால்,
துத்திப்பட்டு.



பிடித்த நூல் எது?

தமிழாசிரியர் பாடம் நடத்தி முடித்து விட்டு "உங்களுக்குப் பிடித்த நூல் ஒன்றை வரிசையாகச் சொல்லுங்கள்" என்றார். "சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள்" என்று ஒவ்வொருவரும் ஒரு நூலைச் சொன்னார்கள். கடைசி வரிசையில் தூங்கிக் கொண்டிருந்த மாணவனை அருகில் உள்ள மாணவன் எழுப்பி "உனக்குப் பிடிச்ச நூலை சொல்லுடா" என்றான். அவனும் வேகமாக எழுந்து "பட்டு நூல் சார்" என்றானே பார்க்கலாம்!

ந. துரை,
வெள்ளையாம்பட்டு.

பேச்சு சுத்தமாக இருக்க



களிமண் வெடிப்பது ஏன்?


புவியியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். அப்போது என் நண்பனை எழுப்பி "கோடை காலத்தில் களிமண் வெடிப்பது ஏன்?" என்று கேட்டார். குறும்புக்கார நண்பன் எழுந்து "களிமண்ணுக்குத் தண்ணீர் தாகம் எடுப்பதால் மேகத்தை நோக்கி வாயைத் திறக்கிறது சார்" என்றான். நாங்கள் சிரிக்க, ஆசிரியர் கோபமானார். "நான் ரெண்டு உதை கொடுத்தால் நீயும் வாயைத் திறந்திட்டு நிற்பே" என்றதும் அவன் மன்னிப்புக் கேட்டான்.


ஏ. குமார்,
வரிக்கல்.

போட்டுக் காட்டு?

தையல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் ஒவ்வொரு மாணவியாக வந்து பின்னிக் கொண்டிருக்கும் கூடையைக் காட்டுமாறு கூறினார். நாங்களும் வரிசையாகச் சென்றோம். என் தோழியின் கூடையைப் பார்த்த ஆசிரியர் "நல்லா இருக்கே, யார் பின்னியது?" என்று கேட்டார். "நான்தான் பின்னினேன்" என்றாள் தோழி. உடனே ஆசிரியர், "எங்கே போட்டுக் காட்டு" என்றதும் அவள் கூடையை மேலிருந்து கீழே போட்டாள். "நான் பின்னிக் காட்டச் சொன்னேன்" என்றார் ஆசிரியர் கோபத்துடன்.

– கே. சசிகலா,
மன்னார்குடி.





உடையவே உடையாது!

பள்ளியில் உணவு இடைவேளை. சாப்பிட்டு முடித்ததும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது என் நண்பன் தண்ணீர் பாட்டிலை தூக்கிப் போட்டு பிடித்துக் கொண்டிருந்தான். "தண்ணீரோட தூக்கிப் போடறே. உடையப் போகுது பாரு" என்றேன் நான். விளம்பரப் பாடலைப் பாடிக் கொண்டு "இது உடையவே உடையாது பாரு" என்று உயரமாகத் தூக்கிப் போட்டான். பாட்டில் பொத்தென்று விழுந்து உடைந்தது. நண்பன் முகத்தில் ஈயாடவில்லை.

– இரா. பாலமுருகன்,
ஆதம்பாக்கம்.

என்ன செய்ய வேண்டும்?




● ப. காயத்ரி, சிதம்பரம்.

? தினமும் காலையில் இட்லியைச் சிற்றுண்டியாக உட்கொள்வது குழந்தைகளுக்கு நல்லதா? எவ்வகையில்?

! இட்லியில் அரிசியும், உளுந்தும் உள்ளன. இட்லியைத் தொட்டுக் கொள்ள உதவும் சட்னியில் பொரி கடலையும் தேங்காயும் சேருகின்றன; சாம்பாரில் பருப்பு மற்றும் சில காய்கறிகள் சேரும். குழந்தைக்குத் தேவையான மாவுச் சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, வைட்டமின்கள்,

இட்லி சாப்பிடுவது நல்லதா?



தாதுச் சத்துகள் ஆகியவை இட்லி + சட்னி + சாம்பார் கலவையில் கிடைத்து விடும். எப்படி என்கிறாயா? அரிசியில் மாவுச் சத்து உள்ளதா! உளுந்தும், பருப்பும் புரதச் சத்தைக் கொடுத்து விடும். தேங்காயில் கொழுப்புச் சத்து உண்டு. காய்கறிகள் மூலம் வைட்டமின்களும் தாதுச் சத்துகளும் கிடைத்து விடும். ஆக மொத்தத்தில் இட்லி நல்ல சத்துணவுதான் என்பதில் சந்தேகமில்லை! எனவே, குழந்தைகளுக்கு இட்லியை தினமும் சிற்றுண்டியாகத் தருவது நல்லதுதான்.

● பானுபிரியா, கோவை – 28.

? நான் ஏதாவது காரமான உணவைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாகிறது. இதை 'அல்சர்' என்கிறார்கள். இந்த அல்சர் உண்டாகக் காரணம் என்ன? இதைப் போக்க என்ன வழி?



! முக்கியமான காரணத்தை நீயே கூறி விட்டாய். அதுதான், கார உணவு! அடுத்தது நேரந்தவறிய உணவு, அதிக உணவு, மசாலா நிறைந்த உணவு, அசைவ உணவு. இன்னொன்று அடிக்கடி சாப்பிடப்படும் வலி நிவாரணி மாத்திரைகள். புகை பிடிப்பது, மது அருந்துவது போன்ற தீய பழக்கங்களும் அல்சருக்கு வழிவகுக்கும். 'ஹைற-பைலோரி' (H-PYLORI) என்ற கிருமி இரைப்பையில் குடிபுகுந்தால் அல்சர் நிச்சயம். மேற்சொன்ன காரணங்களைத் தவிர்ப்பதே அல்சரைப் போக்க சிறந்த வழி.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? 'பைபாஸ் சர்ஜரி' என்றால் என்ன, டாக்டர்? இது எதற்காக செய்யப்படுகிறது?

! பைபாஸ் அறுவை சிகிச்சை (BYPASS SURGERY) மாரடைப்புக்குச் செய்யப்படுகிறது. மாரடைப்பு என்பது என்ன? இருதயத் தசைகளுக்கு ரத்தம் கொண்டு செல்லும் மிகச் சிறிய இருதயத் தமனிகள் அடைத்துக் கொள்வதால் வருவதுதான் மாரடைப்பு. ஒருமுறை மாரடைப்பு வந்தவர்களுக்கு மறுபடியும் அது வந்து விடக் கூடாது என்பதற்காக இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. எப்படி? இருதயத் தசையில் அடைபட்டுப் போன ரத்தக் குழாயை அப்படியே விட்டு விட்டு, புதிய ரத்தக் குழாய் ஒன்றை இருதயத்தில் பொருத்தி, 'மாற்று வழி'யில் ரத்தம் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதுதான் இந்தச் சிகிச்சையின் முக்கிய நோக்கம். இந்தப் புதிய பாதைக்குக் காலில் உள்ள சபீனஸ் சிரைக் குழாய் பயன்படுத்தப்படுகிறது.

டாக்டர் கு. கணேசன்

'ஆஞ்ஜைனா (ANGINA) என்கிற வகை மாரடைப்பு வந்தவர்களுக்கு மறுவாழ்வு தருகின்ற அற்புதமான சிகிச்சை இது.

● டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.

? டாக்டர், நாம் குழந்தைப் பருவத்திலிருந்து முதியவர்கள் ஆன பிறகும் பல ஊசிகள் போட்டுக் கொள்கிறோம். அதில் சில தடுப்பூசிகள் மட்டும் என்றும் மாறாத தழும்புகளை உண்டாக்கக் காரணம் என்ன?

! சில தடுப்பூசிகள் போட்ட இடத்திலேயே வினைபுரியக் கூடியவை. அவ்வாறு வினைபுரியும் போது நோய்த் தடுப்பாற்றலைத் தரக்கூடிய எதிர் உயிரிகளை (ANTIBODIES) அங்கு உற்பத்தி செய்து உடலுக்குள் அனுப்புகின்றன. இந்த முக்கியமான பணியின் விளைவாக தடுப்பூசி போட்ட இடத்தில் தழும்புகள் ஏற்படுகின்றன. மற்ற ஊசிகளோ நேரடியாக ரத்தத்தில் கலந்து தங்கள் பணியை நிறைவேற்றுகின்றன.



● காழி. ஆர். சீதாராமன், தென்பாதி.

? தீப்பிடித்து எரிந்து வெந்த நிலையில் உள்ளவர்களுக்கு தண்ணீர் கொடுத்தால் உயிர் பிரிந்து விடுமா? இதைத் தவிர்க்க வேறு வழி உண்டா?

! தீப்பிடித்து வெந்த நிலையில் உள்ளவர்களுக்கு சுய நினைவு இருந்தால் தாராளமாகக் குடிக்கத் தண்ணீர் கொடுக்கலாம். தவறில்லை. சுயநினைவின்றி இருக்கும் போது குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் தண்ணீரை அவர்களால் விழுங்க இயலாது. மூச்சுக் குழாய்க்குள் தண்ணீர் சென்று சுவாசத்தை நிறுத்திவிடும். இதற்கு மாற்று வழி, சிரைக் குழாய் (VEIN) வழியாக குளுக்கோஸ் சலைன் மற்றும் ரிங்கர்ஸ் லேக்டேட் போன்ற நீர்மங்களை ஏற்றுவதுதான்.

● ஏ.பி. விசாலாட்சி, தஞ்சை.

? டி.பி. என்பது என்ன? இது தொற்றுநோயா? ஆரம்ப அறிகுறிகள் என்னென்ன?

● சி.பி. ராஜா, தாகக்குப்பம்.

? என் வீட்டுக்கு அருகே ஒருவருக்கு காசநோய் உள்ளது. இதைத் தீர்ப்பது எப்படி?

! காசநோய்க்கு ஆங்கிலத்தில் 'டியூபர் குலோசிஸ்' (TUBERCULOSIS) என்று பெயர். இந்த வார்த்தையின் சுருக்கம்தான் T.B. இது தொற்று நோய்தான். சந்தேகம் வேண்டாம்.

தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேல் இருமல் இருந்தால் அது காச நோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்க வாய்ப்பு உண்டு. அத்துடன் மாலை நேரத்தில் வருகின்ற காய்ச்சல், பசியின்மை, உடல் எடை குறைவது, நெஞ்சு வலி, சளியில் ரத்தம் வெளியேறுவது போன்ற அறிகுறிகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளித் தெரியும். இவை பெரியவர்களுக்கு! குழந்தைகளுக்கு இந்த நோய் வந்தால் கழுத்தில் நெறி கட்டும். இரவில் காய்ச்சல் வரும். குழந்தை சோர்வாக இருக்கும். எடை குறையும். இந்த நோயைப் போக்க 6 மாதங்களிலிருந்து ஒரு வருடம் வரை சிகிச்சை எடுக்க வேண்டும். காசநோயை பூரணமாகக் குணமாக்கக் கூடிய சக்திவாய்ந்த மருந்துகள் கிடைக்கின்றன. மருத்துவர் யோசனைப்படி அவற்றைத் தொடர்ந்து சாப்பிட வேண்டியது மிக முக்கியம்.



ஏன் வரவில்லை?

விஜய்க்கு கடுமையான காய்ச்சல். டாக்டரிடம் காண்பிக்க, அவனை மருத்துவமனையில் உடனே சேர்க்கச் சொன்னார்.

ரத்தப் பரிசோதனை செய்து பார்த்ததில் விஜய்க்கு மலேரியா என்று கண்டறியப்பட்டது.

விஜய்யை மருத்துவமனையில் சேர்த்திருக்கும் விஷயம் அவன் வகுப்பில் பரவியது.

மாலை பள்ளி விட்டதும் மாணவர்கள் சிலர் அவனை வந்து பார்த்தார்கள்.

"மூர்த்தி! கோபி ஏன் வரலை?" என்று கேட்டான் விஜய்.

"அவன் ஊருக்குப் போயிருக்கான். நாளைக்கு தான் பள்ளிக்கே வருவான்" என்றான் மூர்த்தி.

மறுநாள் பள்ளிக்கு வந்த கோபியிடம் விஜய்யின் உடல்நிலை சரியில்லாத விவரத்தைக் கூறினான் சங்கர். மிகவும் வருந்தினான் கோபி.

"வாடா மணி ஒன்பதுதான் ஆகுது. விஜய்யைப் பார்த்துவிட்டு வந்துடலாம்" - சங்கர்.

"வேண்டாம்டா. பள்ளி விட்டதும் போகலாம்" என்றான் கோபி.

"பள்ளிக்கூடத்துக்கு லேட்டாகுமேன்னு பயப்படறியா? சீக்கிரமா வந்துடலாம். பக்கத்தில்தான் இருக்கு அந்த மருத்துவமனை."

"நான் சொல்வதைக் கேள். சாயங்காலம் போகலாம்" என்று மீண்டும் அதே பதிலைக் கூறினான் கோபி.

"உன் நெருங்கிய நண்பன். உனக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறான். அவனைப் பார்க்க வர உனக்கு மனமில்லை. சரி! நான் போயிட்டு வர்றேன்" என்று கூறிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தான் சங்கர்.

சங்கர் பேசியதைக் கேட்ட கோபிக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது.

மதிய உணவு இடைவேளை. சங்கர் நண்பர்களிடம் வந்தான்.


"சங்கர்! விஜய் எப்படி இருக்கிறான்?" என்றனர் நண்பர்கள்.

"நான் போய் விஜய்யைப் பார்த்தேன். அவனுக்கு ரொம்ப சந்தோஷம்... சிலர் நெருங்கிய நண்பராகப் பழகியும் தன்னை இன்னும் பார்க்க வரவில்லையே என்று வருத்தப்பட்டான்" என்றான் சங்கர் கோபியைப் பார்த்தபடியே.

"சங்கர்! மருத்துவமனையில் மாலைதானே நோயாளிகளைப் பார்க்க அனுமதிப்பார்கள்... நீ எப்படி காலை ஒன்பது மணிக்கு அவனைப் பார்க்க முடிந்தது?" என்று கேட்டான் கோபி.

"அங்கே தான் அய்யாவோட மூளை வேலை செய்தது. வாட்ச்மேன் இது பார்வையாளர் நேரம் இல்லை. உள்ளே விட முடியாதுன்னு சொன்னார். நான் என் முகத்தை பாவமாக வைத்துக் கொண்டு நண்பனுக்கு உடம்பு சரி இல்லேன்னு தந்தி வந்தது. உடனே பார்க்க வேண்டும் என்றேன். எங்கே தந்தியைக் காட்டு என்றார் வாட்ச்மேன். நான் அப்படி இப்படி தேடுகிற மாதிரி பாவனை செய்து விட்டு தந்தியை மறந்து வீட்டிலேயே வைத்து விட்டேன் என்றேன் உருக்கமாக... சரி... சரி... போ என்று உள்ளே விட்டு விட்டார்" என்றான் சங்கர்.

பி.ஆர். பார்த்தசாரதி



"சங்கர் உன் திறமையே திறமைதான். இப்படி ஏதாவது பேசி செவ்வாய் கிரகத்துக்குள்கூட நீ நுழைந்து விடுவாய்" என்று மற்ற மாணவர்கள் கூற சங்கர் முகத்தில் ஏக சந்தோஷம்.

மாலை பள்ளி விட்டதும் மருத்துவமனைக்கு விஜய்யைப் பார்க்கச் சென்றான் கோபி.

விஜய்க்கு காய்ச்சல் கொஞ்சம் குறைந்திருந்தது.

கோபியைப் பார்த்ததும் விஜய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"சாரி விஜய்."

மெதுவாகத் திரும்பிய விஜய் "போதும்! என் உண்மையான நண்பன் யார் என்று தெரிந்து விட்டது. நீ சுயநலக்காரன் என்று புரிந்து கொண்டு விட்டேன்" என்றான் விஜய்.

கோபிக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது. விஜய் பல நேரங்களில் இவனுக்கு உதவி உள்ளான். கோபியும் அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறான்.

"சாரி விஜய்! நான் காரணமாகத்தான் உன்னைப் பார்க்க வரவில்லை..."

"என்ன காரணம்... பள்ளிக்கூடத்திற்கு லேட்டாகி விடும் என்றுதானே... சங்கர் கூட என்னை வந்து பார்த்துவிட்டு பள்ளிக்கூடத்திற்கு சரியான நேரத்திற்கு வந்திருப்பானே."


"ஆமாம் விஜய்! ஆனால் என் காரணம் வேறு. உடல் நிலை சரி இல்லாதவர்களுக்கு ஓய்வு தேவை. தவிர காலை நேரத்தில் டாக்டர்கள் நோயாளிகளைப் பார்க்க வருவார்கள். உனக்கு மட்டுமல்ல... பார்வையாளர் நேரம் தவிர மற்ற நேரங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளைப் பார்க்க வந்தால் அவர்களையும் பாதிக்கும். உனக்கும் மற்றவர்களுக்கும் இடைஞ்சலாகவும் மருத்துவமனைப் பணிகளுக்கு இடையூறாகவும் இருக்கக் கூடாது என்றே நான் வரவில்லை" என்றான் கோபி.

விஜய் கோபியையே பார்த்துக் கொண்டிருந்தான். "உன்னைப் பற்றி நன்றாகத் தெரிந்தும் தவறாகக் கருதி விட்டேன்" என்று கோபியின் கைகளைப் பிடித்துக் கொண்டான் விஜய்.

"உன் பெயர், ஊர் சொல்லு?"


"சிவ. காசி, சிவகாசி."

ப. சரவணமுத்து



பிருந்தாவனம்

முதல் தமிழ்ப் புத்தகம்




கி.பி. 1557 வரை இந்தியாவில் அச்சடிப்பு முறை தொடங்கப்படவில்லை. 1554-ஆம் ஆண்டு மூன்றாம் ஜான் என்னும் போர்ச்சுகிசிய மன்னர் காலத்தில் லிஸ்பன் நகரில் முதன் முதலாக ஒரு தமிழ்ப்புத்தகம் அச்சடிக்கப்பட்டது. அதன் பெயர் 'லூசோ தமிழ்ச் சமய வினா விடை' என்பதாகும். அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த வின்சென்ட் நசரேத், தாமஸ் தாகிரஸ், ஜார்ஜ் கார்வலோ என்னும் போர்ச்சுகிசிய பாதிரிமார் மூவர் இதை போர்ச்சுகிசிய மொழியிலிருந்து மொழி மாற்றம் செய்தனர். இப்புத்தகத்தில் தமிழ் எழுத்துகள் ரோம வரி வடிவப்படி (ரோமன் லெட்டர்ஸ்) அச்சடிக்கப்பட்டது. அப்புத்தகம் இந்தியாவில் அச்சடிக்கப் படவில்லை. மேலை நாட்டில் தான் அச்சடித்து வெளியிடப் பட்டது. அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதி தற்பொழுது லிஸ்பன் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது. (புத்தகங்கள் பிறந்த கதை என்ற நூலில் இருந்து)

— எல். கோபால கிருஷ்ணன்

பாலைவனத்தில் மீன்

பாலைவனம் என்றதும் நமக்கு ஞாபகத்திற்கு வருவது மணற் பரப்பு; கடுமையான வெயில்; பசுமையைக் காண்பது கடினம் என்பதுதான். அதிலும் ஆப்பிரிக்காவிலுள்ள உலகத்திலேயே மிகப்



பெரிய பாலைவனமான சகாராவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அத்தனை வறட்சியானது. அங்கும் மீன்கள் வாழ்கின்றன என்றால் நமக்கு ஆச்சரியமாகத் தானே இருக்கும்.

சகாராவின் சில பகுதிகளில் மணலுக்கடியில் நீரூற்றுகள் உள்ளன. அந்த ஊற்றுகளில் மீன்கள் வாழ்வதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆதாரம்: 'பொது அறிவுத் தேன்கூடு'

ஆர். உதயகுமார், சென்னை-1.

கொரில்லா




மனிதக் குரங்குகளில் மிகப் பெரியது கொரில்லா. ஆறடி உயரம் இருக்கும்,. 200 கிலோ எடை. ஆயுட்காலம் 30 வருடங்கள். தாவர உணவையே உண்ணும். இரண்டு கால்களால் நடக்கும்.

ஆதாரம் : விசித்திர விலங்குகள்

— மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

ஸ்டாம்பு செய்திகள்

பீட்டர் இஸ்பிர் பிரபல நாட்டுப் புறக் கதை எழுத்தாளராவார். அவரது கதைகளில் ஒன்றான 'அரசரும் இளவரசியும்' என்ற கதையில் வரும் ஒரு காட்சியை 1987ஆம் வருடம் ருமேனியா நாடு வெளியிட்ட ஒரு ஸ்டாம்பில்



காணலாம்.

மஞ்சள் ஆட்டுக்குட்டி, வெலியன்ட் இளவரசர் மற்றும் அனாதை அன்னி போன்ற நகைச்சுவை கதைகள், துணுக்குகள் மற்றும் கார்ட்டூன்கள் போன்றவைகளின் படங்கள் கொண்ட இருபது ஸ்டாம்புகளை 1.10.95 அன்று அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

லூயி ஆர்ம்ஸ்டிராங், ஜேம்ஸ் ஜான்சன், எர்ரோல் கார்னர் போன்ற பத்து பிரபல ஜாஸ் இசைக் கலைஞர்களை கவுரவித்து 16.9.95 அன்று அமெரிக்கா பத்து ஸ்டாம்புகளை வெளியிட்டுள்ளது.

–டி. சுப்பையா,
கோவை.

ஹிட்லரைப் போல்...

ஜெர்மானிய சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லரைப் போல் ஒருவர் இருந்தார். அவர் பெயர் அல்ஃப்வான் பேட்டோ. இவரும் ஹிட்லர் வாழ்ந்த



காலத்தில் ஆஸ்திரியா நாட்டில் வாழ்ந்தார். இவரை ஹிட்லர் என கருதி 27 முறை கைது செய்துள்ளனர். இவர் ஹிட்லர் அல்ல என்பதை நிருபிக்க உதவியது இவரின் நீலக் கண்கள்தான்.

தகவல்: அற்புதங்கள் ஆயிரம்.

எம்.சி. ராஜேஷ், வத்தலக்குண்டு.

பகிஷ்காரம்

காப்டன் பாய்காட் என்பவர்



அயர்லாந்தில் ஒரு பண்ணையின் உரிமையாளர். ஒருசமயம் விவசாயிகள் அவர் சொற்படி நடக்க மறுத்தனர். வியாபாரிகள் அவருக்குத் தங்கள் பொருட்களை விற்க மறுத்தனர். அதிலிருந்து பகிஷ்காரம் செய்வதைக் குறிப்பிட பாய்காட் என்ற சொல் வழக்குக்கு வந்தது.

ஆதாரம்: 'சுவையான செய்திகள்'


– கே. ராஜேஸ்வரி,
ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவு
அரசு மேனிலைப்பள்ளி,
கோவிலூர்.

மோதிரம் யாருடையது?

த. ஜானகி

நீதிபதி சத்யசிலன் முன் வழக்கு வந்தது.

"மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! என் பெயர் நந்தன். நான் ஒரு வியாபாரி. என்னிடம் ஒரு வைரமோதிரம் இருந்தது. அது எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து. என் தாத்தாவின் தாத்தா காலத்து மோதிரம். என் தந்தை இறக்கும் சமயத்தில் அந்த மோதிரத்தை என்னிடம் கொடுத்தார். அவரின் ஞாபகார்த்தமாக அந்த மோதிரத்தை பத்திரமாக வைத்திருந்தேன். ஒரு மாதத்திற்கு முன் அந்த மோதிரம் காணாமல் போய் விட்டது. இதோ நிற்கிறானே... இவன் பெயர் மாயாண்டி. எங்கள் தெருவில்தான் இருக்கிறான். காணாமல் போன என்னோட மோதிரத்தை இவன்தான் போட்டுக் கொண்டிருக்கிறான். கேட்டால் தன்னுடையது என்று பொய் சொல்கிறான். தயவு செய்து தாங்கள் தான் என்னுடைய மோதிரம் எனக்கே கிடைக்க உதவி செய்ய வேண்டும்" என்று தன் இரு கரங்களையும் கூப்பி பணிவுடன் வேண்டினார் நந்தன்.



நந்தன் கூறியவற்றை நீதிபதி சத்தியசீலன் கவனமாகக் கேட்டார். பிறகு மாயாண்டியைப் பார்த்து, "நீ என்ன சொல்கிறாய்?" என்று வினவினார்.

"நந்தன் கூறுவது அத்தனையும் பொய். உண்மையிலேயே இது என்னுடைய மோதிரம். என் பாட்டி எனக்கு அளித்த மோதிரம். எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து. இதை நான் அதிகமாக அணிவது கூட கிடையாது. இது எனக்கு மிகவும் அதிர்ஷ்டமான மோதிரம். போன வாரம் என் பாட்டியின் நினைவு நாள் வந்தது. அன்று அணிந்து கொண்டேன். அதிலிருந்து தொடர்ந்து போட்டுக் கொண்டு இருக்கிறேன். இந்த நந்தன் என்னவோ இது தன்னுடை மோதிரம் என்று சாதிக்கிறான். ஆகவே தாங்கள் தான் எனக்கு நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி முடித்தான் மாயாண்டி.

''எங்கே.. மோதிரத்தைக் கொடு



பார்க்கலாம்'' என்று நீதிபதி கூறவே மாயாண்டி தன் விரலிலிருந்து கழற்றிக் கொடுத்தான்.

நீதிபதி மோதிரத்தை வாங்கி உற்றுப் பார்த்தார். பழைய காலத்து மோதிரமாக இருந்தாலும் பார்க்க அழகாக இருந்தது. முகப்பில் பதிக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த பெரிய வைரக் கல் ஊதா வண்ணத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தது

''நந்தன்! இந்த மோதிரம் உன்னுடையதுதான் என்பதற்கு என்ன அடையாளம்?'' என்று கேட்டார் நீதிபதி.

"என்னுடைய மோதிரம் தங்கத்தினால் செய்யப்பட்டது. முகப்பில் ஒரே ஒரு பெரிய வைரக்கல் பதிக்கப்பட்டிருக்கும். அந்த வைரக்கல் ஊதா வண்ணத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்'' என்றார் நந்தன். நீதிபதி மாயாண்டியிடமும் இதே கேள்வியை கேட்க, மாயாண்டியும் அதே பதிலைக் கூறினான்.

மோதிரத்தின் அமைப்பை இருவருமே சரியான முறையில் கூறிவிட்டனர்.

ஒரு வினாடி யோசித்த நீதிபதி யார் குற்றவாளி என்ற உண்மையை ஒத்துக் கொள்ள நீங்கள் இருவருமே தயாராக இல்லை. அதனால் நான் நாளை என் அதிகாரிகள் மூலம் இந்த மோதிரத்தை ஏலத்தில் விற்க ஏற்பாடு செய்யப் போகிறேன். வரும் பணத்தில் ஆளுக்குப் பாதி பகிர்ந்து கொடுத்து விடுகிறேன். எனவே நீங்கள் நாளை மறுநாள் அதாவது

சனிக்கிழமை வாருங்கள். இப்பொழுது போகலாம்'' என்றார். பதில் பேசாது இருவரும் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

நீதிபதி சொன்னபடி சனிக்கிழமை நந்தனும் மாயாண்டியும் அவர் முன்பு வந்து நின்றனர்.

மாயாண்டியைப் பார்த்த நீதிபதி "ஏலம் விட்டதில் ஆளுக்குப் பாதி பணம் தருவதாகச் சொல்லியிருந்தேன் அல்லவா? ஏலத்தில் மோதிரம் ஆறாயிரம் ரூபாய்க்குப் போனதாக என் அதிகாரிகள் தெரிவித்தனர். அதனால் உன் பங்கிற்கான தொகை மூவாயிரம் இந்தா..." என்று கூறியபடி பணத்தைக் கொடுத்தார். மாயாண்டியும் தொகையைப் பெற்றுக் கொண்டான்.

மீதித் தொகை மூவாயிரத்தையும் நந்தனிடம் நீட்டினார். ஆனால் நந்தன் பணத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

"நீதிபதி அவர்களே! இந்த மோதிரம் ஏலத்தில் நாலாயிரம் ரூபாய்க்குத்தான் விற்கப்பட்டது. அப்படி இருக்க தாங்கள் ஆறாயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டதாகக் கூறுகிறீர்களே! தாங்கள் ஏன் நஷ்டப்படுகிறீர்கள்?'' என்று பணிவோடு வினவினார்.

"அந்த மோதிரம் நாலாயிரம் ரூபாய்க்குத்தான் விற்கப்பட்டது என்று உனக்கு எப்படி தெரியும்?''– நீதிபதி கேட்டார்.

"என்னை மன்னித்து விடுங்கள். மாறுவேடத்தில் ஏலம் போட்ட இடத்திற்கு வந்து அந்த மோதிரத்தை வாங்கியதே நான்தான். ஏனெனில் அந்த மோதிரம் என்னோட பரம்பரைச் சொத்து. என்னால் அது எங்கள் குடும்பத்தை விட்டுப் போக எனக்கு விருப்பம் இல்லை. எத்தனை விலையாக இருந்தாலும் வாங்கிவிட நினைத்தேன். ஏலம் போடும் இடத்திற்கு மாயாண்டி வந்திருப்பதாக என் வேலைக்காரன் சொன்னான். மறுபடியும் ஏதாவது வம்பு செய்வான் என்று எண்ணி நான் மாறுவேடத்தில் அங்கு வந்து, மோதிரத்திற்குச் சொந்தக்காரன் நான்தான் என்று காட்டிக் கொள்ளாது ஏலத்தில் எடுத்தேன்'' என்றார் நந்தன்.

''கேட்டாயா மாயாண்டி! உண்மையிலேயே அந்த மோதிரம் உன்னோட பரம்பரைச் சொத்தாக இருந்திருந்தால், எப்படியாவது ஏலத்தில் அதை எடுக்க நீ முயற்சியாவது செய்திருப்பாய். ஏலம் போடும் இடத்திற்கு வந்த நீ எந்த விலையும் கேட்காது பேசாமல் உட்கார்ந்திருந்தாய். நாலாயிரம் ரூபாய்க்குத்தான் விற்கப்பட்டது என்று உனக்குத் தெரியும். அப்படி இருக்க நான் அதிகப்படியாக விற்றது என்று கூறி கொடுத்த பணத்தை எதுவும் சொல்லாமல் வாங்கிக் கொண்டு விட்டாய். இந்தப் பணத்திற்கே நீ ஆசைபடுகிறபோது, மோதிரத்திற்கு ஏன் ஆசைபட்டிருக்கமாட்டாய்? ஏலம் போட்ட இடத்திற்கு நானும் மாறு வேடத்தில் வந்து எல்லாவற்றையும் கவனித்தேன்'' என்றார் நீதிபதி.

''ஐயா! வைர மோதிரத்தின் மீது ஆசைபட்டு, நந்தன் ஆற்றங்கரையில் குளிக்கும் சமயத்தில் கழற்றி வைத்திருந்தபோது யாருக்கும் தெரியாமல் எடுத்து விட்டேன். இந்தாருங்கள் பணம். என்னை மன்னித்துவிடுங்கள்''– என்று வருத்தமான குரலில் கூறினான் மாயாண்டி.


''குற்றவாளியான உனக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கிறேன். அந்தப் பணம் இந்த நகரத்து பள்ளிக் கூடத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்கப் பயன்படும்'' என்று கூறிய நீதிபதி நந்தனைப் பார்த்து,

"உன் மோதிரத்தை திரும்பிப் பெற நீ ஏலத்தில் செலவழித்த பணம் நாலாயிரம் இதோ!'' என்றார்.

"நன்றி ஐயா''– நல்ல முறையில் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை வணங்கியபடி பணத்தை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார் நந்தன்.


''உங்க அப்பா பேரு என்ன?''
''ஜான்!''
''உன் பேரு...?
''ஜான் 'சன்'!''

– பொறையாறு கங்கா கணேசன்




பறக்கும் மீன்

பாண்டிச்சேரியிலிருந்து நான்காம் வகுப்பு படிக்கும் எஸ். சுனேதாபேகம் மீன் செய்து காட்டும்படி எழுதியிருந்தார். அவருக்காக சுலபமாக செய்து பார்க்கும்படியான 'பறக்கும் மீன்' இந்த மாதம். சந்தோஷமா சுனேதா!



1. செவ்வக வடிவத்தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

2. படத்தில் காட்டியுள்ளபடி தாளை வெட்டுங்கள்.





3. வெட்டப்பட்ட நீளமான தாளில் படத்தில் காட்டியபடி வலப் பக்கம் மேற்புறமும் இடப்பக்கம் கீழ்ப்புறமும் சிறிது வெட்டுங்கள்.


4. படம் 4,5ல் காட்டியபடி வெட்டப்பட்ட பகுதி இரண்டையும் ஒன்றோடு ஒன்று சேரும்படி பொருத்துங்கள்.

6. இதோ மீன் தயாராகி விட்டது. இதை மேலிருந்து கீழ்நோக்கி விட்டால் சுழன்று சுழன்று அழகாகப் பறக்கும்.

அடுத்த இதழில் ஐரேணிபுரம் கே. ஜெனிபாவிற்காக முயல்.







நீங்கள் கால்பந்தாட்ட வீரராக விரும்புகிறீர்களா?

உங்களுக்கு சராசரி உயரமும் எடையும் இருந்தாலே போதும். சராசரி என்றால் – 5 அடி 9 அங்குல உயரம்; 165 பவுண்ட் எடை.

கால்பந்தாட்டத்தில் முன்னேறி ஆடுபவர் (Forward), நடுக்கள ஆட்டக்காரர் (Mid Fielder), அரணாளி (Defender), இலக்காளி (Goalie) என நால்வகை வீரர்கள் இருக்கிறார்கள். ஏறக்குறைய ஒன்றரை மணிநேரம்



கால்பந்தாட்டம்

நடைபெறும் போட்டியில் நடுக்கள ஆட்டக்காரர் மட்டும் 10 கி.மீ. தொலைவுக்கு குறையாமல் ஓடிப் பந்தைப் பின் தொடர வேண்டியிருக்கும். எனவே நல்ல உடற்கட்டு உடையவராக கால்பந்தாட்டக்காரர் இருப்பது அவசியம். நோஞ்சான்கள் முதலில் உடம்பைத் தேற்ற வேண்டும்!

ஆட்டக்காரர் ஒல்லியாகவும், அதே சமயம் தசைக்கட்டு உடையவராகவும் இருக்க வேண்டும். தொடையிலுள்ள தசைநார்களும், உட்தசைகளும் வலுவாக இருக்க வேண்டும். அப்போதுதான் சிறப்பாக ஆடத் தேவையான வலுவும் சுறுசுறுப்பும் வேகமும் கிட்டும். ஆட்டக்காரர் உயரமாக இருந்தால் எடையும் கூடுதலாகவே இருக்கும். அவர் உடலைத் திருப்பவும், ஓட்டம் எடுக்கவும் சிரமமாக இருக்கும். ஆகவே நடுத்தர உயரமுள்ளவரே கால்பந்தை நல்ல முறையில் பின்தொடர ஏற்றவர். இவர்கள் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும் இருப்பது அவசியம்.

முன்னேறிச் செல்லும் ஆட்டக்காரர்கள் பந்தடிக்க ஒன்று திரள்வார்கள். சிறுதொலைவிலேயே இரண்டு அல்லது மூன்று அடி முன் வைத்து பந்தைத் தாக்க முயல்வார்கள். இவ்வாய்ப்பு கிட்ட வேண்டுமென்றால் உயரம் அதிகம் இருக்கக் கூடாது.

கால்பந்து, பொதுவாக தரையை ஒட்டியும் அதிகமாக மேல் எழும்பாமலும் உதைத்து அடிக்கும் ஆட்டம். நன்கு மோதி எழுவதற்கும் விரைந்து செல்வதற்கும் ஏற்றவகையில் பந்து உருவாக்கப்படுகிறது. ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் அங்கீகாரம் பெற்ற பந்திற்கு 'க்வெஸ்ட்ரா' (Questra) எனப் பெயர். இது தோலால் செய்யப்படாமல் பாலியூரிதேன் என்ற மீள்ரப்பர் வகையால் செய்யப்படுகிறது. சில வேளைகளில் பந்து வினாடிக்கு ஆறு முறை சுழல்வதும், 90° வளைந்து செல்வதும் உண்டு!

கால்பந்தாட்டத்திற்கு என வடிவமைக்கப்பட்ட காலணிக்கு 'ப்ரிடேட்டர்' (Predator) என்று பெயர். பந்தை உதைத்து அடிப்பதற்கு காலணி அவசியமன்றோ! இதனையும் சில ரப்பர் கூட்டுப் பொருள்களால் உருவாக்குகிறார்கள். காலணியிலிருந்து ஆற்றல் முழுமையாக பந்துக்கு பரிமாறப்படுவதற்கு இங்கு முழுக்கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

FRANCE 98
WORLD CUP





பிரேசில் வீரர் எட்சன் அராண்டேஸ் டு நாசிமென்டே (பெலே) கால்பந்தாட்ட வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெறுகிறார். 1958, 1962, 1970 ஆம் ஆண்டுகளில் மூன்று உலகக் கோப்பைகளை இவர் கைப்பற்றினார்.

மூன்று முறை உலகக் கோப்பையை கைப்பற்றிய ஒரே வீரர் பிரேசிலின் பெலே.


கால்பந்தாட்டத்தில் பந்தின் சுழற்சியிலும், ஆட்டக்காரரின் காலணிகளிலும் கூட கவனம் செலுத்தப்பட்டு உருவாக்கப்படுகிறது. ஆட்டக்காரரின் திறமையும் ஒருங்கிணைப்பும் வெற்றி தேடித் தருகிறது.

ரோமாரியோ திரும்பி விட்டார்; பிரேசிலின் வெற்றி வாய்ப்பு எப்படி?

1994 உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தில் கட்டுக்கோப்புடன் ஆடி, ஒருங்கிணைந்து குழுவாகச் செயல்பட்ட பிரேசில் அணியே கோப்பையை வென்றது. இத்தாலி அணியை 3-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இவ்வெற்றியின் மூலம் நான்கு முறை உலகக் கோப்பையை வென்ற ஒரே நாடு என்ற சிறப்பை பிரேசில் பெற்றது. ஆரம்பம் முதலே சுறுசுறுப்புடனும் கோப்பையை வெல்லும் வேட்கையுடனும் ஆடிய பிரேசில் வென்றதில் வியப்பேதும் இல்லை. ரோமாரியோ, பெபேடோ, டுங்கா, ரஃபேல் ஆகியோர் மிகச் சிறப்பாக ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்கள்.



ஆனால் இந்த ஆண்டு பயிற்சியின் போது காயமடைந்த ரோமாரியோ பிரேசிலுக்குத் திரும்பி விட்டார்.



பிரேசில் மக்கள் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்கள். இருப்பினும் பிரேசில் அணி மனந்தளராது இறுதிவரை போராடி கோப்பையை மீண்டும் கைப் பற்ற முயலும். ரேனால்டோ என்ற 21 வயது இளம்புயல் 1996, 1997ஆம் ஆண்டுகளில் உலகின் சிறந்த ஆட்டக் காரராகத் திகழ்ந்தவர். அவர் அணியில் இருப்பது கூடுதல் பலமே. ரோமாரியோ உலகக் கோப்பையின் போது 5 கோல்களைச் சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்பெயின், அர்ஜென்டினா ஆகிய நாடுகள் வலுவாக உள்ளன. போட்டியை நடத்தும் பிரான்சும் முனைப்புடன் இருக்கிறது. ஆப்பிரிக்க நாடான நைஜிரியாவில் இளம் வீரர் பலர் துடிப்புடன் இருக்கின்றனர். அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் இவர்களுக்கே உரித்தானது. அமெரிக்கா, சவுதி அரேபியா, ஈரான், கேமரான் ஆகிய நாடுகளும் களத்தில் உள்ளன. இந்தியா இதுவரை சாம்பியன்ஷிப் தகுதி பெறாததில் நமக்கு வருத்தமே!

கால்பந்தாட்டம் தோன்றியது எப்படி?

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சீனா, ஜப்பான், எகிப்து நாடுகளில் 'சாக்கர்' என்றழைக்கப்படும் இக்கால் பந்தாட்டம் தோன்றியிருக்கக் கூடும் என்று கருதுகின்றனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ரோமானியர்கள் 'harpastum' என்ற கால்பந்தாட்டத்தை ஆடினர். படையெடுப்புகளின் விளைவாக இவ்வாட்டம் அட்லாண்டிக் பிரதேசத்தைச் சென்றடைந்தது.

நவீன கால்பந்தாட்டம் 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் பள்ளிகளில் வளர்ந்தது.

Federation Internationale de Football Association (FIFA) அமைப்பு உருவாகியது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகக் கோப்பை கால்பந்தாட்டம் 1930 முதல் நடைபெற்று வருகிறது. 1998 ஜூன் 10 முதல் நடைபெறும் உலகக் கோப்பை போட்டிக்கு 172 நாடுகளில் 32 நாடுகளே தகுதி பெற்றிருக்கின்றன. ஜூலை 12ஆம் தேதி இறுதிப் போட்டி பாரிஸ் நகரில் 400 மில்லியன் டாலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரங்கில் நடைபெறுகிறது.

உலகக் கோப்பை கால்பந்து டேட்டா

★ இதுவரை நடைபெற்ற அனைத்து உலகக் கோப்பை போட்டிகளிலும் பங்கு பெற்ற ஒரே நாடு – பிரேசில்.

★ ஜெர்மனி, பிரேசில், அர்ஜென்டினா, இத்தாலி, இங்கிலாந்து, உருகுவே ஆகிய ஆறு நாடுகளே 1994 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிகளில் கோப்பையை வென்றுள்ளன.

– விளையாட்டுப் பையன்





முகமூடி அணிந்து...

✉ நான் மரமேறி விளையாடுவேன். ஜூன் மாத கோகுலத்தைப் படித்ததிலிருந்து அக்கா என்னை 'மொரொக்கோஸியா' என்று கூப்பிடுகிறாள். என் அக்காவை மிரள வைக்க 'முகமூடி' மிகவும் உபயோகமாக இருக்கிறது.

சு. செனம்யாயனி,
நான்காம் வகுப்பு,
ஜான்சன் ஆங்கிலப் பள்ளி,
தூத்துக்குடி – 1

✉ எங்களுக்கு பல நல்ல தகவல்களை அளிக்கும் கோகுலத்தின் விலை ஏறினாலும் எங்கள் பெற்றோரிடம் கூறி தொடர்ந்து வாங்குவோம். எங்களுக்கு பயனுள்ள புத்தகம் கோகுலம் மட்டுமே!

பா. சத்யா,
பெருந்தலையூர்.

✉ போராட்டம், விறுவிறுப்பு, திருப்பு முனைகளுடன் சுவாரஸ்யமாக வெளி வந்து கொண்டிருக்கிறது. 'ஒன்பதாம் வீடு' தொடர்கதை.

இன்றைய கல்விச் சூழலில் பெற்றோர்களின் மனநிலையையும் என் போன்ற மாணவர்களின் மனநிலையையும், படம் பிடித்துக் காட்டுகிறது.

கண். ஸ்ரீராமுலு,
செம்பொன்னார் கோயில்,
நாகை மாவட்டம்.

✉ ஏழு அதிசயங்களில் ஒன்றான 'பிரமிட்' பற்றிய தகவலை வெளியிட்டு, அதன் அடுத்தப் பக்கம் 'எட்டாவது அதிசயம்' என்ற சிறுகதையை வெளியிட்டது மிகவும் பொருத்தமாக இருந்தது.

சக்தி. சரவணன்,
மோகனூர்,
நாமக்கல் மாவட்டம்.

✉ கோடை காலத்தில் எங்களின் மனக் களைப்பைப் போக்க, இதமான, சுவையான இளநீர் போன்றிருந்தது மே, ஜூன் இதழ்கள்.

பொன்.
மங்கையர்க்கரசி,
விருத்தாசலம்.

✉ பூவை. அமுதனின் 'ஓடும் இரயிலிலே' கதை மனதை மிகவும் கவர்ந்தது.

ராஜி ராதா,
பெல் டவுன்ஷிப்,
திருச்சி.

✉ கிளியின் பல வண்ணப்படங்கள் அற்புதம்! 'கற்றுக் கொடுத்தால் தவிர கிளி தானாக பேசாது' என்பதை விளக்கியிருந்தீர்கள்.

கே. பீட்டர்ராஜ்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீரங்கம்.

✉ 'இது உதவி இல்லையா?' கதை எந்தக் காலத்திலும் போர் அபாயத்தைத் தடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

மா. செல்வி,
ஏழாம் வகுப்பு,
சேலையூர்.

✉ 'தங்கம்' கட்டுரையில் சுவையான செய்திகள் பல இருந்தன.

சா. நூர் முகம்மது,
நாயக்கன்பாளையம்,
கோவை.

✉ எங்களுக்குத் தெரிந்த கைவினைப் பொருட்கள் செய்வது எப்படி என்று எழுதி அனுப்பலாமா?

ஐ.விஷ்ணு சுபா,
பத்தாம் வகுப்பு,
அரிசிப்பாளையம்,
சேலம் –9.

விஷ்ணு சுபா, இது உங்கள் பத்திரிகை. உங்கள் அனுபவங்கள், விமர்சனங்கள், கருத்துகள் என... நீங்கள் விரும்பும் அனைத்தையும் தாராளமாக எழுதி அனுப்பலாம்.

(ஆர்)

பிருந்தாவனக் கதையரங்கம்




நூறு பொற்காசுகளும் ஐம்பது சவுக்கடியும்...

கண்டுபிடித்தது யார்?

பொன்மலை அரசர் மிகவும் நல்லவர். யாராவது புதிதாக எதையாவது கண்டுபிடித்தால் உடனே அவரைப் பாராட்டி பரிசளிப்பார். ஒரு நாள் மரகதம் என்ற ஒரு கிழவி வடகத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்று கண்டு பிடித்தாள். அவள் கண்டுபிடித்ததை முதல் வேலையாக தன் தோழி மல்லிகாவிடம் காண்பித்தாள். பிறகு சிறிது வடகத்தை செய்து அரசவைக்கு எடுத்துச் சென்றாள்.

அரசரிடம் "அரசே நான் ஒரு புதிய பண்டத்தைச் செய்துள்ளேன். இதன் பெயர் வடகம்" என்று கூறி தான் செய்ததைக் காண்பித்தாள். மன்னர் திடுக்கிட்டு "இப் பொழுதுதானே ஒரு பாட்டி இதை எண் ணெய்யில் பொரித்து சுவைக்கத் தருகிறேன் என்று அந்த அறைக்குச் சென்றிருக்கிறாள். காவலர்களே அவளை உடனே அழைத்து வாருங்கள்" என்று ஆணை பிறப்பித்தார்.

காவலர் அழைத்து வந்த கிழவியைப் பார்த்து அதிர்ந்தாள் மரகதம். ஏனெனில் அது அவள் தோழி மல்லிகா. நம் உயிர் தோழியா நம்மை ஏமாற்றி விட்டாள்! மர கதத்தால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.



மன்னர் இருவரிடமும் "யார் இதை முதலில் செய் தது என்ற உண்மையைக் கூறுங்கள்" என்று மெது வாகக் கேட்டார். மிரட்டிப் பார்த்தார். ஆனால் உண்மை வெளி வரவில்லை. உடனே அரசர், "சரி இருவரும் வட கத்தைப் பொரித்து எனக்குத் தாருங்கள். யாருடையது நன் றாக இருக்கிறதோ அவருக் குப் பரிசு வழங்கப்படும்"

என்றார்.

இருவரும் வடகத்தைப் பொரித்து எடுத்து வந்தார்கள். இருவரது வடகமும் ஒரே சுவையாக இருந்தது. அரசர் சிறிது யோசித்தார். இன்னும் சிறிது வடகத்தைச் சாப்பிட்டவுடன் "சீ இந்த வடகத்தை யார் செய்தது? உண்மையைக் கூறுங்கள். உண்மையைக் கூறினால் கண்டு பிடித்தவருக்கு சவுக்கடி. இல்லையேல் இருவருக்கும் சவுக்கடி. எனக்கு இனிப்புதான் பிடிக்கும் என்று தெரியுமில்லை! புளிப்பும் உப்பும் சேர்த்த இந்தப் பண்டத்தை யார் கண்டுபிடித்தது? உண்மையைக் கூறுங்கள்" என்று கர்ஜித்தார்.

மல்லிகா படபடத்து, "இந்தப் பண்டத்தை நான் கண்டுபிடிக்கவில்லை. மரகதம் தான் கண்டுபிடித்து எனக்குக் கூறினாள். நான் பரிசுக்கு ஆசைப்பட்டு அதை உங்களிடம் நான் கண்டுபிடித்ததாகக் கூறினேன். என்னை மன்னியுங்கள் அரசே. எனக்கு பரிசும் வேண்டாம் சவுக்கடியும் வேண்டாம்" என்றாள். உடனே மரகதம், "அவள் கூறியது எல்லாம் உண்மைதான் அரசே! உங்களுக்குப் பிடிக்காத இந்தப் பண்டத்தைச் செய்து காட்டியதற்கு என்னை மன்னியுங்கள். நான் சவுக்கடியை ஏற்கிறேன்" என்றாள்.

உடனே அரசர், "உங்களிடமிருந்து உண்மையை வரவழைக்கத்தான் நாடகமாடினேன். வடகம் உண்மையில் நன்றாக இருந்தது. அமைச்சரே மரகதத்திற்கு நூறு பொற்காசுகளும் மல்லிகாவிற்கு ஐம்பது சவுக்கடியும் அளியுங்கள்" என்று ஆணை பிறப்பித்தார். மரகதம், "அரசே! நீங்கள் என் உயிர்த்தோழி மல்லிகா தெரியாமல் செய்த தவறை மன்னித்து அருளும்படி வேண்டுகிறேன்" என்று வேண்டினாள்.

அரசர் "இப்பொழுதுதாவது உங்கள் தோழியின் உண்மையான அன்பைப் புரிந்து கொண்டீர்களா?" என்றார் மல்லிகாவைப் பார்த்து. மரகதமும் மல்லிகாவும் நன்றி கூறிச் சென்றனர்.

— பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஷ்ரைன் வேளாங்கண்ணி பள்ளி,
தி. நகர், சென்னை.

பெரிய கஞ்சன்

பஞ்சமலையூர் ஓர் சிற்றூர். அவ்வூரில் மடைசாமி என்றொரு கஞ்சன் வாழ்ந்து வந்தான். ஏழ்மை நிலையில் அவன் வாழ்ந்தாலும் வாரம் ஒரு முறையேனும் அவனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள விநாயகர் கோயிலுக்குச் செல்வது வழக்கம். அக்கோயிலில் பூசாரி கிடையாது. எனவே அவரவர்களே தீபாராதனை காண்பிக்க வேண்டும். மடைசாமி ஒரு ரூபாய்க்கு கற்பூரம் வாங்கினால் மூன்று மாதத்தை அதிலே ஓட்டி விடுவான்! ஒரு நாள் வழக்கம் போல், சிறிது கற்பூரத்துடன் கோயிலுக்குச் சென்று தீபாராதனை செய்து கோயிலைச் சுற்றி வந்தான்.

அதே ஊரில் சடைசாமி என்ற கஞ்சன் இருந்தான். அவனும் இவன் மாதிரியே கோயிலுக்குச் செல்வான். ஆனால் கற்பூரத்துடன் செல்லாமல் மடைசாமி கற்பூரம் கொளுத்தும் வரை பார்த்துக் கொண்டிருந்து, அவன் கோயில் சுற்றச் செல்லும் போது இவனும் அவன் கொளுத்திய கற்பூரத்திலேயே சாமி கும்பிட்டுவிட்டு வந்து விடுவான்.

இவர்கள் இரண்டு பேரையும் மிஞ்சியவன்தான் உலக மகா கஞ்சன் மாடசாமி. அவர்கள் இரண்டு பேரும் கும்பிட்டு விட்டு சென்ற கற்பூரத்தில் தானும் கும்பிட்டுவிட்டு, அந்தக் கற்பூரத்தை அணைத்து தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு சென்று, அதையே வீட்டில் உள்ள சாமிக்கும் தீபாராதனை செய்து




வணங்கி விடுவான்!

— மா. நீ. கார்த்தியாயினி தேவி,
அரசினர் பெண்கள் மேல்நிலைப்
பள்ளி, செங்கம்.

தேவதையின் உதவி!

பனைக்குடியில் ஒரு மந்திரவாதி இருந்தான். அவனுக்கு கலா, மாலா என இரண்டு பெண்கள். கலா மந்திரவாதிக்கு பிரியமானவள். மந்திரவாதி அவனுக்குத் தெரிந்த மந்திரங்களை கலாவுக்குக் கற்றுக் கொடுத்தான். மாலாவை கொடுமை படுத்தினான். மாலா தன்னை ஏன் அப்பா கொடுமை படுத்துகிறார் என்று யோசித்தாள்.

ஒரு நாள் மந்திரவாதி காட்டு வழியே நடந்து செல்லும் போது பின் தொடர்ந்தாள் மாலா. அந்த மந்திரவாதி ஒரு கோவிலின் அருகே நின்றான். மாலா பார்த்துக் கொண்டிருந்தாள். எதற்கு அப்பா இங்கே நிற்கிறார் என்று



புரியவில்லை. மந்திரவாதி நான்கு மந்திரங்களைச் சொன்னான். உடனே அந்த இடத்தில் தேவதை தோன்றினாள். அந்த தேவதை மந்திரவாதியிடம், "என் மகளை நன்றாக வளர்க்கிறாயா" என்று கேட்டாள். உடனே மந்திரவாதி "ஒழுங்காக வைத்திருக் கிறேன் தாயே" என்று கூறினான். உடனே தேவதை மறைந்தாள். அந்த மந்திரவாதி திரும்பிப் பார்த்தபோது மாலா ஓடுவதைக் கண்டான். மந்திரவாதி மாலாவை அழிக்கத் திட்டம் போட்டான்.

மறுநாள் மந்திரவாதி தேவதையைச் சந்தித்த இடத்திற்குச் சென்றாள் மாலா. மந்திரவாதி சொன்ன மந்திரங்களையெல்லாம் சொன்னாள். உடனே தேவதை தோன்றினாள். "நீ யார்? என்னை அழைத்ததன் காரணம் என்ன?" என்று கேட்டாள் தேவதை. "தாயே என் பெயர் மாலா" என்று சொன்னாள். இதைக் கேட்ட அந்த தேவதைக்கு இடிவிழுந்தது போல இருந்தது. "மீண்டும் சொல். உன் பெயர் என்ன?" மீண்டும் சொன்னாள். "ஏன் இப்படி ஓடி வருகிறாய்" என்று கேட்டது தேவதை.

"என்னை மந்திரவாதி துரத்துகிறான்" என்றாள் மாலா.

"மந்திரவாதி இனி உன்னைத் தேட மாட்டான். உன்னைப் பற்றிய நினைவுகளை அழித்து விட்டேன்" என்றது தேவதை.

"நான் எங்கு செல்வேன்?" என்றாள் மாலா.

"பக்கத்து ஊரில் இருக்கும் முனிவரிடம் செல்; அவர் உனக்கு உதவுவார்."

"என் மேல் இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்களே, ஏன்?" என்றாள் மாலா.

"நீ சிறுமியாக இருந்தபோது இக் காட்டில் தனியாக அழுது கொண்டிருந்தாய். மந்திரவாதி நல்லவன் என நம்பி உன்னை வளர்க்கச் சொன்னேன்" என்றாள் தேவதை.

மாலா நன்றி கூறி முனிவரை நோக்கிக் கிளம்பினாள்.

— கே. ராமஜெயம், எட்டாம் வகுப்பு,
சுவாமி விவேகானந்தா
நடுநிலைப் பள்ளி,
கடப்பேரிக்குப்பம்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


தாய் குட்டியை அடைய வழிகாட்டுங்கள்!



கத்தரிக்காயில் ஓர் உருவத்தை வரையுங்கள்!




இந்த நான்கு அம்புகளைப் பயன்படுத்தி ஐந்து அம்புகளாக உருவாக்குங்கள்!




விடை கீழே

சர் சி.வி. இராமன் பிறந்த தினமாகிய பிப்ரவரி 28ம் நாள் தேசிய அறிவியல் தினமாகக் கொண்டாடப் படுகிறது.







Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



JOIN THE DIAMOND BOOK CLUB
AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

NEW AMAR CHITRKATHA

• Tales of Durga • Gandhari • Lokmanya Tilak • Ashoka
• Gopal The Juster • Freedom Struggle of India

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbat **Hyderabad:** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut